ஜூலை 08 - 14, 2007 July 08 - 14, 2007 பக்கங்கள் - 28 20.00

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

## பேச்சுக்கான சிக்கலை அவிழ்ப்பாரா போவர்?



## ஹக்கீமின் கடுப்புக்கு மங்களவின் மாத்திரை!

## சலித்துக் களைத்துப் போன விழிகளில் நம்பிக்கை ஒளி மங்கவில்லை!

இலங்கையில் எந்தநேரத்திலும் பெரும் போர் வெடிக்கலாம் என்று எதிர்பார்க்கப் பட்ட நிலையில் -

சமாதான முன்னெடுப்புகள், சமாதானப் பேச்சுக்கள் என்று செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்த முன்னெடுப்புக்களால் பயன் ஏற்படுமா? அதன் மூலம் அமைதியான சூழல் உருவாக்கப்படுமா? என்ற கேள்விகள் பலர் மட்டங்களிலும் எழுந்துள்ளன.

சமாதான முயற்சிகள் தொடர்பான அரசின் அறிவிப்புகள் இதய சுத்தியுடன் வெளிவந்துள்ளனவா அல்லது வெளிநாட்டு அழுத்தங்களைச் சமாளிப்பதற்கான தந்திரமான முயற்சியா என்றும் கேள்விகள் இன்று தமிழர் தரப்பில் எழுந்து நிற்கின்றன.

கடந்த வாரம் 25, 26ஆம் திகதிகளில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இணைத் தலைமைகள் கூடி இலங்கை விவகாரத்தை அக்குவேறு ஆணிவேறாக விரிவாக ஆராய்ந்தன. அந்த நாடுகள் அங்கு ஆராய்ந்த விடயங்கள் குறித்து எதுவித அறிவிப்பும் வெளியிடாத நிலையில் -

அரச தரப்பில் சமாதான முயற்சிகள் குறித்து பெரும் ஆரவாரம் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

நோர்வேயின் அனுசரணைப் பணிகளை ஏற்கிறோம், விடுதலைப் புலிகளுடன்

வடக்கு - கிழக்கில் எட்டுத் தமிழ் மாவட்டங்களிலும் தற்சமயம் உள்ளூர் ஆள்களைக் கொண்டு அலுவலகங்களை இயக்கிவரும் கண்காணிப்புக் குழு புதிய வடிவத்தில் சர்வதேச கண்காணிப்பாளர்களின் பணியை முன்னெடுக்கப்போகின்றது.

கிழக்கில் திருகோணமலையிலும் வடக்கில் வவுனியாவிலும் பிரதான அலுவலகங்களை இயக்குவதுடன், ஏனைய மாவட்டங்களில் கண்காணிப்புப் பிரிவுகளை செயற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அறிவிப்புகளும் கண்காணிப்புப் பணிகளுக்குப் புத்துயிர் அளிக்கும் இணக்கங்களும் நல்ல சமிக்ஞைகளாக இருந்தபோதும் காலம் பிந்திப் பிறந்த ஞானம் என தெற்கு அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.


அரசின் தற்போதைய முயற்சிகள் திறந்த மனத்துடன் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அதனால் பயன் ஏற்படும். இல்லையேல் மிக மோசமான சூழலை மட்டும் உருவாக்கும்.

கடந்த 2005ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஜெனீவாவில் நடந்த அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்த பின் வடக்கு - கிழக்கில் நிலைமை உச்சக்கட்டதை அடைந்து எப்போது பாரிய யுத்தம் ஒன்று வெடிக்கப்போகின்றது என்று

செய்யப்பட்டுள்ள இம்மாதம் 26ஆம் திகதி ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரை ஒன்றையும் நிகழ்த்தப்போகின்றார்.

சமாதான செயற்பாடுகளில் அரசின் அடுத்த கட்ட நகர்வு தொடர்பான முக்கிய அறிவிப்புக்களை இந்த உரை மூலம் வெளியிடப்போகின்றார் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசுப் பக்கத்தில் இருந்து வெளிவந்துகொண்டிருக்கும் நிலைப்பாடுகள் வெற்றியளிக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மறுதரப்பில் இருந்து வெளிவந்துள்ள கருத்துகள் இந்தக் கேள்வியை



# பேச்சுக்கான சிக்கலை அவிழ்ப்பாரா போவர்?



பேசத் தயாராக இருக்கின்றோம், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த நோர்வேத் தரப்பு கிளிநொச்சிக்கு செல்ல பயண ஏற்பாடுகள் செய்துகொடுப்போம். இப்படியான அறிவிப்புக்கள் அரசுப் பக்கத்தில் இருந்து வருகின்றன.

ஜனாதிபதியின் இந்தப் புதிய நிலைப்பாட்டை அவரது சகோதரரும் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ நோர்வேக்குத் தெரியப்படுத்தியுமுள்ளார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை சீராக நடைமுறைப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யப்போகின்றோம் என அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரஜீவ விஜயசிங்க கண்காணிப்புக் குழுவின் தலைவர் லார்ஸ் ஜோகான் செல்பேர்க்கிடம் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்துக்குப் புத்துயிர் கொடுக்கப் புதிய அணுகுமுறையைக் கைக்கொள்ள இருவரும் இணக்கம் கண்டுள்ளனர்.

இந்த இணக்கத்தின் பிரகாரம் போர்நிறுத்தத்தை இரு தரப்புகளும் சீராக முன்னெடுக்க தமது கண்காணிப்பாளர்களை அதிகரிக்கவும் தமது அலுவலகங்களைச் சீராகப் பேணவும் அவர் முயற்சிகளை எடுத்துள்ளார்.

எதிர்பார்க்கப்பட்ட நிலையில் - சர்வதேசம் எந்தவித தலையீடும் இன்றி பேசாமடந்தையாக இருந்தது. சர்வதேசத்தின் இந்த மௌனப் போக்கைப் பயன்படுத்தி, பிணக்குகளில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பு தான் நினைத்ததைச் செய்து முடித்து இன்று வெற்றி என மார்தட்டி நிற்கின்றது.

'நாங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகப் பேணுகின்றோம். எம்மீது திணிக்கப்பட்ட வலிந்த தாக்குதலை மட்டும் எதிர்கொண்டு நிற்கின்றோம்' என மறு தரப்புக் கூறிக்கொண்டு நிற்கின்றது.

எதிரும் புதிருமாக இரு தரப்புக்களும் கூறிக்கொண்டு நின்றாலும், நிலைமை மோசமடைகின்றது என்பது மட்டும் உண்மை.

இன்று முன்னெடுக்கப்படும் முயற்சிகள் இந்த மோசமான நிலையைத் தணிக்க உதவுமா என்பது இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

கிழக்கில் கடந்த வருடம் மாவிலாறை நோக்கி படையினர் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை இன்று கிழக்கை முழுமையாக மீட்டு, தொப்பிகலவில் போய் நிற்கின்றது. தொப்பிகல மீட்கப்பட்டவுடன் கிழக்கின்

## இரு தரப்புக்களுக்கு இடையிலான இடைவெளி சுருங்குமா?

நிர்வாகத்தை மக்களிடம் ஒப்படைக்க தேர்தல் நடத்தப்போவதாக அரசுத் தரப்பில் இருந்து செய்திகள் வருகின்றன.

அத்துடன் இந்த இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றி வருவதாக பெரும் பிரசாரத்தின் மத்தியில் அரசின் அறிவிப்புக்கள் வருகின்றன.

கிழக்கை மீட்டதை வெற்றிவிழாவாக இம்மாத இறுதியில் கொண்டாடவும் அரசுத் தரப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்கு பெரும் எடுப்பில் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

வெற்றிவிழா கொண்டாட ஏற்பாடு

எழுப்பியுள்ளன.

தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாக அத்தரப்பு உத்தியோகபூர்வமான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தா விட்டாலும், தங்கள் நிலைப்பாடு எப்படியிருக்கும் என்பதை சூசகமாக வெளிப்படுத்தியுள்ளது.



''யுத்தநிறுத்தத்தை மோசமாக மீறி, பல்வேறு இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டு, எமது தாயக பூமியை இந்த யுத்த நிறுத்தகாலத்தில் கபளீகரம் செய்து,

பல்லாயிரக்கணக் கில் தமிழர்களை அவர் களது வாழிடங்களில் இருந்து இடம்பெயர வைத்து,

மனிதப் பேரவ லத்தை உருவாக்கிக் கொடூரத்தின் உச்சியில் நிற்கின்றன இலங்கைப் படைகள்.

''இவற் றின் விளை வுகளை - பதில் நடவ டிக்கைகளை - இலங்கை அரசு எதிர்கொள்ளவேண்டிய வேளை இனித்தான் வரப்போகின்றது. சமா தான முயற்சிகள் என்ற பெயரால் அவற்றை இலகுவில் தடுத்துவிட முடியாது.

''யுத்தநிறுத்த ஏற்பாடுகளை முழு அள வில் - சொல்லிலும், செயலிலும் - நடைமு றைப்படுத்தி, அதன் மூலம்

தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை மையை ஏற்படுத்தினால் மட்டுமே அமைதி முயற்சிகளுக்கு இணங்குவோம். அதற்கான வாய்ப்பும் கிட்டும்.

''யுத்தநிறுத்தத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தமிழர் தாயகத்தின் மீது தான் கட்டவிழ்த்துவிட்ட கொடூர நடவ டிக்கைகளைச் சீர்செய்து நிவர்த்திப்பது மற்

றும் 'ஏ-9' பாதையை நிபந்தனையின்றி மீளத்திறப்பது உட்பட இயல்பு நிலையை மீள உறுதிப்படுத்துவதற்கு அரசுத் தரப்பு செய்யவேண்டிய கடப்பாடு கள் - பொறுப்புகள் - பல இருக்கின்றன.

''அவற்றை நோர்வேத் தரப்பி னர் வரும் போது அவர்களுக்கு விரிவாக விளக்குவோம்.

''அவற்றைச் செய்வதற் குக் கொழும்பு அர[illegible] இணங்கி மு[illegible] வந்து, செ[illegible] படுத்தி[illegible] மட்டுமே அமைதி முயற்சி களுக்கான சூழல் உருவா கும். சமாதானப் பேச்சுகளும் சாத் தியமாகும்.''

இப்படி தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் வெளியிட்டு இருக்கிறார்கள்.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹான்ஸன் போவர் கிளிநொ[illegible] வரும்போது இந்த நிலைப்பாட்டை அவர்கள் தெரிவிக்கப்போகின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கும் அரசின் நிலைப்பாட்டுக்கும் பாரிய இடைவெளி ஒன்று இருக்கின்றது. இந்த இடைவெளி சுருக்கப்பட்டு சமாதான முயற்சிகள் அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டுமானால் அது இரு தரப்புகளின் கைகளில்தான் இருக்கின்றது. சர்வதேச சமூகம் இரு தரப்புகளையும் நெருக்கமாகக் கொண்டுவர பெரும் பகீரதப்பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும் எனச் சுட்டிக்காட்டப் படுகின்றது.

**யாழவன்**

* போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் ஏ-9 பாதையூடான போக்குவரத்து சீராக்கப்படவேண்டும்.

* கிழக்கில், போர்நிறுத்த உடன்படிக்கை யின் பிரகாரம் இரு தரப்புகளுக்கும் இடை யிலான எல்லைக்கோடுகள் பராமரிக்கப்பட வேண்டும்.

(26 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்.



# ஆள் இல்லா ஊருக்குப் பாதை போடும் ஜப்பான்

# ஏ-9 பாதையை வழி மறிக்கும் மஹிந்தர்





ஸ்ரீலங்கா மீது பொருளாதாரத்தடை அழுத்தம் கொடுக்காதவாறு இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில்,மிக நேர்த்தியான காய் நகர்த்தலை ஜப்பானிய அரசு மேற்கொண்டுள்ளது.பொருளாதார உதவி வழங்கும் நிரந்தரமான நட்பு நாடென்பதை மறுபடியும் நிரூபித்துள்ளது. நிதி உதவிகள் வழங்குவதை நிறுத்திக் கொண்டால் வேகமாக வளர்ந்து வரும் இந்திய முதலீடு இலங்கையில் அதிகரித்து, தனது இல்மனைட் வியாபாரத்தில் மண் விழுந்து விடுமோ என்கிற கரிசனையோடு கூடிய பதற்றம்தான்.

ஆயுத உதவிகளோடு உளவுத்தகவல் பரிமாற்றம் மற்றும் முதலீடுகளை மேற்கொள்ளும் இந்தியாவும், காலியில் துறைமுகம் நிர்மாணிப்பதோடு ஆயுத தளபாடங்களை கடனடிப்படையில் வழங்கும் சீனாவும், வலிந்து தாக்கும் போர்க்கருவிகளை உடனுக்குடன் அனுப்பும் சீனப் பினாமியான பாகிஸ்தானும் களத்தில் நிற்கும் போது, நிதி உதவியைக்கூட வழங்காவிட்டால் இலங்கை விடயத்தில் தனிமைப்படுவோமென ஜப்பான் எண்ணுவதில் தவறில்லை.

இரண்டாம் உலக யுத்தத்தில் எடுத்த கறையான நிலைப்பாட்டினால் , ஆயுதங்களை வழங்கக்கூடத் தன்னால் இயலவில்லையே என்கிற ஆதங்கம் ஜப்பானுக்கு இப்போது உண்டு.

ஆதலால் 30 மில்லியன் ஜப்பான் நாணயத்தை கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கி, இனச்சுத்திகரிப்பு செயற்பாடுகளுக்கு முண்டுகொடுக்க முற்படுகிறது அது. இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சு முயற்சிகளில் அக்கறை காட்டுவதாக வெளிப்படுத்தி வன்னி விஜயங்களை மேற்கொண்ட ஜப்பான் , பூர்வீக பிரதேசங்களை விட்டு அகற்றப்பட்ட தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களில் அரசின் சிங்களமயமாக்கலுக்கு துணை போவது, எல்லோரும் போன்று அந்நாட்டிற்கும் இரட்டை வேடக் கொள்கை உண்டென்பதை வெளிப்படுத்துகிறது.

அமெரிக்கா, இந்தியாவிற்கு திருகோணமலை மீதுள்ள அக்கறையை விட ஜப்பானிற்கு அப்பிரதேசத்திலுள்ள ஈடுபாடு ஏதுவாகவிருக்குமென்பதே பல ஆய்வாளர்கள் மத்தியில் புதிதாக உருவாகியுள்ள சந்தேகம். திருமலைத் துறைமுக நுழைவாசலில் கடற்படைத்தளம் ஒருமுனையிலும், சம்பூர் மறுமுனையிலும் அமைந்துள்ளன. வர்த்தக தன்மையை உள்ளடக்கிய இப்போர்த்துறைமுகம் கிழக்கு ஆசிய நாடுகளைத் தனது பார்வைக்குள் அடக்கி வைத்துள்ளது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் 'றோயல் நேவி' என்று அழைக்கப்பட்ட டொக்யார்ட் கடற்படைத்தளமும் சீனக்குடாவில் உருவாக்கப்பட்ட விமானப் படைத்தளமும் (அது முகாமல்ல) கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக இன்றும் கணிப்பிடப்படுகின்றன.

அத்துடன் 100 பாரிய நிலத்தடி எண்ணெய் சேமிப்புக் கிணறுகளையும் ஆங்கிலேயர் அங்கு உருவாக்கினர்.

இராணுவ கேந்திர முக்கியத்துவம் இல்லாமல், இவ்வகையான பாரிய முதலீடுகளை விழுங்கக்கூடிய திட்டங்களை பிரித்தானியா செயற்படுத்தியிருக்க முடியுமா?

ஜப்பானைப் பொறுத்தவரை இதன் இராணுவ முக்கியத்துவத்தை விட இயற்கைத் துறைமுகம் அமைந்த இப்பிரதேசத்தின் பொருளாதார முதலீட்டுப் பரிமாணமே அதற்குப் தேவையான விடயமாகிறது.

அதாவது மஹிந்தவின் நோக்கத்தினை ஈடு செய்யும் வகையில் சம்பூர்- மாவிலாறு- ஹபரணை வீதியை இணைத்து நால்வழி நெடுஞ்சாலையை அமைக்கும் பணிக்கு நிதி உதவி வழங்குவதே ஜப்பானிய அரசு தற்போது செய்யக்கூடிய முதலுதவியாகும்.

இலக்கந்தை, சம்பூர், புல்மோட்டையை இணைத்து நெடுஞ்சாலை அமைப்பது என்பது சாத்தியமான விடயமல்ல. அத்திட்டமும் வரையப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் சம்பூரிலிருந்து புல்மோட்டை வரை பாதை அமைத்திட கடல்பகுதி தடையாக அமையும். ஏனெனில் புல்மோட்டை இல்மனைட் மண்ணே இப்பாதை அமைக்கும் தேவையை ஜப்பானுக்கு உணர்த்துவதாக ஊகிக்கப்படுகிறது.

எண்பதுகளில் பரவலாய் பேசப்பட்ட விடயம் ஒன்றும் நினைவுக்கு வருகின்றது.

இல்மனைட் மண்ணிலிருந்து டைட்டேனியம் (Titanium) தாதுப் பொருளை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை (Smelting Plant) ஒன்றை இலங்கையில் நிறுவும்படி அன்றைய விஞ்ஞானக் கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ வேண்டுகோள் ஒன்றினை ஜப்பானிடம் விடுத்திருந்தார்.

பாரிய முதலீட்டினை உள்வாங்கும் மாபெரும் திட்டமெனப் போக்குக்காட்டி, அதனை நிராகரித்தது ஜப்பானிய தேசம்.

மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் வல்லரசுகள் தமது அதியுயர் தொழில் நுட்ப விஞ்ஞானத்தை,பல நாடுகளின் கழுகுப் பார்வை விழுந்துள்ள தேசத்தில், காட்சிப் பொருளாக்க விரும்பமாட்டா. அண்டை நாடாக விளங்கும் இந்தியா இல்மனைட் மண் விவகாரத்தில் அக்கறையற்று இருப்பதையும், இதனடிப்படையில் புரிந்து கொள்ளலாம்.

மண்ணின் மகிமை புரிந்த ஜப்பானிற்கு, டைட்டேனிய ஏற்றுமதியால் கிடைக்கும் வருமானமும், அதைவிட அந்தக் கனிப் பொருளுக்குரிய போரியல் சார்ந்த முக்கியத்துவமும் நன்றாகவே தெரியும். அரிதட்டுப் பொறி முறை (குசினிப் பானையில் குறுணலை இடித்த மாவிலிருந்து பிரிக்கும் தட்டு) கனிப்பொருளை பிரித்தெடுக்கும் முறையல்ல இது.

**சி.இதயச்சந்திரன்**

மண்ணை உருக்கி, பிரித்தெடுக்கும் உயர்தொழில் நுட்ப வகைக்குள் அடங்கும் விஞ்ஞான முறைமை அது. அதற்குரிய தொழிற்சாலையை, விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக ஒப்பந்தம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சம்பூரில் ஜப்பானிய தேசம் அமைக்குமா என்பது சந்தேகத்திற்குரியது.

அவ்வாறின் நிலையம் அமைப்பதற்கே, பிராந்திய வல்லரசு பல தடவை யோசனையைச் சுசக்கும்போது பலகோடி டொலர் முதலீட்டு திட்டத்தை சம்பூரில் அத்தகைய தொழிற்சாலையை நிறுவ ஆயிரம் தடவைகள் ஜப்பான் சிந்திக்கும்.

19 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த சம்பூர் பிரதேசத்தை அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்து உள் நுழைபவர்களுக்கு 5 வருட சிறையும் 5 லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கும் அரசின் சர்வதேச வலைப்பின்னலுக்குள் அகப்பட்ட , வெளிநாட்டு முதலீட்டாளர் கள் முன் வருவார்களா என்பதை சிறிது காலம் கழிந்தே கணிப்பிடலாம்.

நெடுஞ்சாலைகள் அமைப்பதன் பின்னணியில் முதலீட்டு நோக்கங்கள் இருப்பதையும் மறுக்க முடியாது.

அதே வேளை தற்காலிகமாக, அரசுடன் உறவினைப் பேணுவதற்கும் அகதிகள் மீள் குடியேற்றம் என்றே பொதுநலன் அடிப்படைக் கொள்கை ரீதியாகவும் இவ்வுதவிகளை ஜப்பான் செய்ய முன் வருவதாகவே கருதலாம்.

தாயகத் தமிழர்கள் அவ்வாறு கருதவேண்டுமென்பதே ஜப்பானின் எதிர்பார்ப்பாகும்.

இருப்பினும் இணைத்தலைமை நாடுகளையும் இந்தியாவையும் கிழக்குப் பிரதேசத்துள் முதலீடு என்கிற போர்வையில் இழுத்துவிட முயலும் மஹிந்தவின் நவீன சர்வதேச வலைப்பின்னலை விடுதலைப் புலிகளும் புரிந்துகொள்வார்கள்.

இவ்வலைகளை கிழித்தெறியக் கூடிய வல்லமை வான் புலிகளுக்கு உண்டென்பதையும் மேற்குலகத்தார் உணர்வார்கள்.

கிழக்கில்,இராணுவம் ஆக்கிரமித்த இடங்களில்,நெடுஞ்சாலைகள் அமைத்து ஏனைய மாவட்டங்களோடு இணைப்பினை ஏற்படுத்தும் அரசின் திட்டத்திற்கு வெளிநாடுகள் வழங்கும் ஆதரவு சமாதானப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை கேலிக்குரியதொன்றாக மாற்றியுள்ளது.

சமாதானப் போர்வைக்குள் மறைந்திருக்கும் சதிகளையும் அது வெளிப்படுத்துகிறது.

விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்கும் தகைமை, இன்னும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

FOR SALE !!!
PRINTING MACHINE
Model: ORALIYA
Size : 18 x 24
Made : Italy
Steam Feeder
Chinese Plateen Machine
&
Original Perfecta Paper Cutter 32"
0777 - 635484

LAND SALE !!!
GOVERNER'S PARK
A.S.P.LIYANAGAE MW,
WATTALA.
(Behind the Lysium International School)
24 PERCH
NO BROKERS
0777 - 635484

# சலித்துக் களைத்துப்போன விழிகளில் நம்பிக்கை ஒளி மங்கவில்லை!

**தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதி முகாம்களின் நெருக்கடி குறித்த ஒரு பார்வை. அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் கத்தோலிக்க நிவாரண சேவைக்காக கரோலின் பேர்னன் என்பவர் ஆங்கிலத்தில் வரைந்த கட்டுரை இது.**

தமிழக அகதிகள் முகாமொன்றில் இவ்வருடம் திருமண வைபவமொன்று நிகழ்ந்தது. அது சுப முகூர்த்தங்களைக் கொண்ட காலப்பகுதி. இந்தியாவில் திருமணசீசன். இப்பகுதியில்தான் அனிட்டா (பெயர் மாற்றம்) திருமணம் புரிந்தார். புதிதாக திருமணம் புரிந்த இதர ஜோடிகளின் தேனிலவைப் போலவே,









இவரின் தேனிலவும் அமைந்திருந்தது.

அனிட்டாவும் அவரது கணவரும் முதல் சில தினங்களை பண்டசாலையொன்றில் கழித்தார்கள். அதற்கு சாளரங்கள் கிடையா. அங்கு கழிவறை இல்லை. ஓரளவு தனிமையை - இரகசியத்தைப் பேணக்கூடிய வாய்ப்பு. இப்பண்டசாலை இப்போது ஓர் அகதிகள் முகாம். இதன் கூரைக்கடியில் 25 இதர குடும்பங்கள் வசிக்கின்றன.

அனிட்டா ஓர் இலங்கை அகதி. தற்போது இந்தியாவில் புகலிடம் பெற்றிருப்பவர். 'இங்கு அகதி முகாம்களும் புதிய பரம்பரையைத் தோற்றுவித்து வருகின்றன. புதிய பரம்பரையினருக்கு அகதி முகாம்களே தங்கள் இல்லங்கள். அனிட்டாவுக்கும் அப்படியே. இந்த அவலநிலை, தமக்கே உரித்தான தாயகத்தில் நெருக்கடிகள் வேரூன்றி வருகின்றமையை பிரதிபலிக்கின்றது. இருநாடுகளையும் இரு கூறுகளாக்கும் கடலைக்கடந்து இலங்கை அகதிகள் இங்கு வந்திருக்கிறார்கள்.

இதுவரை 69,000 இலங்கை அகதிகள் இந்தியா வந்தடைந்துள்ளார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் பலர் தமது ஆபத்தான பயணங்களை விவரித்துள்ளனர். பகீரதப் பிரயத்தனங்களை எடுத்துரைத்துள்ளனர். கண்டங்களிருந்து தப்பிய சம்பவங்களைக் கூறியுள்ள அதே வேளை இலங்கையில் சமீப காலங்களில் 200,000 பேர்வரை, தம் இல்லங்களை விட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி, இடம்பெயர்ந்துள்ளனர்.

இலங்கையில் இவ்வருட ஆரம்பத்தில், இடம் பெயர்ந்த அகதிகளுக்கென நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டன. இவற்றின் எண்ணிக்கை, சிலமாதங்களுக்குள் இரட்டிப்பாகி விட்டது. மட்டக்களப்புக்கு மேற்கிலிருந்து 6,000க்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. தற்போது தம் இல்லங்களுக்கு திரும்புமாறு இக்குடும்பங்களை அரசாங்கம் ஊக்குவித்து வருகின்றது. இவ்வருட இறுதிக்குள், இதர 12,000 குடும்பங்களும் முன்னைய இடங்களுக்குத் திரும்பலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு மீளத் திரும்பும் குடும்பங்களில், அநேக குடும்பங்கள் புதிய சவால்களை எதிர்நோக்குகின்றன. இவற்றின் இல்லங்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன; இல்லையேல் கொள்ளையிடப்பட்டுள்ளன. மனிதாபிமான சேவை நிறுவனங்களின் பணிகளும், அவற்றிற்கான பாதுகாப்பும் வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆதாரங்கள் அருகி வருகின்றன.

மக்கள் தம் வாழ்வையும் நகரங்களையும் கௌவிய சம்பவங்களால் திக்பிரமை பிடித்தவர்களாக இருக்கின்றார்கள். அதிர்ச்சியிலிருந்து தம்மை சுதாகரித்துக் கொள்ள முடியாதவர்களாக தவிக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள மக்கள், இலங்கை நெருக்கடிகள் தொடர்பாக மாறுபட்ட தகவல்களையே பெறுகிறார்கள். 'இவர்கள் மத்தியில் வேறுபட்ட வியூகங்கள் நிலவுகின்றன. அகதிகளின் பெயர்ச்சி கூட காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. முகாம்களிலுள்ள அகதிகளில் அநேகர் சலித்து களைத்துப் போனவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த நெருக்கடிகள் இங்கு வாழும் பெரும்பாலானோருக்கு புதியவை அல்ல.

**தமிழில்: வி.எஸ்.காந்தி**

பெயர்ச்சிக்கான இந்த அகதி முகாம்களில் அனிட்டாவைப் போல பல்லாயிரக்கணக்கானோர் புகலிடம் பெற்றுள்ளனர். கடந்த 17 ஆண்டுகளாக இவர்கள் வசித்து வருகின்றார்கள். அமைதிக்காக புகலிடம் பெற்றுள்ள இவர்கள் பாதுகாப்போடு திரும்புவதற்கான காலம் வருமென்ற நம்பிக்கைப் பிடிப்போடு இருந்து வருகிறார்கள்.

இலங்கையில் யுத்தம் தன் சுவடுகளை பதிந்தவாறே நகர்ந்து கொண்டிருக்கிறது. இலங்கைப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சிவில் யுத்தம் 1983ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. 2002 ஆம் வருடத்திய யுத்த நிறுத்த உடன்படிக்கையால் மீள அமைதி குடிகொண்டது. இந்நிலை நீடிக்கவில்லை.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி, ஐந்து வருடங்களுக்குப் பின்னர் கடந்த வருட ஏப்ரலில், மீள யுத்தம் குமுறி வெடித்தது. இச்சண்டைக்கு மத்தியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சிக்குண்டிருக்கிறார்கள். முழு அளவிலான, மனிதாபிமான அவசர, அவசிய நிவாரண உதவிகள் அவர்களுக்குத் தேவை.

அனிட்டாவைப் பொறுத்த மட்டில் இவை அவருக்கு குழந்தைப் பராயச் சம்பவங்கள்தான். அகதிகளாக இலங்கையைவிட்டு அவரது பெற்றோர் வெளியேறும் போது அவருக்கு வயது 4. அனிட்டாவின் பெற்றோர், நான்கு வயது புதல்வியோடு 1990 ஆண்டு இந்தியா வந்தடைந்தனர். இதையடுத்து திருநெல்வேலியிலுள்ள நாராயஅம்மாள் புரம் அகதிகள் முகாமில் தஞ்சமடைந்தனர்.

அனிட்டாவின் இல்லம் இந்த அகதி முகாமாயிற்று. அவர் இங்கு வளர்ந்தார். கல்வி கற்றார். கல்வியை முடித்துக் கொண்ட அவர், தனது 21ஆவது வயதில் திருமணம் செய்து கொண்டார். அனிட்டா தனக்குரிய மணமகனை இம்முகாமில் தான் சந்தித்தார். இருவருக்கும் இங்குதான் இவ்வருடம் திருமணம் நடைபெற்றது. சீர்குலைந்த பண்டகசாலைக்குள்ளேயே இப்புதிய தம்பதியினர் தமக்கான தனியிடத்தை உருவாக்கிக் கொண்டனர். இவர்கள் சுய முயற்சியினால் 6 அடி மண் சுவரொன்றை மறைப்பு மதிலாகக் கட்டியுள்ளார்கள்.

இந்த அகதி முகாமிகளின் முக்கிய பராமரிப்பாளர் இந்திய அரசினரே ஆவர். இங்கு 120 முகாம்கள் இருக்கின்றன. 73,097 பேர் தங்கியுள்ளனர். இந்திய அரசு அடிப்படைத் தேவைகளை இவர்களுக்கு அளித்து வருகிறது. இவற்றில் புகலிடம், மதிய உணவு, உப பொருட்கள் (அரிசி, சீனி, மண்ணெண்ணெய்), நீர், மின் விநியோகம் ஆகியனவும் அடங்கும். அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு அகதிகளின் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதை இக்குடும்பங்கள் பெரிதும் வரவேற்றுள்ளன.

எனினும் இது குடும்பப் பெருக்கத்துக்கான ஓரிடமில்லை. பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்ட சிறாருக்கு போதிய வேலை வாய்ப்புக்கள் கிடையா. குறைந்தபட்ச போட்டிக்குரிய வாய்ப்புக்களே உள்ளன. அனிட்டாவின் கணவர் ஒரு நாட்கூலி தொழிலாளி. கட்டட நிர்மாணப் பகுதிகளில் வேலை செய்கிறார். வீடுகளுக்கு வர்ணம் பூசுகிறார், ட்ரக்குகளில் பொருட்களை ஏற்றுகிறார். இவர் இவற்றை விட மேலதிக வேலை வாய்ப்புக்களையும் எதிர்பார்க்கின்றார்.

சில அகதிகள் இலங்கைக்கு மீள முயற்சித்தார்கள். அங்கு வாழ்வை கட்டி எழுப்பலாம்; தொழில் முயற்சிகளில் ஈடுபடலாம்; வருவாயைப் பெருக்கலாம் என்ற அபிலாசை. எல்லோருக்கும் இம்முயற்சி பலிதமாவதில்லை.

அனிட்டாவைப் போல நிலூப்பாவும் ஒரு பெண். (பெயர் மாற்றம்) 1990ஆம் ஆண்டு, தனது எட்டாவது வயதில் நிலூப்பாவும் தன் பெற்றோரோடு இந்தியா வந்தடைந்தார். இக்குடும்பத்தினர் இதே அகதி முகாமில் தஞ்சம் புகுந்தனர்.

நிலூப்பாவும் இதே அகதி முகாமில் வளர்ந்தார்; இங்கு கல்வி கற்றார்; இளம் பராயத்தில் இம்முகாமைச் சேர்ந்த இளைஞரொருவரை திருமணம் செய்தார். 2003ஆம் ஆண்டு, இத்தம்பதியினர் இலங்கை திரும்பினர். சிறு பராயத்தில் அறிந்த தமது ஊரில் வாழ்வைக் கட்டி எழுப்பலாம் என்ற நம்பிக்கை.

இவர்கள் தம் சிறுபராயத்தில் பரிச்சயமான பகுதியில் குடியேறினார்கள். கணவர் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டார். மூன்றாண்டுகள் சுமுகமாக ஓடின. இதற்குப் பின்னர் நிலைமை தலைகீழாக மாறியது. 2006ஆம் ஆண்டு யுத்தம் மீள குமுறி வெடித்தது. இவர்கள் தம் மீன்பிடிப் படகை விற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார்கள். அப்படியே அதை விற்பனை செய்தார்கள். தம் சேமிப்பை, மீள இந்திய பயணத்தை மேற்கொள்ள செலவிட்டார்கள். நிலூப்பாவுக்கு தற்போது வயது 24. இவர் மூன்று பிள்ளைகளுக்கு தாய்.

"அமைதி ஏற்பட்டதும் நாம் இலங்கை திரும்புவோம். அதுவே எமது எதிர்பார்ப்பு" என அவர் தெரிவித்தார். சொந்த ஊர், மேற்கொண்ட தொழில், முன்னைய பந்தங்கள், உள்ளக் கணிப்பு, ஆகியவை அவரது உள்ளத்தில் பதிந்து இன்னும் பசுமையாக மிளிர்கின்றன.

இந்தியாவில் இந்திய அரசாங்கத்துடன் இணைந்து, சி.ஆர்.எஸ் நிறுவன பங்குதாரர்களும் 38 முகாம்களில் பணி புரிகிறார்கள். இவர்கள் 25, 408 பேரை பராமரிக்கிறார்கள். பாதுகாப்பான புகலிடங்கள், சுகாதார வசதிகள், உளநல சமூக ரீதியிலான உதவிகள் ஆகியவற்றை

(26ஆம் பக்கம் பார்க்க)





# தொப்பிகல: வெற்றியின் மகுடமா?

குடுமிமலைப் பகுதியில் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார்ஷெல் தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட ஆறுபடையினர் உயிரிழந்திருக்கின்றனர்.

அடுத்த சில தினங்களில் தொப்பிகலவை ( குடுமிமலை) கைப்பற்றிவிடுவோம் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நாடாளுமன்றத்தில் அறிவித்து 24மணி நேரத்தினுள் இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தற்போதைய இராணுவ நடவடிக்கைகளின் வெற்றியிலக்காக தொப்பிகலவை உருவாக்கியுள்ளது அரசு. கிழக்கில் அங்கைகள் ஈட்டிய வெற்றிகள் அனைத்தினதும் மகுடமாக இது இருக்கும்' என்று அரசுப் பிரமுகர்கள் புகழ்ந்து பேசி வருகின்றனர். இதனால் நாட்டுமக்களின் எதிர்பார்ப்பு முழுவதும் தொப்பிகல மீது குவிக்கப்பட்டு விட்டது.

குடுமிமலை (இது தலையில் வைக்கும் குடுமி போன்ற அமைப்பை உடையது) எனப்படும் சிறுமலைக் குன்றைச் சூழ்ந்து அடர்ந்த காடுகளால் நிறைந்த பிரதேசத்தை யே தொப்பிகல என்கின்றனர். திக்குத்தெரியாத இந்தக் காட்டில்தான் புலிகளின் கடைசி தளம் உள்ளது என்கின்றனர்.

கிழக்குப்போரின் மகுடத்தை சூடுவதற்கு முன்னர் இராணுவம் இந்தக் காட்டுப் பகுதியை கைப்பற்றுவது மட்டுமன்றி அங்கு நிலைகொள்ளவும் வேண்டும்.

இந்தக் கட்டத்தில் கொழும்பில் அரசுப் பிரமுகர்கள் தலைகால் தெரியாதவர்களாக இருக்கின்றனர். களநிலையை அறியாதவர்களாக இருந்துகொண்டு அரசியல்வாதிகள் வெளியிடும் தகவல்கள் பாதுகாப்புத்துறைசார்ந்த விமர்சனங்களுக்கு வழிகோலுகின்றன.

இருபதினாயிரம் இந்திய அமைதிப்படைகளால் கூட கைப்பற்றிவிடமுடியாமற்போன தொப்பிகல காட்டுக்குள் நமது படைகள் நுழைந்துவிட்டன என்று சிலநாட்களுக்கு முன்பு பெருமை பேசியிருந்தார் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல.

இந்தியப்படைகளின் கையாலாகாத்தனம் இது என்ற சாரப்பட இலங்கை அமைச்சர் கூறிய கருத்துக்குஇந்திய அமைதிப்படையின் முன்னாள் கிழக்குப் பிராந்தியத் தளபதியிடமிருந்து உடனடியாகவே பதில் வந்திருக்கிறது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை உட்பட கிழக்கில் இந்திய அமைதிப்படையின் படை நடவடிக்கைகளை வழிநடத்தியவர் மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா.

விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள், மருத்துவமனைகள், சிறைக்கூடங்கள், தளங்கள் என்று முக்கிய இடங்கள் தொப்பிகல காட்டில் உள்ளன. இந்திய அமைதிப்படை பல தடவைகள் தாக்குதல்களை நடத்தியிருக்கிறது. தாக்குதல் நடத்தி முன்னேறிச் சென்று மீண்டும் நமது தளங்களுக்கே திரும்பிவிடுவோம். அங்கு நிலைகொள்ள்வேண்டிய கேந்திர முக்கியத்துவம் இருக்கவில்லை - என்று இந்தியத் தளபதி மேத்தா கருத்துவெளியிட்டிருக்கிறார்.

மிக அதிகமான மனிதவலு மற்றும் பொருள் தளபாட விரயங்கள் தவிர்க்கப்படவேண்டியதன் அவசியம் கருதியே இந்திய அமைதிப்படை தொப்பிகல முழுப்பிரதேசத்தையும் கைப்பற்ற முயற்சிக்கவில்லை என்று பாதுகாப்பு விமர்சகர்கள் கருதுகின்றனர். இப்போது இலங்கை அரசுப்படைகள் ஏராளமான மனிதசக்தி, பொருள்விரயம் என்பவற்றை விலையாகக் கொடுத்தே தொப்பிகல படைநகர்வில் ஈடுபட்டு வருகின்றது என்றும் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இன்றைக்கோ, நாளைக்கோ வெற்றி என்று கொழும்பில் தலைவர்கள் குரல் எழுப்பி வந்தாலும் அங்கு - காட்டில் - களத்தில் - நிலைமை என்ன என்பதை புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய மோட்டார் ஷெல்தாக்குதல்கள் எடுத்துக்காட்டியுள்ளன.

தொப்பிகல காட்டின் வடபகுதியில் இருந்து புலிகள் மேற்கொண்ட ஷெல்வீச்சில் அதிகாரி ஒருவர் அடங்கலாக ஆறுபடையினர் உயிரிழக்கநேர்ந்துள்ளது.

அங்கு மோட்டார் ஷெல்கள் மற்றும் கனரக ஆயுத தளபாடங்களுடன் புலிகள் இன்னமும் பலமாக நிலைகொண்டுள்ளனர் என்பதையே இந்தத் தாக்குதல் எடுத்துக்காட்டுகின்றது.

பரந்த - திக்குத்தெரியாத - காட்டுப் பிரதேசத்தைக் கைப்பற்றி அங்கு ஏராளமான துருப்புகளை நிறுத்திவைத்து அந்தப் பகுதியைத் தக்கவைப்பது என்பது சிறந்ததொரு இராணுவ உபாயம் ஆகாது என்கின்றனர் சில ஆயவாளர்கள்.

இலங்கை அரசப்படைகளில் உள்ள விசேட பயிற்சிபெற்ற கொமாண்டோப் படையினரே தொப்பிகல நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் காட்டுப் பகுதிக்குள் இராணுவத்தினரையும் அதன் வளங்களையும் முடக்கும் உபாயமாக புலிகளின் சிறு அணி ஒன்று அங்கு தங்கியிருந்து நீண்டகாலம் போரிட்டு நாட்களைக் கடத்தும் முயற்சியில் ஈடுபடக்கூடும்.

புலிகளை அங்கிருந்து முற்றாக வெளியேற்றினால் மட்டுமே வெற்றியைப் பறைசாற்றி கொண்டாடமுடியும். அதற்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லும் என்பது தெரியாது.

கொழும்பில் அரசுத்தலைமை நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறது. எனினும், தொப்பிகல களம் அரசுப்படைகளுக்கு இன்னும் சோதனையான களமாகவே தெரிகிறது.

**கேக்கே**



# இடைத்தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி; ஜெயலலிதா முகத்தில் கரி!

தமிழகத்தில் தி.மு.க ஆட்சிக்கு வந்து ஓராண்டு முடிந்துவிட்டது. மக்கள் அபிப்பிராயம் ஆட்சிக்கெதிராக திரும்பத் தொடங்கியுள்ளதா என்பதை நாடிபிடித்தறியும் விதமாக மதுரை மேற்கு சட்டமன்ற இடைத்தேர்தல் கருதப்பட்டது. குறிப்பாக ஜெயலலிதாவின் ஆக்ரோஷக்கூச்சலுக்கு மக்கள் பதில் என்ன என்பதும் இங்கு எதிர்பார்க்கப்பட்டது. மதுரை பாரம்பரியமாக அ.தி.மு.க கோட்டையாகும். எம். ஜி.ஆரின் புகழைத்தாங்கும் பிரதான நகரம் மதுரையாகும். இங்கு எம். எல். ஏ யாக இருந்த அ.தி.மு.க.வின் உறுப்பினர் இறந்ததை அடுத்தே இடைத்தேர்தல் வந்தது. கடந்த சட்டசபைதேர்தலில் இங்கு தி.மு.க அணியின் காங்கிரஸ் கட்சியே போட்டியிட்டிருந்தது. இம்முறை தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தி.மு.க .வினர் உடனடியாக தேர்தல் களத்தில் குதித்தனர். எனினும் காங்கிரஸுக்கே கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வாய்ப்பு என்று கலைஞர் அறிவித்துவிட்டார். ஆனால் தி.மு.க. உற்சாகத்துக்கு குறைவேற்பட வில்லை. வெற்றிக்காக காங்கிரஸ் உழைத்தது வெகு சொற்பமே. முற்றுமுழுக்க தி.மு.க உதவியால் காங்கிரஸ் கரைசேர்ந்துள்ளது. இதனால் சட்டசபையில் காங்கிரஸின் பலம் 35ஆக உயர்கிறது. அ.தி.மு.கவின் பலம் 58 இல் இருந்து 57ஆக குறைகிறது.

**பக்கத்து வீடு**

வெற்றிபெற்ற ராஜேந்திரன் வாசன் அணியை சேர்ந்தவர். அவர் 30ஆயிரம் மேலதிக வாக்குகளால் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. விஜய்காந்த் கட்சிக்கு கணிசமான வாக்குகள் கிடைத்துள்ளன. அவருடன் அ.தி.மு.க அணி சேர்ந்திருந்தால் ஒருவேளை வெற்றியை எட்டியிருக்கலாம். தனித்து நின்ற பி.ஜே.பிக்கு வெறும் ஆயிரம் வாக்குகளே கிடைத்தன.

இது இடைத்தேர்தல் அல்ல, தி.மு.க ஆட்சியை கணிக்கும் எடைத்தேர்தல் என கலைஞர் கவி வரியில் கூறி இருந்தார். இடைத்தேர்தல் முடிவு சொல்லும் சேதி தி.மு.க ஆட்சி மீது அதிருப்தி இன்னும் வளரத் தொடங்கவில்லை என்பதுதான். குறிப்பாக சமீபத்தில் தினகரன் அலுவலகம் மீது அழகிரி தரப்பின் தாக்குதல் தி.மு.க வுக்கு சரிவை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அழகிரி விடாமல் போராடி வென்றுள்ளார். தினகரன் சம்பவம் மாறன் குடும்பத்தின் தவறால் ஏற்பட்டது என மக்கள் தீர்ப்பளித்துள்ளதையே, தேர்தல் முடிவு காட்டுகிறது.

காங்கிரஸைப் பொறுத்தவரை ஒரு எம்.எல்.ஏ அதிகரிப்பதைவிட அதன் மூலம் வரும் ஜனாதிபதி தேர்தலில் 100வாக்குகள் புதிதாக கிடைக்கும் வாய்ப்பும் இதனால் ஏற்பட்டுள்ளது. இதேவேளை பி.ஜே.பிக்கோ மற்றொரு எம். பியை இழக்க நேரிட்டுள்ளது. முன்னாள் டில்லி மாநில முதல்வரும் மூத்த பி. ஜே.பி தலைவருமான ஷாஹிப் சிங் வர்மா விபத்தில் இவ்வாரம் உயிரிழந்தார். இது பி.ஜே. பிக்கு இரட்டை இடியாக அமைந்துவிட்டது. காரணம் டில்லியின் மற்றொரு பி.ஜே.பி ஜாம்பவானான மூத்த தலைவர் மதன்லால்குரானா ஏற்கனவே பி.ஜே.பி தலைமையுடன் முரண்பட்டு கட்சியை விட்டுவெளியேறிவிட்டார். அவர் போனாலும் பரவாயில்லை வர்மா இருக்கிறார் தானே என பி.ஜே.பி மதன்லால் குரானாவை கணக்கெடாது விட்டிருந்தது. அடுத்த ஆண்டு டில்லி மாநிலத்துக்கு தேர்தல் வருகிறது. வர்மாவையும் இழந்து விட்டதால் வேறுவழியின்றி குரானா சொல்லும் தாளத்துக்கு ஆட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. டில்லியில்10 ஆண்டுகளாக ஷீலா டிக்சிட் என்ற தலைவர் தொடர்ந்து முதல்வராக இருந்துவருகிறார்.

பி.ஜே.பியின் கோட்டையாக விளக்கிய டில்லியை காங்கிரஸ் வசமாக்கியுள்ளார் ஷீலா. அதனை மீட்கும் போராட்டத்தில் வர்மாவுமின்றி குரானாவுமின்றி பி.ஜே.பி தடுமாற வேண்டியுள்ளது.

**எஸ்.விரேந்திரஜித்**

சுடர்ஒளி

ஜூலை 08 - 14. 2007

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பக்ஸ் : 011 4734404
E-mail: editorial@sudaroli.com

## சர்வதேசத்தை ஏமாற்றும்போக்கு

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்காக, விசேட சமாதானத் தூதர் ஜோன் ஹன்சன் போவரை நேரடிப் பேச்சு நடத்த கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை அரச உயர்மட்டத்தில் இருந்து நோர்வேக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைவர்களின் விசேட கூட்டம், இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு மூலமே தீர்வுகாணப்படவேண்டும் என்றும் அனைத்துக்கட்சிகளின், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளை வெளியிடுமாறும் அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்துள்ள நிலையில் அரசின் அழைப்பு வெளிவந்துள்ளது.

மஹிந்தரின் அரசு பதவிக்கு வந்த பின்பு, சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்குமாறு சர்வதேசத்திடம் இருந்து அழுத்தம் வந்தபோதெல்லாம் சர்வகட்சிக் குழுவின் இறுதி யோசனைகளுக்காக காத்திருப்பதாகவே நொண்டிக் காரணம் கூறப்பட்டு வந்தது. சர்வதேசமும் அதில் நம்பிக்கை வைத்திருந்தது. இலங்கை அரசை நம்பியது.

ஆனால், இனவாதத்தில் ஊறிப்போய் உள்ள பெரும்பாலான கட்சிகளை உள்ளடக்கிய சர்வகட்சிக்குழு, தயாரிக்கும் இறுதி யோசனைகள், பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக அமையுமா என்பதைச் சர்வதேசம் சிந்திக்கத் தவறிவிட்டது.

சர்வகட்சிக் குழுவின் இறுதியோசனை தயாரிக்கப்பட்டு விட்டால் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுவிடும் என்று ஜப்பான் உட்பட சர்வதேச நாடுகள் பல நம்பிக்கை கொண்டுள்ளன போன்று தெரிகிறது.

அரசாங்கம் சர்வகட்சிக் குழுவின் இறுதி யோசனையை வெளியிடுவதற்கு ஏற்கனவே பல கால எல்லைகளை விடுத்து அவற்றை நீடித்துக்கொண்டு போகிறது.

சர்வகட்சிக்குழுவின் தீர்வுயோசனைகள் வெளிவந்தாலும் அதனை வைத்து சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கக்கூடிய அடிப்படை எதனையும் அதுகொண்டிருக்கப் போவதில்லை.

கிழக்கை வெற்றிகொண்டால் தனது தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு அப்பால் தனது அரசியல் பலத்தை அதிகரித்துவிடலாம் என்பது மஹிந்தர் அரசின் நம்பிக்கை.

ஆனால், கிழக்கில் தான் நடத்தி வரும் படை நடவடிக்கைதான் சமாதான முயற்சிகளுக்கு ஆப்புவைத்துள்ளது என்பதை அரசு சிந்திக்கத் தவறிவிட்டது.

மாவிலாறில் ஆரம்பிக்கப்பட்ட அரசின் படை நடவடிக்கை சம்பூர், வாகரை என்று தற்பொழுது தொப்பிகலயில் வந்துநிற்கிறது. தொப்பிகலயை சுற்றிவளைத்து முற்றுகையிட்டு விட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. தொப்பிகலயை கைப்பற்றிய வெற்றியை பெரிய அளவில் கொண்டாடுவதற்கும் அரச மட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அரசாங்கம், 2002 யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி படை நடவடிக்கைகள் மூலம் கிழக்கில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டு பேரினவாதக் கட்சிகளினால் தயாரிக்கப்பட்ட தீர்வுயோசனையை முன்வைத்து பேச்சுகளுக்கு அழைப்பு விடுத்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுவந்துவிடுமா?

தென்னிலங்கையில் உள்ள பிரதான கட்சிகள் அத்தனையுமே தமிழ்மக்களின் உரிமைகளுக்கு எதிராக நிற்கின்றன. சுதந்திரக்கட்சி கூட மாவட்ட சபைகள் மூலமே தீர்வுகாணப்படவேண்டும் என்கிறது.

ஆகவே, சர்வகட்சிக் குழுவின் இறுதி யோசனை எப்படி இருக்கப்போகிறது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் போவரை அரசாங்கம் கொழும்புக்கு அழைப்பது இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணுமாறு நெருக்குதல் கொடுக்கும் சர்வதேச நாடுகளை ஏமாற்றத்தான்.

# ஹக்கீமின் கடுப்புக்கு மங்களவின் மாத்திரை!

அரசில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீரவும் சிறிபதி சூரியாராச்சியும் ஐக்கிய தேசியக்கட்சி உட்பட பல்வேறு அரசியல்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து அரசுக்கெதிரான போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தயாராகிவருகின்ற நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வெளியிட்டிருக்கும் கருத்துகள் சகல தரப்பினரதும் கவனத்தை ஈர்த்துள்ளன.

கிழக்கு மாகாணத்தின் சாய்ந்தமருது, நிந்தவூர், காத்தான்குடி போன்ற இடங்களில் சென்றவாரம் நடைபெற்ற வைபவங்களில் கலந்துகொண்ட அமைச்சர் ஹக்கீம் சமகால அரசியல் பற்றியும் அதில் முஸ்லிம் காங்கிரஸ் வகிக்கும் பாத்திரம் குறித்தும் விவரித்திருக்கிறார்.

### மு.காவுக்கு கிராக்கி?

மகிந்த ராஜபக்ஷ அரசில் செல்லாக் காசாக ஒருமூலையில் கிடக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிர்வரும் காலங்கள் மிகவும் மவுசாக - கிராக்கியாக அமையப்போகின்றன என்பதை அவர் பெருமையாக சொல்லிக்கொண்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினதும் ஆதரவு விலக்கிக்கொள்ளப்படுமானால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆட்சியைத் தொடரமுடியாது எனவும் அப்படியொரு சூழ்நிலை ஏற்படுமாயின், நாடாளுமன்றத்தைக் கலைப்பதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறு வழிகிடையாது எனவும் மு.கா.தலைவர் ஹக்கீம் அடித்துக்கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராச்சி ஆகியோர் அரசைவிட்டு வெளியேறியதைத் தொடர்ந்து உருவாகியுள்ள அரசியல் சூழ்நிலையை தமக்குச் சாதகமாக நன்கு பயன்படுத்திக்கொள்வதற்கான காய்நகர்த்தல்களைச் செய்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தயாராகிவருகிறது என்பதையே தலைவர் ஹக்கீமின் கருத்துகள் உணர்த்துகின்றன.

அதனால்தான் ஒருபுறம் அரசுக்கு எச்சரிக்கையையும் மறுபுறம் மங்களவுக்கான சமிக்ஞையையும் விடுப்பதுபோன்று அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார். அதேவேளை இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கட்சியை ஒருபேரம் பேசும் சக்தியாக மாற்றியமைப்பதற்கு மு.கா.எம்.பிக்கள் ஆறுபேரும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

### வெறுப்புடன் காலம் கடத்தும் ஹக்கீம்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை இந்த சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் எவ்வித செல்வாக்கையும் செலுத்தமுடியாமல் பெயரளவிலேயே பங்காளிக்கட்சியாக இருந்து வருகின்றது. எந்தவொரு விடயத்தையும் முஸ்லிம் காங்கிரஸினால் சாதித்துக்கொள்ள முடியவில்லை.

மிகவும் அதிருப்தியுடனேயே இந்த அரசில் முஸ்லிம் காங்கிரஸ் ஒட்டிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக அதன் தலைவர் ஹக்கீம் மிகவும் வெறுப்புடன் நாட்களை எண்ணிக்கொண்டு இந்த அரசில் காலம் கடத்தி வருகின்றார்.

கட்சி எம்பிக்களை கட்டுக்கோப்புக்குள் வைத்துக்கொள்ள முடியாமல் - அவர்களது அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து - அரசில் இணைந்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு ஏற்பட்டது. அதன் விளைவை அவர் நிறைய அனுபவித்து - அலுத்துப்போய்விட்டனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு சந்திரிகா அரசில் நான்கு எம்.பிக்களைப் பறிகொடுத்தது போன்று இன்னுமொரு தடவை எஞ்சியிருக்கின்ற எம்.பிக்களையும் இழந்துவிட்டு தனிமைப்படவேண்டிய துர்ப்பாக்கியமான ஒருசூழல் தோன்றியபோதே அரசில் இணைவதற்காக அவர் தன் கட்சி எம்.பிக்களுடன் இணங்கிச்செல்லவேண்டி ஏற்பட்டது.

### எதிரிகளுக்கே முன்னுரிமை

'பிச்சைவேண்டாம் நாயைப் பிடி' என்ற இக்கட்டான சூழ்நிலையிலேயே அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் சேர்ந்துகொண்டது என்று கடந்தவாரம் சாய்ந்தமருதில் இடம்பெற்ற கூட்டத்தில் தலைவர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே அரச மேல் மட்டம் எம்மைக் கணக்கில் எடுக்காமல் - புறமொதுக்கிவருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். நீங்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமக்கு ஆதரவளிக்கவில்லை என்று சொல்லிச் சொல்லியே மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் எம்மைப் புறக்கணித்து வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அரச மேல் மட்டமும் அமைச்சர்கள் அதாவுல்லா, பேரியல் அஷ்ரப், ரிஷாத் பதியுதீன் போன்றவர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்துவருகின்றனர் தன்னையோ முஸ்லிம் காங்கிரஸை[illegible]ா சற்றும் கணக்கில் எடுக்காமல் திட்டமிட்டுப் புறக்கணித்து வருகின்றனர் என்பது ரவூப் ஹக்கீமைமிகவும் கவலைகொள்ளச் செய்துள்ளது.

அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ் இரண்டு எம்.பிக்களைக் கொண்டிருக்கிறது. அதில் அமைச்சர் அன்வர் இஸ்மாயில், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராவார். அதேபோன்று அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் நுஆவும் இரண்டு எம்.பிக்களையே கொண்டிருக்கின்றது. அதில் அமைச்சர் சேகு இஸ்ஸதீன், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் உறுப்பினராவார்.



**அஸ்லம் எஸ்.மௌலானா**

### பழிவாங்கப்படும் ஹக்கீம்!

ஆனால், ஆறு எம்.பிக்களுடன் அரசில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் காங்கிரஸுக்கோ தலைவர் ரவூப் ஹக்கீமுக்கோ கொடுக்கப்படாத மதிப்பு, மரியாதை முக்கியத்துவம் அமைச்சர்கள் பேரியலுக்கும் அதாவுல்லாவுக்கும் கிடைத்திருக்கின்றன.

இதேபோன்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் எனும் பெயரில் மூன்று எம்.பிக்களுடன் அரசில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர் றிஷாத் பதியுதீனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முக்கிய இடத்தை வழங்கியுள்ளார்.

ஏனெனில், இவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக முழு மூச்சுடன் செயற்பட்டவர்கள் என்பதும் அப்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியதுடன் அவரை அதிகாரத்தில் அமர்த்தவேண்டும் என்பதற்காக மஹிந்த ராஜபக்ஷவைக் கடுமையாக விமர்சித்துப் பிரசாரம் செய்தது என்பதும் இங்கு ஞாபகமூட்டத்தக்கதாகும்.

ஆகையினால் முஸ்லிம் காங்கிரஸைத் தன் அரசில் சேர்த்து அதன் தலைவருக்கும் ஏனைய எம்.பிக்களுக்கும் அமைச்சுப் பதவியை வழங்கித் தன்னோடு வைத்துக்கொண்டே அவர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பழிவாங்கி வருகின்றார் என்பதே உண்மையாகும்.

### விடிவுக்கான தேடல்

இதனை நன்கு அனுபவித்து - உணர்ந்த தன் வெளிப்பாடாகவே தனது மனக்கசப்புகளையும் அதிருப்திகளையும் மனத்தாங்கல்களையும் மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தி - அவர்களின் அனுதாபங்களுடன் அங்கீகாரத்தையும் பெற்று - முஸ்லிம் காங்கிரஸின் விடிவுக்கான தேடல்களை மேற்கொள்வதற்கான ஆரம்பமுயற்சியில் தலைவர் ஹக்கீம் இறங்கியுள்ளார்.

'பிச்சைவேண்டாம் நாயைப் பிடி' என்ற சூழ்நிலை காரணமாக அரசில் இணைந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸுக்கு மங்கள - சிறிபதி வெளியேற்றத்தின் பின்னர் ந[illegible] தோர் காலம் கனிந்து வருகிறது என்று - அதன் தலைவர் ஹக்கீம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்தி - சரிந்து வீழ்ந்து கிடக்கும் முஸ்லிம் காங்கிரஸை நிமிர்த்தி எடுப்பதற்கு கட்சி எம்.பிக்களும் போராளிகளும் ஒற்றுமையுடன் தன்னோடு கைகோத்துச் செயல்படுவதற்கு முன்வரவேண்டும் என்று அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

### அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம்

புதிய அரசியல் அரங்கில் தமது கட்சியின் பாத்திரம் முக்கிய இடத்தை வகிக்கும் என நம்பும் மு.கா.தலைவர் ஹக்கீம், மங்கள சமரவீர தலைமையிலான சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவுடன் பேச்சு நடத்தவதற்கு - தயாராகி வருகிறார் என அறிய முடிகிறது. இதன்மூலம் மஹிந்த அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் ஒன்றைக் கொடுப்பதே ஹக்கீமின் முக்கிய நோக்காகக் கருதப்படுகிறது. சென்ற வியாழக்கிழமை (2007-07-05) அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா.வுடன் மங்கள சமரவீரஅணியினர் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸுடனும் மங்கள அணி பேச்சு நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலைத் தொடர்ந்து மு.கா.எம்.பிக்கள் நால்வரைப் பிரித்தெடுத்து தமது கட்சியைக் கூறு போட்ட சூத்திரதாரிகள் மங்கள சமரவீரவும் சிறிபதியுமே என்று கூறியுள்ள ரவூப் ஹக்கீம் அதனை மறக்க முடியாவிட்டாலும் மன்னிக்கத் தயாராக இருக்கின்றோம் எனத் தெரிவித்து பேச்சுக்கான சமிக்ஞையைக் காட்டியுள்ளார்.

இவ்விவகாரம் பற்றிய மேலதிக விவரங்களை அடுத்தவாரக் கட்டுரையில் ஆராயலாம். அப்போது மங்கள - ஹக்கீம் சந்திப்பும் நடந்துமுடிந்திருக்கும் என எதிர்பார்க்கலாம்.



# ஜூலை 1983 – ஜூலை 2007 – எதிர்விளைவுகள்!



அன்றைய ஜே. ஆர் அரசினால் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பு நடத்தப்பட்டு, இந்த 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் இருபத்திநான்கு ஆண்டுகள் ஆகின்றன. இந்தத் தமிழின அழிப்பினூடாக தமிழீழ மக்களின் பொருளாதாரமும், இந்தியத் தமிழர்களின் பொருளாதாரமும், மலையகத் தமிழர்களின் பொருளாதாரமும் சேர்த்தே அழிக்கப்பட்டன.

முதன் முறையாக உலக நாடுகளையும் உலுக்கி விட்ட இந்தத் தமிழின அழிப்பானது, பௌத்த சிங்கள, பேரினவாதம் எதிர்பார்க்காத விளைவுகளையும் கொண்டு வந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர் ஜெயவர்த்தனாவிலிருந்து, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இன்றைய ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ வரை, சிங்கள-பௌத்த பேரினவாத அரசுகள் மேற்கொண்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகள், உண்மையில் எதிர் விளைவுகளைத்தான் கொண்டு வந்துள்ளன. இந்த எதிர் விளைவுகள் குறித்துச் சில கருத்துக்களை முன் வைப்பதுவே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்...!

முதலில், ஜூலை 83 தமிழின அழிப்பினை ஒரு மீள் பார்வையூடாக நோக்குவது பொருத்தமானதாக இருக்கும் என நம்புகின்றோம்.

அன்றைய ஜூலை - கறுப்பு ஜூலை 83 - தமிழின அழிப்பு, சில அடிப்படையான விடயங்களைக் காரணத்தில் கொண்டு சிறிலங்கா அரசினால் நடத்தப்பட்டதாகும். அதில் ஒரு முக்கிய காரணம், தமிழ் மக்களின் பொருளாதாரத் தளத்தைச் சீர்குலைப்பதாகும்.

அன்றைய தினங்களில்- அதாவது 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதக் கடைசி வாரத்தில் - சிங்கள அரசால் அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் சொத்துக்களின் மதிப்புகள் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பீடு செய்யப்பட்டாலும் உண்மையான இழப்பு இன்னும் பல மடங்காகும் என்றே கருதப்படுகிறது.

ஒரு தர்க்கத்திற்காக, 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற கணிப்பீட்டை ஏற்றுக்கொண்டாலும் கூட, இருபத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்பு அது ஒரு மிகப்பாரிய இழப்பு என்பதில் ஐயமில்லை. அதைத்தவிர இலங்கை, பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற தினத்திலிருந்து மிக அண்மைக்காலம் வரை, மாறி மாறி வந்த சிங்கள அரசுகள் தமிழினத்தின் மீது மேற்கொண்ட பொருளாதார தாக்குதல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இச் சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழீழ மக்கள் மீது தொடர்ந்து மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கைகளும், விதித்த பொருளாதாரத் தடைகளும் தமிழீழ மக்களின் வாழ்க்கையை ஓர் இன்னல் மிக்க, துயரம் மிக்க வாழ்க்கையாக மாற்றின.

1983 ஆண்டு இனக்கலவரங்களுக்குப் பிறகு நடைப்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இலங்கைத்தீவில் சுமார் 65, 000 பேர்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்றும் சுமார் 8 லட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என்றும் சுமார் 7லட்சம் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர் என்றும் உலகவங்கியின் அறிக்கை ஒன்று தெரிவித்து இருந்தது. அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்காக, சிங்கள அரசுள் ஆறு பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவழித்துள்ளன என்று பொருளாதார நிபுணர்கள் அன்று மதிப்பிட்டிருந்தார்கள்.

இது பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த மதிப்பீடாகும். இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், பாதுகாப்புச் செலவிற்காக மட்டும் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் சிறிலங்கா அரசு ஒதுக்கியுள்ளது. இது 139.6 பில்லியன் ரூபாய்களாகும். 1977 ஆம் ஆண்டு 0.75 பில்லியன் ரூபாய்களைப் பாதுகாப்புச் செலவிற்காகப் பயன்படுத்திய சிறிலங்கா அரசு 1986 ஆம் ஆண்டு ஆறு பில்லியன் ரூபாய்களைப் பாதுகாப்புச் செலவிற்கு பயன்படுத்தியது. இது படிப்படியாக வளர்ந்து, இன்று 2007 இல் 139.6 பில்லியன் ரூபாய்களைச் சிறிலங்கா அரசு தனது பாதுகாப்புச் செவிற்காகப் பயன்படுத்த போகிறது. இன்றும் மேலும் பல பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவிகளாகப் பெற்று, அவற்றினூடாக மேலும், மேலும் நவீன ஆயுதங்களை வாங்குவதற்குச் சிறிலங்கா அரசு முயன்று வருகின்றது.

அன்புக்குரிய வாசகர்களே! இந்தக் வேளையில் நாம் ஒரு விடயத்தை கருத்தில் கொள்ள விழைகின்றோம். 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம், அமெரிக்க அரசின் அன்றைய உதவிச் செயலர் றிச்சட் ஆமிடேஜ் ஒரு விடயத்தைத் தெரிவித்திருந்தார். அது முக்கியமான விடயமாகும்.

சிறிலங்காவுக்குச் செய்து வந்த உதவிகள் யாவற்றையும் நிறுத்தி விடுவதற்கு அமெரிக்கா எண்ணியிருந்த வேளையில் தான் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார் என்றும் அதன் காரணமாக சிறிலங்காவிற்கு உதவிகளை நிறுத்துகின்ற தன்னுடைய எண்ணத்தை அமெரிக்கா மாற்றிக்கொண்டது என்றும் அமெரிக்க அரசின் அன்றைய உதவிச் செயலர் றிச்சட் ஆமிடேஜ் தெரிவித்திருந்தார். இதற்குரிய அடிப்படைக் காரணம் அன்றைய சிறிலங்கா அரசு சமாதானப் பேச்சு வார்த்தைக்கும், யுத்த நிறுத்தத்துக்கும் விரும்பம் தெரிவித்ததே ஆகும்.

அன்புக்குரிய வாசகர்களே! ஜூலை83- தமிழின அழிப்பு - தமிழ் மக்கள் மீது திட்டமிட்டுப் பிரயோகிக்கப்பட்டதில் சில அடிப்படைக் காரணங்கள் இருந்ததென்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தோம். அதில் ஒன்று நாம் இப்போது குறிப்பிட்டவாறு தமிழரின் பொருளாதாரத் தளத்தை அழிப்பதாகும். ஆனால் தன்வினை தன்னைச் சுடும் என்ற முதுமொழிக்கிணங்க சிறிலங்கா அரசு தன்னைத்தானே பொருளாதார ரீதியில் எரித்துக் கொண்டது. இதனை மனதில் நிறுத்திக் கொண்டு ஜூலை 83இனக்கலவரத்தின் இன்னுமொரு முக்கிய காரணியைச் சற்று விரிவாகத் தாக்கிக்க விழைகின்றோம். ஜூலை 83 இனக்கலவரத்தின்மூலம் தமிழ் மக்களின் மனவலிமையை அழித்து அவர்களுக்குக் கடுமையான, கொடுமையான வன்முறை ஊடாக ஒரு பாடத்தைப் புகட்டுகின்ற

அவுஸ்திரேலியாவில் இருந்து
**சபேசன்**

முயற்சியை அன்றைய சிறிலங்கா அரசு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு மேற்கொண்டது. அதாவது உளவியல் ரீதியாக தமிழர்கள் தாங்கள் ஒரு நிர்க்கதியான இனம், தங்களைக் காப்பாற்றுவதற்கு எவரும் இல்லை, தாங்கள் எந்நேரமும் சிங்களவர்களால் தாக்கப்பட்டு அழிக்கப்படலாம், தாங்கள் எப்போதும் எந்நேரமும் சிங்கள- பௌத்த ஆட்சியின் கருணையின் (?) கீழ், தயவின் கீழ் வாழ வேண்டிய இரண்டாம் தரக் குடி மக்கள்- என்கின்ற ஏக்கமான எண்ணத்தை தமிழ் மக்களின் நெஞ்சங்களுக்குள் ஆழமாகப் புதைக்கும் நோக்கோடும், இந்த ஜூலை 83 இனக்கலவரம் நடத்தப்பட்டது.

அன்றைய சிறிலங்கா அமைச்சரான காமினி திசாநாயக்காவின் உரையை நாம் எடுத்துக் காட்டாக கொள்ளலாம்.

1983 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதியன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரான காமினிதிசாநாயக்கா பின்வருமாறு கொக்கரித்தார். ஆமாம் கூறவில்லை - கொக்கரித்தார்- என்பதே சரியான சொல்லாகும்.

தமிழ் மக்களைப் பார்த்து காமினி திசாநாயக்க இவ்வாறுதான் கொக்கரித்தார்

" உங்களைத் தாக்கியது யார்?- சிங்களவர்கள்!

உங்களைக் காப்பற்றியது யார் !- சிங்களவர்கள்!

ஆமாம் ! எங்களால் தான் உங்களைத் தாக்கவும் முடியும், காப்பற்றவும் முடியும்!

உங்களைக் காப்பற்ற இந்திய இராணுவம் இங்கே வருமா இருந்தால் அதற்கு 14 மணித்தியாலங்கள் தேவை! ஆனால் 14 நிமிடங்களுக்குள் இந்த நாட்டினில் உள்ள ஒவ்வொரு தமிழனின் இரத்தத்தையும், இந்த நாட்டுக்காக நாம் அர்ப்பணிப்போம். உங்களுடைய நெற்றிகளில் நீங்கள் ஒரு யாழ்ப்பாணத் தமிழன் என்றோ, மட்டக்களப்புத் தமிழன் என்றோ, மலையகத் தமிழன் என்றோ, இந்துத் தமிழன் என்றோ, கிறிஸ்தவ தமிழன் என்றோ எழுதப்படவில்லை! எல்லோரும் தமிழர்கள்தான் !" இவ்வாறு அமைச்சர் காமினி திசாநாயக்கா 1983 இல் கொக்கரித்தார்.

ஆனால், பின்னாளில் தமிழ்மக்களின் அமைதிகொல்லும் படையாக வந்திறங்கிய இந்திய இராணுவத்தையும் ஸ்ரீலங்கா இராணுவத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடித்து துரத்தியதை வரலாறுகூட வியந்துதான் கூறும்.

1983 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதியன்று 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தீர்க்கதரிசனமான கருத்தொன்றைக் கீழ்வரும் பொருட்பட எழுதியது.

'சேர்ந்து வாழ்வது இவ்வளவு கடினமென்றால் ஏன் பிரிந்து வாழமுடியாது? தமிழ்மக்களுக்கு தனி ஆட்சி கொடுத்தால் என்ன? ஐக்கியநாடுகள் சபையில் உள்ள பல நாடுகள் போல் தமிழ்மக்களும் தாங்கள் ஒரு தனித்துவமான தேசம் என்பதற்குரிய சரியான சான்றுகளை வைத்திருக்கிறார்கள். இந்த ஒருங்கிணைந்த இலங்கைத் தீவில் சிங்களவர்கள் மட்டுமே அதிகாரங்களை வைத்திருக்கின்றார்கள். இந்த அதிகாரங்களை கொண்டுள்ள சிங்களவர்களுக்கு தமிழர்கள் இந்த ஒருங்கிணைந்த இலங்கையில் வாழமுடியாத அளவில் நடத்தப்பட்டிருக்கின்றார்கள் என்ற அறிவாவது உள்ளதா?' - என்று 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை 1983 ஆம் ஆண்டிலேயே எழுதியிருந்தது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற தமிழினப் படுகொலைகளின் மூலம் உலகநாடுகள் யாவும் முதன்முறையாக விழித்தெழுந்தன. ஆனால், ஒரே ஒரு நாடு மட்டும் விழித்தெழவேயில்லை. விழித்தெழாத அந்த நாடு வேறெந்த நாடும் அல்ல, சிங்களப் பௌத்தஸ்ரீலங்காவேதான்!

அதன் அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அன்று நடந்து கொண்ட விதமும் பேசிய பேச்சுகளும் ஒரு சிங்களப் பௌத்த பேரினவாதியின் சிந்தனைகளை அப்படியே பிரதிபலித்தன. தமிழினப் படுகொலைகள் நடைபெற்று தமிழர்களின் சொத்துகளும் நாசமாக்கப்பட்ட, நாசமாக்கப்படுகின்ற அந்தவேளையில் அன்றைய ஐக்கிய தேசியக்கட்சியின் அரசு நடந்துகொண்ட விதங்கள் ஏற்கனவே ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை வாசகர்களுக்கு இங்கே தருவதற்கு விழைகின்றோம்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி இரவிலிருந்து தொடர்ந்து இலங்கைத் தீவே எரிந்துகொண்டிருந்தபோதும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மௌனமாகவே இருந்தார். ஐந்து கோரமான நாட்களுக்குப் பின்னர்தான் அதாவது - ஜூலை 28 ஆம் திகதி வியாழக்கிழமை இரவுதான் ஜனாதிபதி ஜெயவர்த்தனா முதன்முதலாக இனக்கலவரம் குறித்து நாட்டுமக்களுக்கு தொலைக்காட்சியில் உரையாற்றினார். அப்போதுகூட, தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்டு வருகின்ற இந்த இனப்படுகொலைகள் குறித்து அவர் வருத்தம் தெரிவித்தோ, கவலை தெரிவித்தோ அனுதாபம் தெரிவித்தோ ஒருவார்த்தை கூட பேசவில்லை. மாறாக இந்தக் கோரமான இனப் படுகொலைகளை நியாயப்படுத்தும் விதத்திலேயே ஜனாதிபதி ஜே.ஆரின் உரை அமைந்திருந்தது.

1956 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்மக்கள் மீது சிங்கள மக்கள் கொண்ட நம்பிக்கையின்மை வளர்ந்து வந்ததன் வெளிப்பாடே இந்த இனக்கலவரங்கள் என்றும் இவ்வாறான மனக்குறைகள் சிங்கள மக்களுக்கு இருக்கும் பட்சத்தில் அவர்கள் (அதாவது சிங்களவர்கள்) வன்முறையில் ஈடுபடுவது எளிதான செயலாகும் என்றும் 77 வயது நிரம்பிய ஸ்ரீலங்கா ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

(27 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியை அச்சுறுத்தும் சர்வதேச சவால்கள்

இரா.புத்திரசிகாமணி





சர்வதேச மட்டத்தில் இடம்பெறும் தில்லுமுல்லுகளிலும் சட்டவிரோத சம்பவங்களிலும் இலங்கைக்கு செம்பியன் கப் கிடைத்துள்ளது. இது தொடர்பான சான்றிதழை சர்வதேச் சட்டவல்லுநர்கள் சபையின் செயலாளர் நாயகம் நிக்கலஸ் கோவல் வழங்கியுள்ளார்.யாரோ கூறியதைக் கேட்டோ அல்லது எவருடைய சிபாரிஸின் பேரிலோ இந்தக் கேவலமான சான்றிதழை அவர் வழங்கவில்லை. அனைத்து விடயங்களையும் அக்குவேறு ஆணி வேறாக ஆராய்ந்த பின்னரே தனது கருத்தை நிக்கலஸ் கோவல் வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற மூதூர் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17பேரின் படுகொலை சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திவிட்டது ஒன்றும் புதுக்கதை அல்ல.

ஆனால், இதனைச் சமாளிக்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட ஆணைக்குழுவையும் விசேட விசாரணைக்குழுவையும் நியமித்து சர்வதேசத்தின் கழுகுப்பார்வையில் மண்ணைத் தூவப் பார்த்தார்.

அதுவே இன்று ஜனாதிபதிக்கு வில்லங்கமாகிப் போய்விட்டது.

அதாவது படுகொலை செய்யப்பட்ட பணியாளர்களின் பிரேத பரிசோதனையின் போது அவர்களின் தலையில் இருந்து எடுக்கப் பட்டவை 5.56 மில்லிமீற்றர் தோட்டாக்கள். இவை சான்றுப் பொருட்களாக பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன.

ஆனால், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவின் விசாரணையின்போது இந்தத் தோட்டாக்கள் 7.62 மில்லிமீற்றர் தோட்டாக்களாக மாறிவிட்டதுதான் புதுமை.

அரசபடையினர் விசேடமாக இராணுவத்தினர் மட்டுமே பயன்படுத்தப்படும் 5.56 மில்லிமீற்றர் தோட்டாக்களுக்குப் பதிலாக 7.62 மில்லிமீற்றர் தோட்டாக்களை வைத்தது யார்?

ஒரு வழக்குத் தொடர்பான சான்றுகளையும் தடயப்பொருட்களையும் இரகசியப் பொலிஸார், அரச மருத்துவ சட்ட அதிகாரி மற்றும் அரசாங்க ஆய்வாளர்கள் மட்டுமே பார்வையிடவோ அல்லது பரீட்சிக்கவோ முடியும்.

இப்படியான நிலையில் தடயப்பொருள் மாற்றிவைக்கப்பட்டது எப்படி?

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அதுவும் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற இப்படுகொலைகளுக்கு அரசபடையினரின் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் ஊர்ஜிதமாகிஉள்ளது. சம்பந்தப்பட்ட வர்கள் எவராக இருந்தாலும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தும்படி ஆரம்பகட்டத்தில் ஜனாதிபதியே உத்தரவிட்டிருந்தார்.

முழு உலகமே உற்று நோக்கிக்கொண்டிருக்கும்போது தடயப்பொருளான தோட்டா யாரால் மாற்றிவைக்கப்பட்டது?கைக்கூலிகளின் கைவண்ணமா? அல்லது அதிஉயர் அதிகார பீடத்தின் கட்டளையின்படி மாறாட்டம் செய்யப்பட்டதா என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது. எனவே, மீண்டும் மீளாய்வுசெய்யப்பட வேண்டும் என சர்வதேச சட்டவல்லுநர் சபையின் செயலாளர் நாயகம் நிக்கலஸ்கோவல் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது இலங்கையின் நீதி மற்றும் நிர்வாகத்துறைக்கு விடுக்கப்பட்டுள்ள பெரிய சவாலாக அமைந்துவிட்டது. அத்துடன் சர்வதேச சமூகம் ஜனாதிபதிக்கு நேரடியாக விடுத்துள்ள சவாலும் ஆகும்.

சவால் என்றவுடன் இங்கே மற்றும் ஒரு விடயம் ஒருவிடயம் கவனத்திற்கு வருகின்றது.

அதாவது வருடாவருடம் அமெரிக்க அரசாங்கம் உலகநாடுகளில் ஏற்படும் வறுமை ஒழிப்பு, உட்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், உணவு போன்ற விடயங்களுக்காக,'சவால் நிதியம்', என்ற பெயரில் கோடிகோடியாக டொலர்களை வாரிவழங்குவது வழமை.

இம்முறை நடந்தது என்ன? புத்தாயிரம் ஆண்டுக்கான சவால் நிதியத்தைப் பெறும் நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கையின் பெயர் நீக்கப்பட்டுள்ளது. இது ஒரு மாறாத அவமானம். அமெரிக்காவின் சவால் நிதியம் தடைப்பட்டதால் இலங்கைக்கு கிடைக்கவிருந்த பலநூறுகோடி ரூபாய்களை இழந்துள்ளோம் எனச் சர்வதேச தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வருத்தம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பிரித்தானியா, ஜேர்மன், நெதர்லாந்து ஆகிய நாடுகள் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை நிறுத்திவிட்டன. இப்பொழுது அமெரிக்காவும் இந்த முடிவை எடுத்திருப்பது பேரிடியாக அமைந்தவிட்டது.

இவை எல்லாம் கூறியுள்ள காரணம் என்ன தெரியுமா? சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட இலங்கை நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வில்லை.

கடத்தலும், கப்பம் பெறுதலும், மனிதப்படுகொலைகளும் நாளாந்தம் இடம்பெறுகின்றன.சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் கும்பல்களை மடக்கிப்பிடிக்கவோ அல்லது இவ்வாறான செயல்களைக் கட்டுப்படுத்தவோ அரசு தவறிவிட்டது. மனித உரிமை மீறல்கள் அப்பட்டமாக இடம்பெறுகின்றன என்று புட்டுக்காட்டியுள்ளது. இலங்கை தொடர்பாக சர்வதேச சமூகத்தின் அதிருப்தியை இவை ஊர்ஜிதப்படுத்திஉள்ளன.

சர்வதேச மட்டத்தில் தான் இப்படி என்றால் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள நிலை அதைவிடச் சிக்கலாக இருக்கின்றது.

இன்று பொதுமக்களின் வாழ்க்கை நிலை வறுமைக்கோட்டின் கீழே தள்ளப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு விஷம்போல் ஏறிவிட்டது. ஏழைமக்களின் அன்றாட வாழ்வாதாரமான மா, சீனி, மண்எண்ணெய் என்பனவற்றின் விலை விஷம்போல் ஏறிவிட்டது.

எண்ணெய் விளக்கில் வெளிச்சம் பெற்று வந்த குடிசைகள் இன்று இருளில் மூழ்கிவிட்டன. பசி பட்டினியால் ஏற்படும் சாவுகளும் வெகுதூரத்தில் இல்லை.

அன்றாடம் தனியார் மற்றும் அரச பேருந்துகளின் மூலம் தொழிலுக்கு வரும் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் ஒரு கோடிக்கும் அதிகமானோர் பெரும் அவதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

வாழ்க்கைச் செலவுதான் இப்படி அதிகரித்து விட்டதே தவிர ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் அரைச்சதம் கூட கூட்டப்படவில்லை. தேவைகளைச் சமாளிக்கமுடியாமல் குடும்பம் குடும்பமாக தற்கொலை செய்துகொண்டாலும் சந்தேகப்படுவதற்கு இல்லை.

இலங்கை இன்று மற்றும் ஒரு சோமாலியாவாகவும் கம்போடியாவாகவும் மாறிவருகின்றது.

சர்வதேச சந்தையில் 86டொலராக இருந்த எண்ணெய் விலை 83 டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால், இங்கு எண்ணெய் விலை 31சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உண்மைவிலை என்ன? வருடாவருடம் பலகோடி ரூபாய்களை ஏப்பம்விட்டு நட்டத்தில் இயங்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுவந்த மானியத்தை திறைசேரி நிறுத்திவிட்டது. இதனால், ஏற்பட்ட பாதிப்பை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொதுமக்கள் மீது சுமத்திவிட்டது. பொதுமக்களின் பாவனைக்கு வழக்கப்பட்ட மண்எண்ணெய் மற்றும் டீசல் எண்ணெய் என்பவற்றுக்கான மானியம் நிறுத்தப்பட்ட தாலேயே இவற்றுக்கான விலையை அதிகரித்துள்ளோம் என்கிறார் எரிபொருள் அமைச்சர் பௌஸி.

கனவான்கள் கழுத்தில் டைகட்டிக்கொள்ள ஏழை மக்களின் கழுத்தில் சுருக்குக் கயிற்றை மாட்டிவிட்டனர்.

வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கி மக்கள் மூச்சுவிடமுடியாமல் திணறிக்கொண்டிருக்கும் போது ஜனாதிபதி சர்வதேச சமூகத்தின் சவால்களுக்கு முகம்கொடுக்கமுடியாமல் திக்குமுக்காடிப்போய் நிற்கின்றார்.

ஆளும்கட்சியை விட ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சிகளுக்கே மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகம்.

ஆளும் தரப்பினர் விடும் தவறுகளைத் தட்டிக்கேட்பது பிரதான எதிர்க்கட்சியே. ஆனால், நாடாளுமன்றத்தில் எதிரணி ஆசனத்தில் அமர்ந்துகொண்டால் மட்டும் போதாது. எதிர்க்கட்சிகள் கொள்கை முரண்பாடுகளை மறந்து நாட்டின் நலன்கருதி ஒன்றுபட்டு எதிர்க்கவேண்டும்.உறுதியான ஓர் எதிர்க்கூட்டணியை உருவாக்கவேண்டும்.

நாற்காலிக்கும் பதவிக்கும் தன்மானத்தை அடகுவைத்து அரசுக்கு முட்டுக்கொடுத்துக்கொண்டு அற்பசுகம் காணும் நமது அரசியல் வாதிகள் இருக்கும்வரை நாட்டிற்கும் நமக்கும் விமோசனம் இல்லை.

---

## ஆளில்லா ஊருக்கு...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசிற்கு இருப்பதாக மேற்குலகம் கணிப் பதையே, அவர்களின் அசமந்த போக்கு புலப்படுகிறது.

ஆதிக்க சக்தியாகத் திகழ வேண்டுமெனத் தமக்குள் வெட்டி ஓடும் சர்வதேச நாடுகளுக்கு, தமிழ் மக்களின் இயல்பு வாழ்வு குறித்து அக்கறை இருப்பதாகக் கற்பிதம் கொள்வது, மடைமைத்தனமாகும். சீனாவை ஓரங்கட்ட இந்தியா ஆயுதங்களை வழங்க வேண்டுமென இந்தியப் பத்திரிகைகளும், கருணா குழுவை அடக்கினால் அரைவாசிப் பிரச்சினை தீருமென அமெரிக்காவும் கருதும் நிலையில், பேசித்தீருங்களென்று கூறுவதெல்லாம் வெறும் கண்துடைப்பு நாடகமே.

ஏ9 பாதையைத் திறந்துவிடும்படி மஹிந்த விற்கு அழுத்தம் கொடுக்க முடியாத நிலை யிலுள்ள ஜப்பான், மக்கள் இல்லாத சம்பூருக்கு நெடுஞ்சாலை அமைப்பது, விநோதமானது.

தமிழர்கள் நண்டு சுட்டு உயிர் வாழ்ந்த வாகரையில் சிங்க இறால் பண்ணை அமைத்திட ஜப்பான் விரும்பலாம்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர, அமெரிக்க ஜனநாயகம் தன் நாட்டின் மீது அணுகுண்டுகளை வீசியதாக நியாயம் கற்பிக்கும் ஜப்பானியபாதுகாப்புத்துறை அமைச்சரிடம் 'தமிழ் மக்களின் அவல வாழ்வு குறித்து அக்கறை கொள்' எனக் கேட்பது அபத்தமானது.

லட்சக்கணக்கான தமது மக்களின் அழிவிற்கே ஒருலகக் கோட்பாட்டினுள் விடை தேடும் ஜப்பானிய அரசு நியாயவாதியாக இருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை.

மேற்குலகானது எப்பொழுதுமே தமது அழிவு ஆயுத விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை ஆசியாவிலோ அல்லது மத்திய கிழக்கு நாடுகளிலோதான் பரீட்சித்துப் பார்க்க விரும்புகின்றன.

தமது வெள்ளை இனம் வாழும் ஹிட்லரின் ஜேர்மனியில் போட்டிருக்க வேண்டிய அணுகுண்டை ஜப்பானின் தலையில் விழுத்தியது. நேபாம் (Napalm)), கிளஸ்டர் (Cluster) குண்டுகளை வியட்நாமில் விதைத்துப் பார்த்தது அது.

குறுகிய தூர துல்லியமான எறிகணை வீச்சுக்களை ஈராக்கில் பிரயோகித்தது.

தமது நவீனங்களைப் பரீட்சிக்கும் இடமாக சிறிலங்கா அமையாதபடியால் வேறு இடங்களைத் தேடி அலைகிறது மேற்குலகம்.

ஆகவே இன்றைய நிலயில் கைப்பற்றப்பட்ட கிழக்கின் பிரதேசங்களை பொருளாதார ரீதியாகப் பலப்படுத்தும் அரசின் திட்டத்திற்கு ஜப்பானின் ஆதரவையும் அதை இராணுவ ரீதியாக பலமாக்க இந்தியா, சீனாவின் உதவியையும் பெற்றவாறு, யாழ்குடாவை அசைக்க முடியாத வலிமை பொருந்திய தளமாக மாற்ற மேற்குலகிடம் கால அவகாசம் கேட்கிறது மஹிந்த அரசு.

கிழக்கையும் குடா நாட்டையும் அரச இராணுவ வல்லாண்மை பொருந்திய பிரதேசமாக்கி, வன்னியை நீண்ட கால முற்றுகைக்குள்ளாக்கும் மூலோபாயமே அரசினால் முன்னெடுக்கப்படுகிறது.

நைஜீரியா நாட்டில் இவ்வகையான முற்றுகைக்குள்ளானதொரு தேசிய இனம் பயாஃப்ரா (Biafra) வாகும்.

விடுதலைக்காகப் போராடிய இம்மக்கள் சமூகத்தை, பொருளாதார முற்றுகைக்குள்ளாக்கி பட்டினிச் சாவுக்கும் பாரிய தாக்குதலுக்கும் இலக்காக்கி, அடிபணிய வைத்த கறைபடிந்த தேசியவிடுதலை வரலாறு 1970 ஜனவரி 15ஆம் திகதி நைஜீரியாவில் நடந்தது.

ஆயினும் தோல்வியுற்ற வரலாறு ஒன்றுதான், வெற்றிபெற்ற வரலாறுகள் ஏராளம்.

வியட்நாமிய போரியல் வரலாற்றை ஆய்வு செய்தால் கிழக்கை விட குடாநாட்டின் முக்கியத்துவம் தெளிவாகப் புரியப்படும்.

அனுசரணைகளும், இணைத்தலைமை களும், பிராந்திய வல்லரசுகளும் மஹிந்தவின் இறுதி மூலோபாயத்தை எப்போதோ புரிந்து விட்டன.

வன்னி நோக்கிய இறுதி முற்றுகையை மஹிந்த மேற்கொள்ளும் வரை இவர்கள் வாய் திறக்கமாட்டார்கள் .

ஏ9 பாதை மூடப்பட்டாலும், படுவான்கரை மறிக்கப்பட்டாலும், மனித உரிமை மீறல் எல்லை மீறிப்போனாலும், ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல் அதிகரித்தாலும் இந்தச் சர்வதேசம் கண்மூடியபடியே இருக்கும்.

வன்னி இன்னுமொரு பயாஃப்ரா நிலையை எட்டும்வரை கண்டனங்களும் , கவலை தெரிவிப்புகளுமே இணைத்தலைமை நாடுகளின் மந்திர உச்சாடனமாக அமையும்.

இவர்கள் அடிக்கடி வந்துபோவது அரசின் இராணுவ வெற்றிகளை பகுப்பாய்வு செய்வதற்கே.

இவர்கள் மொத்தமாக தமது நாடுகளில் தடைவிதித்ததும் இதனடிப்படையிலேயே.

இன உரிமைக்காகப் போராடும் மக்கள் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்படுவதும் இவர்களின் ஜனநாயக தபால் கந்தோரில்தான் இடம்பெறும்.

இறுதிவரை உறுதியாக இருந்து, இந்தச் சர்வதேசப் பிதாமகர்களுக்கு, புதிய ஒளியினைப் பாய்ச்சத்தான் போகிறது தமிழரின் விடுதலைப் போராட்டம் .

# ஹவாயில் படுகொலைகள்!



ஹொனலுலு.

ஹவாய் விடுதியில் நடனமும் பாட்டும், ஆரவாரமும் முடிவதாகவில்லை. நடுச்சாமமும் கடந்துவிட்டது. தாலியா மெசி களைத்துப்போனாள். ஆனால், தாலியாவின் கணவனான கடற்படை வீரன் அலுத்துப்போனவனாகத் தெரியவில்லை.

அவள் கூப்பிட்டாள். அவன் மறுத்தான்.

"ஏன் டார்லிங்! இன்னும் கொஞ்சநேரம் இருப்போமே".

"ஐயோ! எனக்கு ரொம்பவும் களைத்துவிட்டது. நான் போகப்போகிறேன்".

"சரி போ".

தாலியாவுக்கு கோபம் உண்டாயிற்று. உடைகளை சரிசெய்துகொண்டு, கைப்பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்.

இருபது வயதான தாலியா விடுதியைவிட்டு வெளியில் வந்தபோது உலகம் அமைதிக்கோலம் பூண்டிருந்தது.

விளக்குகளின் மங்கலான வெளிச்சத்தில் வீதி வெறிச்சோடிக் கிடந்தது. குளிர்வாடை வீசுகிறது. தன்னந் தனியாகப் போவதற்கு அச்சமாகவிருந்த போதும் 'சே! என்ன பயம் வீடு கொஞ்சம் தொலைவில்தானே இருக்கிறது. நடந்தே போய்விடலாம்' என்று நினைத்தாள்.

கொஞ்சம் தொலைவு நடந்ததும் உற்சாகமாகவிருந்தது. குளிர்வாடை கிறுகிறுப்பை ஏற்படுத்தியது. விடுதியில் புகைமண்டலத்தில் நடனமாடிய களைப்பு பறந்துவிட்டது.

அந்த உற்சாக நடையில் -

தன் பின்னால் ஓசையின்றி மெதுவாக வந்து ஒரு வாகனம் நிற்பதை அவள் பொருட்படுத்தவில்லை.

கார் நின்றது.

கதவுகள் திறந்தன.

நான்கு ஆஜானுபாகுவான ஆசாமிகள் கீழே குதித்தார்கள். வேகமாக அவளைச் சூழ்ந்தார்கள். அலாக்காக தூக்கினார்கள். காரின் பின்சீட்டில் டமாரென போட்டார்கள்.

கார் பறந்தது.

மிருகங்களுக்கு ஊசி அடிக்கும் அந்த மனித சஞ்சாரம் அற்ற இடத்தில் கார் நின்றது. தாலியா வெளியில் இழுத்தெடுக்கப் பட்டாள்.

ஜோ காஹாவ் -

அந்தப் பிரதேசத்தின் புகழ்பெற்ற குத்துச்சண்டை பயில்வான் அவளை நெருங்கினான். அவனை அவள் அறிவாள். பயங்கரமான சண்டைக்காரன். இவன் என்ன என்னை........ என்று அவள் நினைப்பதற்கு முன்னரே...

படீர் ...ஓர் இடித்தாக்குதல்.

அவள் நாடி உடைந்து மல்லாக்காக புற்தரையில் விழுந்தாள். அவள் தலை கிர்ர்'ரென சுழன்றது.

'மசே!' எனக் கதறினாள்.

அந்தக் கதறல் வெளியில் வரவில்லை. வாயை இறுக்கிய மற்றொரு இரும்புக்கரம் அதைப் பொத்தியது.

உடைகள் கிழித்தெறியப்பட்டன நிர்வாணமானாள். ஓர் ஆட்டுக்குட்டியை நான்கு வேங்கைகள் சூழ்ந்து வேட்டையாடின. ஒரு ஹவாய்க்காரன், ஒரு சீனன், இரண்டு ஜப்பானியர்கள் அந்த அமெரிக்க வெள்ளைக்காரப் பெண்ணை கொடூரமாக வேட்டையாடினார்கள்.

கார் மறுபடியும் பறந்துவிட்டது.

தாலியா இன்னும் வேதனையிலிருந்து விடுபடவில்லை. திகைப்பிலும் அதிர்ச்சியிலும் அவள் உணர்விழந்து கிடந்தாள். சில நிமிடங்களுக்குள் எவ்வளவு ஒரு பாரதூரம் விளைந்துவிட்டது.

அவளுக்கு உணர்வு மீண்டபோது உலகம் அமைதியாக இருப்பதைக் கண்டாள். தானே எழுந்து போகாவிட்டால் தன்னை ஒருவரும் காணமாட்டார்கள் என்று தெரிந்து கொண்டாள்.

எழும்பினாள். வேதனையோடு வீதிக்கு வந்தாள். தள்ளாடித் தள்ளாடி கொஞ்சத் தூரம் சென்றபோது ஒரு காரின் முன்விளக்குகள் கண்களை கூசவைத்துக்கொண்டு எதிர்த்திசையில் வந்துகொண்டிருந்தன.

கைகளை நீட்டினாள்.

வண்டி நின்றது. அதில் நான்கைந்து அமெரிக்க வெள்ளைக்கார வாலிபர்கள் இருந்தார்கள். வண்டியிலிருந்து இறங்கிய அவர்கள் அவளுடைய அலங்கோலமான நிலையைக் கண்டு பதறிப்போனார்கள். என்ன நடந்துவிட்டிருக்கிறது என்று முடிவு எடுக்க அவர்களுக்கு அதிக நேரம் செல்லவில்லை. உடனே கைகொடுத்து அவளை வண்டியில் ஏற்றிக்கொண்டு அவள் விரும்பியபடியே வீட்டிற்குக் கொண்டு சென்றார்கள்.

"யார் இதைச் செய்தார்கள்?"

"அமெரிக்கர்கள் இல்லை. ஹவாயன், சைனீஸ், ஜப்பனீஸ்" அவள் முனுங்கினாள்.

'தெரியும்! தெரியும்! அந்த நாய்கள்தான். ஒருவனையும் விடக்கூடாது. எல்லோரையும் கொல்லவேண்டும்" அவன் ஆத்திரமுடன் கத்தினான். "இவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்காவிட்டால் அமெரிக்கப் பெண்கள் இங்கே சுதந்திரமாக வாழமுடியாது" இன்னொருவன் இதோ நாலைந்துபேரை வெட்டித் தள்ளுகிறேன் என்பதுபோல பதறினான்.

"விடக்கூடாது. நாளைக்கே இரண்டிலொன்றைப் பார்த்துவிட வேண்டும்" எஞ்சியிருந்தவனும் கத்தினான்.


ஹவாயில் அமெரிக்க வெள்ளைக்காரர்கள் குறைவு. பல்தேசத்து கலப்பின மக்களே அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு வெள்ளைக்காரர்களை பிடிக்காது. அப்பிரதேசத்தில் அனைத்தும் ஹவாயிகளுக்கே!

வீட்டிற்கு வந்ததுமே டொமிமெசிக்கு கோல் அடிக்கச்சொன்னாள். அவன் பதறியடித்துப்போய் வந்தான். அவள் இருந்த கோலத்தையும் நடந்த சம்பவத்தை அறிந்ததும் அவன் வெலவெலத்துப் போனான்.

"டொமி! இது பயங்கரமானது. என்னால் வேதனையை தாங்க முடியவில்லை. நான் உயிர் வாழ விரும்பவில்லை" என்று அவள் கதறினாள்.

டொமி மெசி அவளைச் சமாதானப்படுத்தினான்.

பொலிஸுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டாள். அங்கு நடந்த விசாரணையின் போது அனைவரையும் தன்னால் இனங்காண்பிக்கமுடியுமென்று சொன்ன அவள், ஜோ காஹாவ்வே தன் முகத்தில் குத்தி நாடியை உடைத்தான் என்றும் சொன்னாள். அதுமட்டுமன்றி காரின் இலக்கத்தையும் தெரியப்படுத்தினாள்.



எழுதுவது கே. வி.

பொலிஸ் உசாராகிவிட்டது.

இதேவேளை, இன்னொரு பாலியல் வல்லுறவுச் சம்பவம் நடைபெற்றது. அதிலும் நால்வர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் பலியானவள் அமெரிக்க வெள்ளைக்காரனை மணந்த அமெரிக்கப் பெண்மணி எனவும் தகவல் கூறியது.

வல்லுறவுக் கும்பல் சுற்றிவளைக்கப்பட்டது. அனைவரும் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். இவர்கள்தான் ஆசாமிகள் என்று தாலியா அடையாளம் காட்டினாள்.

ஹவாய் அமெரிக்காவின் ஒருபகுதி என்றாலும் அதன் தன்மை மிகவும் வித்தியாசமானது. அங்குள்ள பொலிஸாரும் நீதிமன்றங்களும் அதற்கேற்பவே செயல்பட்டு வந்தன. குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டாலும் அவர்கள் மீது குற்றப்பத்திரிகை சாட்டுவது பொலிஸாருக்கு கஷ்டமாக விருந்தது. ஓர் அமெரிக்க வெள்ளைக்காரப் பெண்மணிக்கு எதிராக வல்லுறவு மேற்கொள்ளப்பட்டிருப்பதால் பெரும்பான்மை பல்லின மக்கள் அதனைப் பெரிதுபடுத்தவில்லை. அமெரிக்க வெள்ளைக்காரர்கள் மட்டுமே அதற்காக பெரிதும் வருந்துவதாகத் தெரிந்தது.

நீதிமன்ற விசாரணை ஆரம்பமானது. அதன் தீர்ப்பு பாரதூரமானதொரு கலவரத்துக்கு இனவன்முறைக்கு இட்டுச்செல்லும் நிலைமை முளைவிட்டுக்கொண்டிருந்தது.

ஹவாயன்ஸ், சீனர், பிலிப்பைன்சுகள், கொரியன்ஸ், போர்த்துக்கேயர், யப்பானியர்கள் எனப் பல்லின மக்கள் நீதிமன்றத்தில் கூடிவிட்டார்கள். அப்பிரதேசத்தில் வெள்ளைக்காரர்கள் மிகவும் குறைவாகவே வாழ்ந்துவந்தார்கள். ஆகையால் அவர்கள் குறைவாகவே இருந்தார்கள்.

பல்லின மக்களிலிருந்து திடீரென புதிய சாட்சிகள் தோன்றினார்கள். சம்பவம் இடம்பெற்ற நாளிலும் நேரத்திலும் குற்றவாளிகள் தம்முடனே இருந்ததாகவும் வெள்ளைக்காரப் பெண்மணி பொய் சொல்வதாகவும் சொன்னார்கள். அதுமட்டுமில்லாமல் டாக்டர்கள், தாலியா வல்லுறவுக்குட்படுத்தப்படவில்லையென்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களின் விந்து அவள்மீது படிந்து கிடக்கவில்லை என்றும் வைத்திய அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

அதுமட்டுமல்லாமல் தாலியா நடத்தை கெட்டவள் என்றும் கணவனின் நண்பர்கள் பலரையும் அடிக்கடி உடல்ரீதியாக திருப்திப்படுத்துபவள் என்றும் சில சாட்சிகள் கதை கட்டினார்கள்.

இந்தக் கதைகளால் தாலியா அதிர்ந்துபோனாள். அன்றிரவு இடம்பெற்ற கொடூரம் அவள் கண்களில் நிழலாடிக்கொண்டிருக்கிறது. அந்த மனோபாதிப்பிலிருந்து அவள் மீளமுடியாமல் இருந்தாள்.

***

தொலைபேசியைக் கண்டுபிடித்தாரே கிரகாம்பெல், அவருடைய பேர்த்தியான போட்ஸ்கியூவின் மகள்தான் தாலியா. போட்ஸ்கியூவின் கணவன் இராணுவத்தில் சிரேஷ்ட மேஜராக இருப்பவர். மகளுக்கு ஏற்பட்ட அவமானத்தால் அவர் குன்றிப் போனார்.

நீதிமன்றம் விசாரணை நடத்தவேண்டும், பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள் நடவடிக்கை எடுத்தார்கள்.

நீதிமன்றம் வழக்கை எடுக்கவேண்டியதாயிற்று. 15நாட்கள் விசாரணை தொடர்ந்தது. 7 கலப்பினத்தவர்களும், 5 வெள்ளைக்கார ஜூரிகளும் முடிவு எடுக்க நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

போதிய சாட்சியங்கள் இல்லை என்று குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

தாலியாவின் தாயார் கொதித்துப்போனாள். டொமி மெசி 'நறநற'வென பற்களை கடித்தக்கொண்டான். எவ்வளவு மோசமான தீர்ப்பு என்று அவன் மனம் துடித்தது. அவனுடைய உடல் பதறியது. பழிவாங்க கைகள் துடித்தன. கடற்படை நண்பர்களும் ஒன்று சேர்ந்தார்கள்.

பிரதேசம் இரண்டாகப் பிரிந்துவிட்டது. ஆயுதங்களின் விற்பனை அதிகரித்தது. பெண்கள் இவற்றை வாங்குவதில் முன்னணியில் இருந்தார்கள். தம்மைக் கறுப்பர்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள வெள்ளைக்கார பெண்மணிகள் அதிகமாக ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டார்கள். ஏனெனில், பத்திரிகைகள் வெளியிட்டதொரு கணிப்பீட்டில் 46 பெண்கள் ஆறுமாத காலத்திற்குள் இத்தகையதொரு கொடூரத்திற்கு ஆளாகிவிட்டிருந்தார்கள்.

இவர்களுக்கும் நீதிகிடைக்கவில்லை.

குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டாலும், அவர்கள் பொலிஸுக்கு வந்து ஒவ்வொரு நாளும் கையெழுத்திடவேண்டியிருந்தது.

ஒருநாள் காலை நேரம் -

குத்துச்சண்டை வீரனும் தாலியாவின் நாடியை உடைத்தவனுமான ஜோகாஹாவ் பொலிஸ் ஸ்டேசனிலிருந்து வெளியில் வந்தான்.

வீதிக்கு அப்பால் ஒரு கார் நின்றிருந்தது. அதிலிருந்த ஒரு பெண்மணியின் கை வெளியில் நீண்டு அவனை அழைத்தது.

ஆவலோடு விரைந்தான்.

கதவு திறபட உள்ளே நுழைந்தவனின் நெற்றியில் ஒரு துப்பாக்கியின் முனை அழுத்தப்பட்டது.

கார் பறந்தது.

வெகுதூரம் சென்ற வாகனம் ஒரு பெரிய பங்களாவின் போட்டிக்கோவில் நின்றது. குத்துச்சண்டை வீரன் துப்பாக்கி முனையில் உள்ளே கொண்டுசெல்லப்பட்டான்.

தாலியாவின் தாயும் டொமி மெசியுமே வாகனத்தில் இருந்தார்கள். மாமியும் மருமகனுமே குத்துச்சண்டைக் காரனை கடத்திவந்திருந்தார்கள்.

"உண்மையைச் சொல்; நீதானே தாலியாவைத் தாக்கினாய்?"

"இல்லை"

"பொய் சொல்லாதே. உண்மையைச் சொன்னால் உன்னை விட்டுவிடுவேன். இல்லை நடப்பதே வேறு"

"சொல்கிறேன். நான்தான். என்னை மன்னித்துவிடு இனி மேல் அப்படி நடக்கமாட்டேன்".

"ஓ! அப்படியா"

"டுமீல்! டுமீல்!! இரண்டு வேட்டுகள் இருகைகளையும் பதம் பார்த்தன. அவை துவண்டு தொங்கின.

"டுமீல்!" மூன்றாவது குண்டு -

மர்மஸ்தானத்தை சிதறடித்தது. அவன் ஒரு கரடியைப் போல் அலறிக்கொண்டு விழுந்தான்.

சடலத்தை கொண்டுபோய் வெகுதொலைவில் கடற்கரையோரத்தில் வீசியெறிந்தார்கள். மற்ற மூவரின் சடலங்களும் இவ்வாறே கண்டெடுக்கப்பட்டன. மாமியும் மருமகனும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டபோதும் நிரூபிக்கமுடியாமல் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## பேன்கள்

* பேன்களின் வாயுறுப்பு, தோலைத் துளைத்து இரத்தத்தை உறிஞ்சும் வகையில் அமைந்துள்ளது.

* மனிதர்கள், குரங்குகள், நாய்கள் முதலான உயிரினங்களே இவற்றின் குடியிருப்பு.

* இதன் தலை கூர்மையாகவும், உடல்




நீள்வட்ட வடிவிலும் இருக்கும். இதன் கால்களில் முடியைப் பற்றிக்கொள்ளும் வகையில் கொக்கி போன்ற வளை நகங்கள் உள்ளன.

## ஓணான் ராஜ்யம்

லிட்சதீவுகள் பகுதியில் உள்ள ஒரு தீவில் 'ஓணான் ராஜ்யம்'. அது ஒரு விநோத இடம். எந்த நேரத்தில் என்ன ஆபத்து வரும்? யாருக்கும் தெரியாது. அங்கு செல்பவர்களைக் கொல்ல விதம்விதமான விபரீதங்கள் உண்டு. ஓர் இராட்சத ஓணான்தான் இந்தத் தீவின் தலைவர். பறந்துவந்து தாக்கும் ஓணானின் கண்ணில் பட்ட எவரும் உயிரோடு தப்பியதில்லை.

## சேப்டி பின்னில் ஒரு சேப்டி



அலுமாரியில் வைக்கும் காது வளையம், மோதிரம் போன்ற குட்டிக்குட்டி நகைகளை சேப்டி பின்னில் கோத்துவைத்தால், மற்றநகைகளை எடுக்கும்பொழுது இவை கீழே உருண்டு ஓடாமல் இருக்கும்.

## இலையால் ஒருசெய்தி

உறவு நிலைத்திருக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதை இலையை எந்தப் பக்கம் மடிக்கிறோம் என்பதை வைத்து சூசகமாகச் சொல்வார்கள். இதேபோல், இலைமடிக்கும் விஷயத்தை வைத்தே விருந்து ருசியாக இருந்ததா என்ற ரிசல்ட்டையும் கூட நம்முன்னோர்கள் சொல்வார்களாம்.

விருந்து அமர்க்களமாக இருந்தால், வீட்டுக்கு வந்த விருந்தினர்கள் இலையை மேல்பக்கமிருந்து கீழ்ப்புறமாக மூடுவார்களாம்.

விருந்து ருசியாக இல்லை என்றால், இலையை கீழ்பக்கமிருந்து மேல்பக்கமாக மூடிவிட்டு எழுந்துவிடுவார்களாம்.

எதையும் நேரடியாகச் சொல்லி அடுத்தவர் மனதைப் புண்படுத்தாமல் இருக்க இந்த இலை டெக்னிக்கை முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்





## தமிழ் சினிமா

பேரன் பேத்திகளைக் கொஞ்சும் வயதிலும் டீன் ஏஜ் பெண்களுக்கு ஜோடியாக கல்லூரி மாணவனாய் நடிக்க தென்னிந்தியப் படஉலகு ஹீரோக்களால் தான் முடியும். கன்னமெல்லாம் தொங்கி, கைகளில் நடுக்கம் ஏற்பட்டாலும் கதாநாயகியைத் தூக்கிக் கொஞ்சுவார். வில்லன்களைத் தூக்கிப்போட்டுப் பந்தாடுவார். எங்கள் தமிழ் சினிமா ஓர் அதிசயம்.

அதிசயங்களின் வரிசையில் சமீபமாக சேர்ந்திருக்கும் வஸ்து - மெகா சீரியல்கள். ஹீரோயின் முகம் கழுவும் காட்சியை வைத்தே ஒருவாரம் ஓட்டினாலும், நம்வீட்டுப் பெண்களை வைத்த கண் வாங்காமல் பார்க்க வைக்க மெகா சீரியல் டைரக்டர்களால் மட்டுமே முடியும்.



## ஹீல்ஸா? வேணாம்! வேணாம்!!



இளம்பெண்கள், தங்களை உயரமாகக் காட்டிக்கொள்ள ஹைஹீல்ஸ் அணிகிறார்கள். அப்படித் தொடர்ந்து ஹைஹீல்ஸ் அணிந்தால், 'மெண்டடல் டிஸ்ஆர்டர்' வருவதற்கு வாய்ப்பிருக்கிறதாம். குறிப்பாக 'சீஸோப்ரீனியா' என்கிற மனச்சிதைவு நோய் ஏற்படலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

செருப்புக்கும் மூளைக்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? ஹை ஹீல்ஸ் போட்டு நடக்கும்போது, சாதாரணமாக நடப்பதை விட முழங்காலுக்குப் பின்னாலிருக்கும் ஆடுசதை அதிக டென்சனுக்கு உள்ளாகிறது.

'நாம் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கிறோம்!' என்று நம்மைத் திருப்தியாக உணர வைக்கும் 'டோபாமைன்' என்ற மூளையின் கெமிக்கலை சுரக்கத் தூண்டும் உணர்வு நரம்புகள், ஆடுசதையில்தான் இருக்கின்றன. தொடர்ச்சியாக ஹைஹீல்ஸ் அணிவதால் இந்த நரம்புகள் செயல்பட முடியாமல் போய், மகிழ்ச்சியும் திருப்தியான உணர்வும் குறைகிறது.

இந்த ஹீல்ஸ் பழக்கம் மேல்நாட்டில்தான் அதிகம்! நம் நாட்டிலும் ஹைஹீல்ஸ் கலாசாரம், சமூகத்தின் உயர்தட்டு பெண்களிடம் அதிகம் உள்ளது. வாழ்க்கையில் திருப்தியின்மையும் மனச்சிதைவுப் பிரச்சினைகளும் அவர்களிடம்தான் அதிகம் உள்ளது.

பயப்படாதீர்கள்... இந்தப் பிரச்சினையைத் தவிர்க்க, செருப்பு முழுவதுமே ஒரே மாதிரி உயரத்தில் இருக்கும்படியான பிளாட்பார்ம் செருப்புகளை அணிந்துகொள்ளுங்கள்.

## நிவாரணம் நீயே!



புயல்காற்றால்
மழைவெள்ளம்!
பதினாறு வயசு
பருவக்காற்றாய்
பெண்ணே நீ வந்தாய்
உடைந்தது என் உள்ளம்!
நிவாரணமாய்!
நீதான் வேண்டும்
என்றைக்கு வருவாய்
என்னவளாய்!



"என்னடி இது...பாயாசத்தில் கடுகைத் தாளிச்சுக் கொட்டி இருக்கே?"

"சமையல் அறையில் ஒரு டி.வி. வாங்கி வைக்கவேண்டும் என்று சொன்னா கேட்டால் தானே...முன் அறையில் ஓடிட்டிருக்கிற டி.வியைப் பார்த்துக்கிட்டே சமைச்சா இப்படித்தான் ஆகும்!"



"டாக்டர் இருக்காரா?"
"கீழே போயிருக்காரு"
"நோயாளி எங்கே?"
"மேலே போயிட்டாரு".

## அட... அதற்கான காரணம் இதுதானா?

ஒரு நட்சத்திர ஹோட்டலில் அந்த 'மாஜிக் ஷோ' நடந்தது. முடிந்தது நிகழ்ச்சி. நிகழ்ச்சி முடிந்தபின், அந்த மாஜிக் நிபுணர் மேடையிலிருந்து இறங்கி, பார்வையாளர்களுடன் கலந்துபேசினார்.

"இந்த மாதிரி மாஜிக் மூலம் எங்கள் மகள் மேரிக்கு கண் பார்வை கிடைத்தால் எத்தனை நன்றாக இருக்கும்!" என்று படு ஆதங்கத்துடன் சொன்னார்கள் ஒரு சிறுமியின் பெற்றோர்.

அந்த மாஜிக் நிபுணர், அந்தச் சிறுமியையும், அந்தப் பெற்றோரையும் மாறிமாறிப் பார்த்தார். பிறகு, "ஏன் முடியாது?" என்றார் உறுதியுடன். அவர்கள் உட்கார்ந்திருந்த மேஜையில் மேரிக்கு எதிராக உட்கார்ந்தார் மாஜிக் நிபுணர். "பாருங்கள் நான் அவளுக்கு கறுப்புச் சீட்டைக் காட்டினால், அவள் அதை கறுப்பு என்றும், சிவப்புச் சீட்டைக் காட்டினால் சிவப்பு என்றும் சரியாகக் கண்டுபிடித்துச் சொல்வாள். என்ன மேரி? சொல்வாயில்லையா?" என்றார்.

மேரி சிறிது தயங்கி, "முயல்கிறேன்" என்றாள். அவர் கறுப்பு, சிவப்புச் சீட்டுகளை மாற்றிமாற்றிக் காட்டினார். என்ன ஆச்சரியம்? மேரி ஒவ்வொரு முறையும் சரியாகப் பதில் சொன்னாள். அவள் பெற்றோருக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் தாங்க முடியவில்லை.

"உங்கள் பெண் கெட்டிக்காரி. அவளை பிரெய்லி பள்ளிக்கு அனுப்பிப் படிக்கவையுங்கள். தன் திறமையில் அவள் உலகையே வெல்லுவாள்" என்று வாழ்த்தி, கைகுலுக்கி விடைபெற்றார் அந்த மாஜிக் நிபுணர்.



சில வருடங்களுக்குப் பின், அந்த மாஜிக் நிபுணருக்கு பிரெய்லி மொழியில் ஒரு கடிதம் வந்திருந்தது. அதைத் தன் உதவியாளரிடம் படிக்கச் சொன்னார்.

அதன் சாரம் இதுதான் "சில வருடங்களுக்கு முன் நீங்கள் சந்தித்த குருட்டுப் பெண்ணை நீங்கள் மறந்திருக்கலாம். அவள் நான்தான். நான் இன்று ஒரு நல்ல நிலையிலிருப்பதற்கு நீங்கள்தான் முக்கியக் காரணம் என்பதால், உங்களுக்கு என் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் அன்று கறுப்பு, சிவப்பு என்று கூறும்போது என் காலை ஒருமுறை, இருமுறை அழுத்தியது ஏதோ ஒன்றை எனக்கு குறிப்பாக உணர்த்தியது.

நீங்களும் கறுப்புச் சீட்டைக் காட்டும்போது ஒருமுறையும் சிவப்புச் சீட்டைக் காட்டும்போது இருமுறையும் அழுத்த நான் சரியாகச் சொல்லிவிட்டேன்.

என்னுடைய இந்தச் செயல்தான் என் பெற்றோர்கள் மனதில் புதிய நம்பிக்கையையே ஊட்டியது. அதுவரை என்னை எங்குமே அனுப்பத் துணியாத என் அப்பா, என்னை பிரெய்லி பள்ளிக்கு அனுப்பினார்.

நானும் அவர்களிடம் கடைசிவரை இந்த ரகசியத்தைச் சொல்லவில்லை. கண்பார்வையற்ற ஒரு சாதாரண பெண் இன்று ஓர் உயர்பதவியிலிருந்து உலகைப் பார்க்க உதவியவருக்கு எழுதும் நன்றிக் கடிதம் இது. மீண்டும் நன்றி. உங்கள் உண்மையான மேரி" என்றிருந்தது.

அந்த மாஜிக் நிபுணர் தன் சமயோஜித புத்தியினால் அந்தப் பெற்றோர்களின் மனதிலிருந்த அவநம்பிக்கையை அகற்றியதால் தான் அந்தப் பெண் இன்று இருட்டில் ஏதோ ஒரு மூலையில் முடங்கிக் கிடக்காமல் வெளியில் வந்து ஒரு நல்வாழ்வு வாழ்ந்து காட்டியிருக்கிறாள்.

நம் வாழ்விலும் சிறு நிகழ்ச்சிகள் திருப்புமுனையாக அமையக்கூடும். அவற்றை அறிந்து, நல்லவிதமாகப் பயன்படுத்திக் கொள்வது நம் கையில் தானிருக்கிறது.







## தத்துவம்

**பணம்:** அறிஞனை முட்டாளாக்கும்;
முட்டாளை அறிஞனாக்கும்.

**கோபம்:** குணம் உள்ள இடத்தில் அதிகம் வாழும்;
கூடினால் நட்பிடையே போரே மூளும்.

**மீன் :** தண்ணீரிலே ஜாலி;
தரையிலே காலி.

**சீதனம் :** சீதனத்தால் வாழ்விழக்கும் பெண்ணே; மாறி
சீதனத்தை வாங்குவது முறையோ தகுமோ!

**மழை :** வானம் எழுதும் கவிதை;
வரண்ட நிலத்துக்கு உயிர்.




கொலம்பியாவில் தங்களுக்கு சமூக அந்தஸ்து வேண்டும் எனக்கோரி பகூட்டாவில் பேரணி நடத்திய ஓரினச்சேர்க்கையாளரில் ஒருவர்.

## குடும்பக் கட்டுப்பாடு


குடும்பக் கட்டுப்பாடு மருத்துவ மனைக்குள் கோபமாக ஒருவன் நுழைந்தான்.

டாக்டரிடம் "நீங்கள் தானே எனக்கு வாசெக்டமி ஒபரேசன் செய்தீர்கள்? என்னுடைய மனைவி மீண்டும் கர்ப்பமாகி விட்டாள். உங்கள் வேலையை நீங்கள் ஒழுங்காகச் செய்யவில்லை என்று நினைக்கிறேன்." என்று சத்தம் போட்டான்.

"அமைதியாக இருங்கள். உங்களுக்குத் தானே நான் ஒபரேஷன் செய்தேன். உங்களுடைய அடுத்த வீட்டில் இருப்பவருக்கு அல்லவே!." என்றார் டாக்டர்.











ஹெயிட்டியின் போர்ட் ஆப் பிரின்ஸ் நகரில் நடைபெற்ற பேரணி ஒன்றில் தன்மீது பாம்புகளை சுற்றி அனைவரினது கவனத்தையும் ஈர்த்த இளைஞர்.

# விதைவாயு என்றால் என்ன? இது எப்படி ஏற்படுகின்றது?











**கே: வயது 23. சமீபத்தில் திருமணமாகியுள்ளேன். ஆனால் மனைவியுடன் திருப்தியாக உடலுறவு கொள்ள முடியவில்லை. உணர்ச்சி ஏற்பட்டாலும் விறைப்பு ஏற்படுவதில்லை. வைத்தியரிடம் ஆலோசனை கேட்கச் சென்ற போது அவர் என்னை நன்றாக பரிசோதித்து விட்டு எனக்கு Varicocele என்கின்ற விதை வீக்கம் இருப்பதாகவும், அதனை சத்திரசிகிச்சை செய்து குணமாக்கிவிட்டால் எனது ஆண்மை திரும்பிவிடும் என்றும் கூறினார். எனக்கோ பயமும் குழப்பமுமாக இருக்கின்றது. நண்பர்கள் சத்திரசிகிச்சை செய்தால் ஆண்மை முற்றாகவே போய்விடும் என்கிறார்கள். உங்கள் ஆலோசனையை வேண்டுகிறேன்.**

ப: ஆண்மைக் குறைவு, Varicocele என்கின்ற விதைவீக்கம் என்ற சம்பந்தம் எதுவுமே இல்லாத இரு விஷயங்களை போட்டு குழம்பியிருககிறீர்கள். முதலில் உங்கள் ஆண்மைக்குறைவு பற்றி கவனமெடுப்போம். இதற்கும் உங்களுக்கு ஏற்பட்டுள்ள விதை வீக்கத்திற்கும் எதுவித சம்பந்தமுமில்லை. ஆண்மைக் குறைவுக்கு 99 சதவீதமான காரணம் மனோநிலை சம்பந்தப்பட்டது. அதுவும் திருமணமான புதிதில் இப்படியான நிலை நிரந்தரமானதல்ல, தற்காலிகமானதே. பலவித எதிர்பார்ப்புக்கள், மனதில் தேக்கி வைத்த எண்ணங்களின் திடீர் வெளிப்பாடுகள் சரியாக மனைவியை திருப்திப்படுத்த முடியுமா என்ற வீணான சந்தேகங்கள் என்பன முதலிரவில் புதுமாப்பிள்ளையின் மனதில் தோன்றி அதனால் ஏற்படும் உணர்ச்சி கிளர்வுகளால் சரியாக உடலுறவு கொள்ள முடியாமல் சில வேளைகளில் ஆகிவிடுகிறது. முதல் நாளில் ஏற்பட்ட தோல்வி அடுத்த நாளிலும் மனோநிலையை தாழ்வுபடுத்தி இம்முறையும் தோற்றுவிடுவோமோ என்ற பயத்தை மன நெருக்கத்தை (Stress & Tension) உருவாக்கி திரும்பவும் தோல்வி காண வழிவகுக்கிறது. Failure begets Failure என்று ஒரு ஆங்கில பழமொழி உண்டு. தோல்விகள் அடுத்தடுத்து வரும் தோல்விகளுக்கு அடியெடுத்து கொடுக்கின்றன என்பதே இதன் விளக்கம். இதனால் புதுதம்பதியருக்கு மணமகளுக்கு உங்களுக்கு ஏற்பட்டதுபோல அடுத்தடுத்து உடலுறவு தோல்வியடைகிறது. காரணத்தை நன்றாக புரிந்து கொண்டால் இந்த தோல்விகள் மறக்கபட்டு வெற்றி காண முடியும். மருந்து மாத்திரைகள் இந்த தற்காலிக பின்னடைவுகளுக்கு உதவமாட்டா.

அடுத்ததாக Varicocele என்கின்ற உங்களது விதை வீக்கத்துக்க வருவோம். விதைகளை சூழ்ந்திருக்கின்ற நாளங்கள் வீக்கம் அடைவதால் அவை விதைப்பையினுள் புடைத்து நிற்கின்றன. இந்தமாதிரி புடைத்துநிற்கும் நாளங்களால் விதையைச் சுற்றியுள்ள சூழலில் வெப்பம் அதிகரிக்கின்றது. விதைகள் விந்தணுக்களை உற்பத்தி செய்ய உடல் வெப்பத்தை விட குறைவான வெப்ப அளவு அவசியம். அதனாற்றான் பிறக்கும்போது வயிற்றில் உருவாகிய விதை மெல்ல மெல்ல கீழே இறங்கி விதைப்பைக்குள் வந்தடைகின்றது. எனவே Varicocele வீக்கத்தால் ஏற்பட்ட அதிகரித்த வெப்பச் சூழலில் விந்தணுக்களை உற்பத்தி தடைபடு கின்றது. இதனால் மலட்டுத்தன்மை ஏற்படுமே தவிர ஆண்மைக்குறைவு நிச்சயமாக ஏற்படமாட்டாது. அடுத்தததாக இந்த Varicocele கட்டாயம் சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டிய கோளாறு. எனவே சத்திர சிகிச்சை நிபுணரின் ஆலோசனையை நாடவும்.

**கே:ஆண். வயது 21. கைகால்கள் இரண்டிலும் அதிகளவு உரோம வளர்ச்சி காணப்படுகின்றது. இதனால், எனது உடல் அழகு பாதிக்கப்படுகின்றது. மேலும் எனது நண்பர்களின் கேலிக்கும் உள்ளாகின்றேன். உளரீதியாகவும் இதனால் பாதிக்கப்பட்டு கல்வியில் நாட்டம் குறைகின்றது. உரோமங்கள் உதிர - பக்கவிளைவுகள் அற்ற மருந்து சிகிச்சை கூறவும்.**

ப: நீங்கள் ஓர் ஆண்மகன். ஆண்மைக்குரிய குண இயல்புகளில் மீசை, தாடி, அங்கங்களில் உரோம வளர்ச்சி என்பவை முக்கியமானவை. ஆண்களின் உடலில் சுரக்கப்படுகின்ற Testosterone என்ற ஆண் ஹோர்மோனின் செயல்பாடுகளால் உரோமவளர்ச்சி ஏற்படுகின்றது. ஆனால், உங்களைப்போல் சிலருக்கு இந்த வளர்ச்சி அதிகமாக இருக்கலாம். 'கரடி'போல் மயிர் வளர்ந்திருக்கின்றது என்று மற்றவர்கள் உங்களைப் பார்த்துக் கேலிபேசலாம். ஆனால், ஆண்மை தரும் ஹோர்மோன்கள் உங்களுக்கு அதிகமாகச் சுரக்கின்றன. மற்றவர்களைவிட ஆண்மையானவர் என்று நீங்கள் மகிழ்ச்சிகொள்ளவேண்டுமே ஒழிய தாழ்வுமனப்பான்மை கொள்ளக்கூடாது. உண்மையில் உங்களைக் கேலி செய்பவர்களை விட ஆண்மை அதிகமுள்ளவர் நீங்கள். நடிகர் சத்தியராஜ் உங்களைப்போல் உரோமம் அதிகம் உள்ளவர். இவரை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? எனவே, வீணாகக் கவலைப்படுவதைத் தவிருங்கள்.

அதிகளவாக வளரும் உரோமத்தை குறைக்க என்று எதுவித மருந்தும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், Testosterone ஹோர்மோனின் தொழிற்பாட்டை -குறைக்கவேண்டிய சில நோய்களின்போது, நோயாளர்களுக்கு Oestrogen என்கின்ற பெண் ஹோர்மோன் சம்பந்தப்பட்ட மருந்துகள் கொடுக்கப்பட்டபோது நோயாளிகளின் உரோமவளர்ச்சி முக்கியமாகத் தேகத்தில் பால் உறுப்புகளின் பிரதேசத்தில் அக்குளில் வளர்ந்திருந்த உரோமங்கள் குறைவது கண்டறியப்பட்டுள்ளது. விதையில் (Testes) ஏற்படும் புற்றுநோய்க்கு விதைகளை அகற்றியபின்னர் (Orchideltomy) உரோம வளர்ச்சி குன்றியதும் அறியப்பட்டுள்ளது. இதனால், இந்த வழிமுறைகளை ஆண்மகனான நீங்கள்- நல்ல தேக ஆரோக்கியத்தில் உள்ள நீங்கள் பின்பற்றுவது பொருத்தமல்ல. Depilatory Creams எனப்படும் மயிர்நீக்கி, பூச்சு மருந்துகள் தேவையில்லாமல் வளரும் உரோமங்களை அகற்ற பெண்கள் உபயோகிப்பார்கள். இவை முற்றாகவே கால், கைகளில் இருந்து உரோமங்களை நீக்கிவிடும். லேசர்முறையிலும் இப்படி நீக்கலாம். ஆனால், அடிக்கடிச் செய்யவேண்டும். உங்களுக்கு உரோமத்தை முற்றாக நீக்கிவிட்டால் ஒரு பெண்மைத்தனம் வெளிவரும். அப்பொழுதும் கேலிசெய்வதற்கென்றே உள்ள நண்பர்கள் தமது கேலியைத் தொடரத்தான் செய்வார்கள். மற்றவர்களுக்காக வாழத்தான் வேண்டும். அதற்காக மற்றவர்களின் சகல விருப்பு வெறுப்புகளுக்கு நம்மை ஆளாக்கிக்கொள்வது முட்டாள்தனம்.

**கே: ஆண். வயது 18. எனது 15 ஆவது வயதிலிருந்து தூக்கத்தில் விந்து வெளியாகின்றது. சிறிது உணர்ச்சி வசப்பட்டாலும் இப்படி நேரிடுகின்றது. பரிகாரம் கூறவும்.**

ப: நீங்கள் இப்பொழுது வளர் இளம்பிராயத்தில் (Adolescence) இருக்கின்றீர்கள். இந்தப் பிராயத்தில்தான் Sex Hormones, Growth Hormones என்கின்ற பால் சம்பந்தப்பட்ட மற்றும் வளர்ச்சி சம்பந்தப்பட்ட ஹோர்மோன்களின் சுரப்புகள் ஆரம்பிக்கின்றன. பிறப்பு உறுப்புப் பிரதேசங்களில் உரோமம் வளர்தல் போன்ற பொதுவான நிகழ்வுகளும் ஆண்களுக்கு குரல் மாறுதல், பெண்களுக்கு மார்பக வளர்ச்சி, மாதவிலக்கு போன்ற விசேட நிகழ்வுகளும் ஏற்படும் பருவம் இது. இந்த ஹோர்மோன்களின் தாக்கத்தினால் உள்ள கிளர்வுகள், உணர்ச்சிக் கிளர்வுகள் என்பன இந்த வயதில் இருபாலருக்கும் ஏற்படும். இந்தக் கிளர்வுகளால் எதிர்பாலினர்(Opposite Sex) மீது ஒருவித கவர்ச்சி தோன்றும். இதனால் பால் உணர்வுகள் கிளர்ந்தெழும். பால் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஈடுபாடு, விருப்பு ஏற்படும். இதெல்லாம் இயற்கையானதே. இவை கெட்டவையல்ல. இதனால், நோய்கள் ஏற்படுவதில்லை. தூக்கத்தில், உணர்ச்சிகளின்போது விந்து வெளியேறுவதும் இத்தகைய வெளிப்பாடே. இயற்கையானதும் கூட. இதற்கு எதுவித மருத்துவ உதவியும் தேவையில்லை. விந்து வெளியாவதால் களைப்போ, சோர்வோ, உடல்நலக்குறைவோ நிச்சயம் ஏற்படாது. ஆனால், எமது வாழும் சூழ்நிலையில் பாலுணர்வு, காமீக சிந்தனைகள் என்பவை தப்பு, தவறு, பாவச்செயல்கள் நல்ல பிள்ளைகளுக்குத் தேவையில்லாதவை என்று காரணமில்லாத கட்டுப்பாடுகளும், விதிகளும், குருட்டு நம்பிக்கைகளும் வளர் இளம் பிராயத்தினரின் மனதில் தாழ்வுமனப்பான்மை, பயம், குற்றஉணர்வு என்பவற்றை ஏற்படுத்திவிட்டன. இதனால், இயற்கையான வயதுக்குரிய சில தொழிற்பாடுகளை கண்டு வளர் இளம்பிராயத்தினர் அச்சம் கொள்கின்றனர்.

திரும்பவும் சொல்கின்றேன். உங்களுக்கு ஏற்பட்டுள்ளது உங்கள் வயதினர் எல்லோருக்கும் இந்தப் பிராயத்தில் ஏற்படும் இயற்கையான செயலே. என்றாலும் உணர்ச்சிகளைக் கிளறுகின்ற திரைப்படங்கள், புனைகதைகள் என்பவற்றை தூங்கமுன்னர் பார்க்கவோ படிக்கவோ வேண்டாம். நல்ல சிந்தனைகளுடன் தூங்கச் செல்லுங்கள். இப்படி ஏற்படுகின்றதே என்று குற்றவுணர்வு கொள்ளாதீர்கள். நன்றாகக் களைப்பு ஏற்பட மாலைவேளைகளில் உடற்பயிற்சி, நடை பயிலுங்கள். யோக ஆசனப்பயிற்சி மனதை சிந்தனையை ஒருவழிப்படுத்தும். இப்படியான வழிமுறைகளால் - உங்களுக்கு ஏற்படும் இந்தப் பிரச்சினையை ஓரளவு குறைக்கலாம்.


**கே: ஆண். விதைவாயு என்றால் என்ன? இது எப்படி ஏற்படுகின்றது? சிகிச்சை பலன்தருமா?**

ப: விதைப்பைகள் பெருத்து வருவதைப் பொதுவாக விதைவாயு என்பார்கள். இந்த பெருத்தலுக்கு எது முக்கிய காரணம் என்று அறிந்துகொள்ளவேண்டும். சிலவேளைகளில் குடல் கீழே இறங்கி, விதைப்பையினுள் தங்கிவிடும். இதனை ஆங்கிலத்தில் Hernia என்பர். தமிழில் குடல் இறக்கம் என்று சொல்லலாம். விதைப்பையினுள் விதையானது கரு வளர்ச்சி காலத்தில் வயிற்றறையினின்றும் கீழே இறங்கி பிறக்கும்போது வெளியே தங்கிவிடுகின்றது. விதை இறங்கிய வழியினூடாக சிலவேளைகள் பாரிய வேலைகளின் போது மூச்சை முக்கி பாரிய வேலைகளை செய்யமுயலும்போது - குடல் விதைப்பையினுள் இறங்கிவிடுகின்றது. இந்தக் குடல் இறக்கத்தை சத்திர சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

சிலவேளைகளில் விதைப்பையிலும் சில காரணங்களுக்காக திரவம் சுரக்கப்பட்டு பை பெரிதாகும். இதனை Hydrocoele என்று அழைப்பார்கள். இதனையும் விதை வாயு என்று நம்மவர்கள் கூறுவதுண்டு. யானைக்கால் நோய்க் காரணிகளால் ஏற்படும் Filariasis நோய், Mumps எனப்படும் பொன்னுக்கு வீங்கி நோய் என்பவற்றால் கூட இந்த நிலைமை ஏற்படும். இதற்கும் சத்திர சிகிச்சை முறையில்தான் தீர்வுகாணமுடியும். எனவே உங்களுக்கோ எவருக்காவதோ விதைவாயு எற்பட்டால் காரணம் என்ன என்பதை அறிந்துதான் சிகிச்சை செய்யப்படவேண்டும்

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்துமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

# இருள் மறைத்த தீபம்!



நள்ளிரவு ஒருமணி தாண்டியும் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். மேல்மாடியில் 'தடதட'வென்று நடப்பது மற்றும் நாற்காலியை இழுக்கும் சத்தங்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

அந்த வீட்டின் மாடியில், இருதினங்களுக்கு முன்புதான் புதுக்குடித்தனம் வந்திருந்தார்கள்.

ஏற்கனவே வெப்பத்தின் புழுக்கத்தில் வியர்த்திருந்த எனக்கு மேல் வீட்டு இரைச்சலும் சேர்ந்துகொள்ள எரிச்சல் பொங்கியது.

பக்கத்தில் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்த மனைவி மலர்மதியைப் பார்த்தேன். குழந்தைகளும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தன. 'கொடுத்து வச்சவங்க' என்று பெருமூச்சு விட்ட நான் சிறிதுநேரத்தில் உறங்கிப்போனேன்.

''என்னங்க மணி 8 ஆகுது. இன்னுமா தூங்கிக்கொண்டிருக்கிறீங்க'' மனைவியின் குரல்கேட்டு அவசரமாக எழுந்து உட்கார்ந்தேன்.

குழந்தைகள் ஏற்கனவே பள்ளிக்குச் சென்றுவிட்டிருந்தனர்.

''நீங்க இன்றைக்கு வங்கிக்கு போகணும் என்று சொன்னீங்களே...''

சமையலறையில் இருந்து மனைவியின் குரல் கேட்டது.

அவசரமாய் காலைக்கடன்களை முடித்து டைனிங் டேபிள் முன்பாக உட்கார்ந்தேன்.

''பேப்பர் எங்கே காணோம்?''

''அதை ஏன் கேட்கிறீங்க? மாடிக்கு புதுசா குடித்தனம் வந்திருக்கிறவர் காலம்புறம் வந்து பேப்பரை வாங்கிட்டுப் போயிட்டார். அப்படி ஓசியில பேப்பர் படிக்கலைன்னா தலை என்ன வெடிச்சா போயிடும்?'' என்றபடி சமையலறையில் இருந்து வெளிப்பட்டாள் மலர்மதி.

''வந்த ஒரே நாளில் அவர்களுடன் நெருங்கிப் பழகியிருப்பே...அதனால்தான் உரிமையா வந்து கேட்கிறாங்க''.

''பார்க்கிறதுககு டீசண்டா அழகா இருக்கிறாங்க...அதனால் போய் நாலு வார்த்தை பேசினேன். அது தப்பா?''

'டிசண்டா, அழகா...' என்ற வார்த்தைகள் எனது காதுகளில் திரும்பவும் ஒலித்தன. ஆர்வத்துடன்; 'அப்படியா என்ன வயசிருக்கும் அவங்களுக்கு?'' என்று கேட்டேன்.

''அதுதான் ரொம்ப முக்கியம். 'மணி 9 ஆயிடுச்சு. ஆபிசுக்குக் கிளம்புற வழியைப் பாருங்க...'' சூடானாள் மலர்மதி..

அடுத்த 5ஆவது நிமிடத்தில் நான் ஸ்கூட்டரைச் ஸ்ராாட் செய்தபோது

''எக்ஸ்கியூஸ் மீ.... என்னை கொஞ்சம் மெயின் ரோட்டில விட்டுவிட முடியுமா?'' என்ற குரல்கேட்டு நிமிர்ந்தேன்.

முதல்மாடி பல்கனியில் புதிதாக வந்த ஆசாமி புன்னகைத்தான். பக்கத்தில் அவன் மனைவி. அசரவைக்கும் அழகு.

''வணக்கம் நல்லதம்பி சார்...'' என்ற அவளது குரலின் இனிமையில் மயங்கிப்போனேன்.

கீழே இறங்கிவந்த அந்த ஆசாமி. ''ஐ ஆம் மதன்...வாங்க பேசிக்கிட்டே போகலாம்...'' என்றான்.

ஸ்கூட்டரை அந்தத் தெருவின் திருப்பத்தில் செலுத்தும்போது, ஓரக்கண்ணால் வீட்டைப் பார்த்தேன். பால்கனியில் நின்று கொண்டு கணவனுக்கு 'டாட்டா' காட்டிக்கொண்டிருந்தது அந்த அழகு தேவதை.

'ஆஹா...எவ்வளவு அழகா இருக்கா?'' கற்பனையில் மிதந்தபடி வண்டியைச் செலுத்தியபோது சந்தில் இருந்து மோதப்பார்த்தேன். சடன் பிரேக் போட்டதால் விபத்து தப்பியது.

''என்ன நல்லதம்பி சார்....உடம்பு சரியில்லையா?'' அக்கறையும் கோபமுமாகக் கேட்டார்மதன்.

''இல்லையே நான் நல்லாத்தான் இருக்கிறேன்'' என்று அவசரமாக சொன்ன நான் ''உங்கள் மனைவியின் பெயர் என்ன என்று நான் தெரிஞ்சுக்கலாமா?'' என்று பேச்சை மாற்றினேன்.

''அபர்ணா..நான் 'அபு' என்று கூப்பிடுவேன்...''

அதற்குள் பஸ் நிறுத்தம் வந்துவிடவே நன்றிசொல்லி அங்கேயே இறங்கிக் கொண்டான் மதன்..

வங்கிக்கு வந்து ஒருமணி நேரமாகியும் என்னால் வேலையில் கவனம் செலுத்தமுடியவில்லை. அபர்ணாவின் அழகு என்னை முழுமையாக ஆக்கிரமித்திருந்தது.

''என்ன நல்லதம்பி...காலையிலே இருந்து ஒரு மாதிரியா இருக்கே, வீட்டில ஏதாவது பிரச்சினையா?'' என்றான் பக்கத்து சீட்டு சுதா அக்கறையுடன்;

ஆரம்பத்தில் தயங்கினாலும் அவனது வற்புறுத்தலில் பணிந்து காலையில் நடந்தவற்றை விவரித்தேன்.

''ஓ...இது தான் விஷயமா...?'' சுவாரஸ்யமாகக் கேட்ட சுதா,

''அந்த அழகியை வர்ணிச்சு 2-3 கவிதை எழுதி அவகிட்டேயே படிச்சுக்காட்டு. அப்புறம் பாரு...உன்மேல அவளுக்கு ஒரு தனி 'இது' வந்துடும். ஆனா ஒண்ணு உங்க மனைவிக்கு இந்த விசயம் தெரிஞ்சா உங்க தலை தொண்டியாயிடும்...'' என்றான் தொடர்ந்து.

பெயரளவில் ஏதோ வேலை செய்துவிட்டு 4 மணிக்கே வங்கியிலிருந்து கிளம்பினேன். வீட்டு வாசலில் ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திய மறுநொடியே மாடியிலிருந்து அதே தேன்குரல்,

''நல்லதம்பி சார்..நேராக மாடிக்கு வாங்க. மலர்மதியும் இங்கதான் இருக்காங்க. எல்லாரும் ஒன்றாக டீ சாப்பிடலாம்...''

வீட்டிற்குப் போய் முகம் கழுவிக்கொண்டு அபர்ணா வீட்டிற்குள் நுழைந்தேன்.

''வாங்க...'' வாங்க...''என்று வரவேற்றாள் அபர்ணா.

சோபாவில் உட்கார்ந்தேன்.

''நீங்க கவிஞராமே..நீங்க எழுதிய கவிதைகளை மலர்மதி படிச்சுக் காண்பிச்சா. அருமையா இருந்தது. என்னைப் பற்றியும் கவிதை எழுதித் தரமுடியுமா?'' என்று ஆவலுடன் கேட்டாள் அபர்ணா.

''இது என்ன பிரமாதம்? உங்களை மாதிரி அழகு தேவதையை வர்ணித்து கவிதை எழுத கவிஞர் எதற்கு... சாதாரண ஆள் போதுமே...'' நான் வைத்த ஐஸில் நனைந்துபோனாள் அபர்ணா.

ஒரு சில மாதங்களில் மதன் குடும்பமும் எங்கள் குடும்பத்தைப் போலவே அந்தக் குடியிருப்பில் உள்ள பலருக்கும் நெருக்கமானது.

மதனின் எதிர்வீட்டில் வசிக்கும் ஜம்புலிங்கம் வணிக வரித்துறை அதிகாரி. கசாப்பு மாட்டிடமும் பால் கறந்துவிடும் திறமைசாலி. லஞ்சம் வாங்கியே பல லட்சங்களைச் சேர்த்துவிட்டவர்.

ஜம்புலிங்கத்தின் மகன் ஸ்போர்ட்ஸ் மோட்டார் சைக்கிளில் ஊர் சுற்றிக்கொண்டே இருப்பான். அவரது மகள் சமீபத்தில் தான் எம்.பி.ஏ. முடித்துவிட்டு வீடு திரும்பியிருந்தாள்.

ஒருநாள் அலுவலகம் போகும் வழியில் ஜம்புலிங்கத்தின் காரில் அபர்ணா போவதைப் பார்த்துவிட்டேன். அன்றுமாலைவரை எனக்கு வேலையே ஓடவில்லை. வங்கியிலிருந்து வீடு திரும்பியதும் அவசரமாக மலர்மதியோடு அபர்ணா வீட்டிற்குள் நுழைந்தேன்.

''வாங்க கவிஞர் சார்...எனக்குத் தெரியும் நீங்க கவிதையோடு வருவீங்கன்னு...'' மேதாவிபோல் பேசினாள் அபர்ணா.

நானோ தயக்கத்துடன்,

''நான் ஒண்ணு கேட்டாத் தப்பா நினைக்க மாட்டீங்களே...'' என்றேன்.

''*என்ன நல்லதம்பி சார்...உங்களைப்* போய் நான் தப்பா நினைப்பேனா. உங்களுடைய கவிதை ரசிகையாச்சே...இன்னிக்கு பேப்பர்லகூட உங்க 'சிக்கல்'என்ற கவிதை வந்திருக்கு. ரொம்பப் பிரமாதம்...''

நான் நேரடியாக விஷயத்துக்கு வந்து காலையில் ஜம்புலிங்கத்தின் காரில் போனது ஏன் என்று கேட்டுவிட்டேன்.

''எனக்கு உடம்பு சரியில்லை. அவசரமா சில பொருட்கள் தேவைப்பட்டன, அதான் அவர் வண்டியில போனேன்''.

**உண்மைக்கதை**

'அந்த ஜம்புலிங்கம் ஒரு மாதிரியான ஆளு. நீ அவன்கிட்ட கொஞ்சம் எச்சரிக்கையாகவே இரு''ஆலோசனை சொன்னேன்.

''உங்களை மாதிரி ஆளுகளட இருக்கும்போது எனக்கு என்ன கவலை. உங்க ஆலோசனைக்கு ரொம்ப நன்றி நல்லதம்பி சார்''.

ஒருநாள் ஜம்புலிங்கத்துடன் அவர் வீட்டுப் பல்கனியில் டீ குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது அங்கு அவசரமாகக் கையில் டப்பாவுடன் வந்தாள் அபர்ணா.

முகம் எல்லாம் வியர்த்திருந்தது. டப்பாவைத் திறந்தாள். உள்ளே கொத்துக்கொத்தாக தங்க நகைகள்.

''என்னது அபர்ணா ...ஏன் இதையெல்லாம் எங்கக்கிட்ட காண்பிக்கிறே...?'' அதிர்ச்சியுடன் கேட்டேன்.

''சார்..என் மாமியார் வெளியூரில் சீரியஸா இருக்கிறதா இப்போ தந்தி வந்தது. அதனால் நாங்க இப்பவே கிளம்புறோம். இவ்வளவு நகைகளை வீட்டுல வச்சுட்டுப் போறது ரிஸ்க். அதனால் எனக்காக 1-2 வாரத்துக்கு இதை உங்க வங்கி லாக்கரில வச்சிக்கங்க. திரும்பிவந்ததும் வாங்கிக்கிறேன்'' என்றாள் அபர்ணா.

நான் என்ன சொல்வதென்று தெரியாமல் யோசனையில் இருக்கவும் ''அவரை ஏன் தொந்தரவு செய்யறே அபு?'' என்று குறுக்கிட்டான் மதன்.

உடனே ஜம்புலிங்கத்தின் மனைவி செல்வி ''இங்க பாரு அபர்ணா. இந்த டப்பாவில இருக்கிற நகைகளை ஒரு லிஸ்ட் போட்டு ஒன்றை நீங்க வச்சிக்கிங்க. அதன் பிரதியை நல்லதம்பி சார்கிட்டேயும் எங்கிட்டேயும் கொடுத்திடுங்க. நான் பத்திரமா நகைகளை என் லாக்கரில வச்சிக்கிறேன்...'' என்றாள்.

2 வாரங்கள் உருண்டோடின. மதன் குடும்பமும் திரும்பிவந்தது. ஜம்புலிங்கம் மற்றும் மதனின் நட்பு மேலும் நெருக்கமானது. அபர்ணா அடிக்கடி கணவரோடு ஜம்புலிங்கத்தின் வீட்டிற்குப் போகத்தொடங்கினாள்.

ஒருநாள் மாலையில் எனது வீட்ட வராந்தாவில் டீ குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது மலர்மதி ''என்னங்க மேல்வீட்டில் இருக்கிறவங்க வந்து ஒரு மாசம் ஆகுது. ரயில்வேயில் புக்கிங் செய்த வீட்டுச்சாமான்கள் எல்லாம் இன்னும் வந்து சேரலையே. இவ்வளவு நாளா ஆகும்? பாவம் ரொம்ப கஷ்டப்படறாங்க...'' என்றாள்.

''சில சமயங்களில் அப்படித்தான் ஆகும். அதுக்காக போய் ரயில்வேக்கிட்ட சண்டையா போடமுடியும்?'' மனைவிக்குப் புரிய வைத்தேன்.

சொன்னேனே தவிர எனது மனதில் ஏதோ நெருடவே செய்தது. திடீரென்று ஒருநாள் விடியற்காலையில் ''ஐயோ யாராச்சும்...எங்க வீட்டுக் கதவைத் திறந்துவிடுங்க, எங்க வீட்டில் திருட்டுப் போயிடுச்சு; நல்லதம்பி சார் கதவைத் திறந்துவிடுங்க...'' என்று குரல் கேட்கவே பதட்டத்துடன் வெளியே வந்தேன்.

குரல் மாடிவீட்டில் இருந்து வருவதையும் அவர்கள் ஜம்புலிங்கமும் அவரது மனைவி செல்வியும் என்பதும் நொடியில் புரிந்துவிட்டது. உடனே அக்கம்பக்கத்து வீட்டில் தகவல் கொடுத்தேன். எல்லோரும் கும்பலாக மாடிக்குப்போனபோது அபர்ணாவின் பிளாட் வாசலில் பெரிய பூட்டு தொங்கிக்கொண்டிருந்தது. உள்ளேயிருந்து கதவைத் தட்டியபடி ஜம்புலிங்கமும் செல்வியும் கதறிக்கொண்டிருந்தனர்.

உடனே எல்லோருமாக சேர்ந்து கதவை உடைத்து உள்ளே சென்றனர்.

அங்கே ஜம்புலிங்கமும் செல்வியும் கிழிந்த உடையும் கலைந்த தலையும் வீங்கிய கண்களுமாக அலங்கோலமாகக் கிடந்தனர். உள்ளே மதன் அபர்ணா இருக்கிறார்களா என்ற தேடிப்பார்த்தோம்.

அவர்கள் அங்கில்லை.

ஜம்புலிங்கத்தின் வைரமோதிரம், 10000ரூபாய் மதிப்புள்ள ராடோ கடிகாரம்,

(27 ஆம் பக்கம் பார்க்க)

# ரீமாசென் மாதிரி நமீதா

'தூள்' படத்தில் தூள் கிளப்பிய ரீமா சென் மாதிரி விஜய்யின் 'அழகிய தமிழ் மகன்' படத்தில் நடித்திருக்கிறாராம் நமீதா. தமிழ் சினிமாவில் ராசியான பொண்ணு நமீதாதான். ரொம்ப சந்தோஷமாக நடித்துக் கொண்டிருக்கும் ஒரே நடிகையும் அவர்தான். மொழியும் தெரியாமலே தமிழைக் கலக்கிக் கொண்டிருப்பதென்றால் சும்மாவா! தமிழ் சினிமாவின் முன்னணி ஸ்டார்களான அஜீத், விஜய் ஆகியோருடன் நடித்துக் கொண்டிருக்கும் நமீதா, சமீபத்தில் தான் 'பில்லா' பட ஷூட்டிங்கை மலேசியாவில் முடித்துக்கொண்டு ஊர் திரும்பியிருக்கிறார். பில்லாவில் நமீதாவுக்காக சில சீன்களை கூட்டியிருக்கிறார்களாம். அழகிய தமிழ் மகனிலும் நமீதாவின் சீன்களை கூட்டி விட்டார்களாம். காமெடி, கிளாமர் கலந்த பாத்திரத்தில் அசத்தலாக நடித்துள்ளாராம். 'தூள்' படத்தில் வரும் ரீமா பாத்திரம் போல இதில் நடித்துள்ளாராம் நமீதா. அடுத்து சிம்புவுடன் சேரவுள்ளார் நமீதா. அதேபோல 'பெருமாள்' படத்தில் சுந்தர்சியுடனும் இணைய உள்ளாராம் நமீதா. அதைத்தொடர்ந்து சிபியுடனும் சேருகிறார். தனது அடுத்தடுத்த பட வாய்ப்புகள் குறித்து நமீதாவிடம் கேட்டபோது, ''தமிழில் போதிய அளவுக்கு எனக்குப் படங்கள் உள்ளன. இதனால் சந்தோஷமாக உள்ளேன். தமிழ் தவிர பிற தென்னிந்திய மொழிகளிலிருந்தும் எனக்கு நிறைய வாய்ப்புகள் வருகின்றன. 'பில்லா'வில் எனது ரோல் மிகவும் ஜாலியானது. இதுவரை இப்படி ஒரு ரோலை நான் செய்ததில்லை. அழகிய தமிழ் மகனில் காமெடி கலந்து கலக்கியுள்ளேன். 'பெருமாள்' படத்தில் முரட்டுத்தனமான பெண்ணாக வருகிறேன். முதல் படமான எங்கள் அண்ணாவிலிருந்தே எனது மார்க்கெட் உயர்ந்துள்ளது. அந்தவகையில் எனக்கு அதிர்ஷ்டம் கொஞ்சம் கூடுதலாக இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். அதேசமயம், அதில் எனது கடுமையான உழைப்பும் அடங்கியிருக்கிறது'' - என்றார்.



# தசாவதாரம் படப்பி

கமலைத் தேடி அவருடைய மகள் ஸ்ருதி அலைந்தார். இந்தச் சுவையான சம்பவம் 'தசாவதார
ஆஸ்கார் பிலிம்ஸ் சார்பில் ஏராளமான பொருட்செலவில் தயாராகும் படம் 'தசாவதாரம்'. கே.
பிடிப்பு ஏ.வி.எம். ஸ்டூடியோவில் நடந்து வருகிறது. கமல் 10 வேடங்க
'மேக் அப்' கலைஞர்கள் விதவிதமான வேடங்களைப் போட்டு வருகி
காரராக வேடம் போட்டுக்கொண்டு நடித்தார். கறுத்த முகம் அதி
படப்பிடிப்பு நடந்த இடத்துக்கு கமலைத் தேடி அவரது ம
அவரைக்காணவில்லை. இயக்குநரிடம் திருநெல்வேலி
தார். அருகில் கமல் நிற்பதை அறியாமலேயே படத்தி
என்று கேட்டார் ஸ்ருதி. அவரும் சிரித்துக்கொண்டே
சொல்லிச் சமாளித்தார். பின்பு உதவியாளரிடமும் வி
வேறு வழியில்லாமல் 'அதோ கறுப்பாக நிற்கிறாரே
உறைந்தார் ஸ்ருதி. அந்த அளவுக்கு கமலின் வே





# பத்மப்பிரியாவின் கோபம்

பத்மப்பிரியா நடிக்கும் 'மிருகம்' படத்தின் படப்பிடிப்பு மதுரை பகுதியில் நடந்து வருகிறது. இதில் இயக்குநர் கூறிய காட்சி ஆபாசமாக இருப்பதாகக் கூறி பத்மப்பிரியா நடிக்க மறுத்ததாகவும், இதனால் 2 நாட்கள் படப்பிடிப்பு நின்று விட்டதாகவும் செய்தி வெளியானது. இது குறித்து பத்மப்பிரியா கூறியதாவது:-

''படத்தில் நாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்று கூறியதால் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டேன். அதிக கிளாமராக நடிக்க மாட்டேன் என்று ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளேன். அப்போது சரி என்று ஒப்புக்கொண்டவர்கள் படப்பிடிப்புத் தளத்தில் அதற்குமாறாக நடந்தால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

குறிப்பிட்ட பாடல் காட்சியில் இயக்குநர் சாமி சொன்ன சில நடன அசைவுகளில் எனக்கு உடன்பாடில்லை. நடிக்க மறுத்து மேக் அப் அறைக்கு சென்றுவிட்டேன். பிறகு இயக்குநர் அந்த அசைவை வேறு விதமாக மாற்றினார். தொடர்ந்து அந்தக் காட்சிகளில் நடித்துக் கொடுத்தேன். இதனால் 2 மணி நேரமே படப்பிடிப்பு நின்றது. இப்பொழுது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது'' - இவ்வாறு பத்மப்பிரியா கூறினார்.

# பிடிப்பில்...

சாவதாரம்' படப்பிடிப்பின்போது இடம்பெற்றுள்ளது.
ரம்'. கே.எஸ். ரவிக்குமார் இயக்கும் இப்படத்தின் படப்
வடங்களில் நடித்து வருகிறார். அவருக்கு வெளிநாட்டு
டு வருகிறார்கள். கடந்த வாரம், கமல் திருநெல்வேலிக்
கம் அதில் தடித்த மீசை என்று வித்தியாசமாக இருந்தார்.
வரது மகள் ஸ்ருதி வந்தார். அப்போது எங்கு தேடியும்
ல்வேலிக்காரர் வேடத்தில் கமல் பேசிக்கொண்டிருந்
படத்தின் ஒளிப்பதிவாளரிடம் சென்று 'அப்பா எங்கே'
ாண்டே, 'இங்கேதான் எங்கேயாவது இருப்பார்' என்று
டும் விசாரித்தார். யாருமே சொல்லவில்லை. பின்பு
ற்கிறாரே... அவர்தான் அப்பா' எனக் கூற, ஆச்சரியத்தில்
பின் வேடம் இருந்தது.



# தனுஷ் படத்திலிருந்து விலகினார் காஜல் அகர்வால்

''பத்திரிகைத்துறையைப் படித்துக் கொண்டே,மேடை நாடகங்களில் நடித்து வந்தேன். ஒரு முறை பாரதிராஜாவை சந்தித்தேன். அவர்தான் 'பொம்மலாட்டம்' படத்தில் நடிக்க வைத்தார். இயக்குனர் ஆவதுதான் எனது லட்சியம். படத்தில் இயக்குநர் ஒருவரிடம் உதவியாளராக சேருவது போல எனது வேடம் அமைந்துள்ளது. பரத் ஜோடியாக 'பழனி' படத்தில் நடிக்கிறேன். தனுஷுடன் நடிக்க 'பொல்லாதவன்' பட வாய்ப்பு வந்தது உண்மைதான். அதில் நான் நடிக்க தயாராக இருந்தேன். கடைசி நேரத்தில் கால்ஷீட் பிரச்சினையால் நடிக்க முடியவில்லை. கதைகள் கேட்காமல் படங்களை ஒப்புக்கொள்வதாகவும் இதனால் கால்ஷீட்டை சரியாக கவனம் செலுத்துவதில்லை எனக் கூறுவதும் உண்மையல்ல. கதையும் கேரக்டரும் பிடித்ததால் மட்டுமே அந்தப்படத்தில் நான் நடிப்பேன். இந்தி வாய்ப்புகள் வந்தால் இந்திக்கும் செல்வேன் இவ்வாறு காஜல் அகர்வால் கூறினார்.

# 'கிரீடம்' அஜித்-திரிஷா



# ராஜகுமாரி ஆனார் கனிகா

கன்னட 'ராஜகுமாரி' படப்பிடிப்பில் இருக்கும் கனிகா இவ்வாறு கூறினார்:- ''சமீபகாலமாக என்னைப் பற்றி நிறைய வதந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பிரபலமாக இருப்பதால்தான் கிசுகிசுக்கள் வருகின்றன. அதைப் பற்றி நான் கலைப்படுவதில்லை. மலையாளத்தில் ஹரிஹரனின் இயக்கத்தில் உருவாகும் 'பழஸிராஜா' என்ற படத்தில் நடிக்கிறேன். இதைத் தவிர, இரு மலையாளப் படங்களிலும் நடிக்க கதை கேட்டுள்ளேன். அஜீத், கார்த்திக், மீனா நடித்த 'ஆனந்தபூங்காற்றே' படம் கன்னடத்தில் 'ராஜகுமாரி' யாக ரீமேக் ஆகிறது. இதில் மீனா கேரக்டரில் நடிக்கிறேன். ரவிச்சந்திரன், அவரது தம்பி பாலாஜி இருவருக்கும் நான்தான் ஜோடி. ஏற்கனவே கன்னடப் படத்தில் நடித்ததால், ஓரளவு கன்னடம் பேசத் தெரியும். அதை வைத்து ஷூட்டிங்கில் சமாளித்து வருகிறேன்''.



# வடிவேலு ஜோடியாக சுஜா, தீபு, தீதா



'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' படத்துக்கு பிறகு வடிவேலு இந்திரன், எமன், நா.அழகப்பன் அகிய 3 வேடங்களில் ஹீரோவாக நடிக்கும் படம் 'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்'. இப்படத்துக்காக பிரசாத் ஸ்ருடியோவினால் இந்திரலோகம் அரங்கு அமைக்கப்பட்டு படப்பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டது. ரம்பையாக நடிக்கும் புதுமுகம் தீதா சர்மா, வடிவேலுவை தன் காதலனாக நினைத்து பாடும் 'நானொரு தேவதை... நாட்டிய தாரகை' என்ற பாடல் காட்சி படமாக்கப்பட்டது. ஜி.போபிநாத் ஒளிப்பதிவு செய்தார். இக்காட்சியைப் படமாக்க 14 மின்இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. இப்படத்தில் வடிவேலுவுக்கு ஜோடியாக 3 நடிகைகள் நடிக்கின்றனர். ரம்பையாக தீதா சர்மா, ஊர்வசியாக சுஜா, மேனகையாக தீபு ஒப்பந்தமாகி இருக்கின்றனர். வடிவேலு, சுஜா பங்கேற்கும் பாடல் காட்சி படமாக்கப்பட்டுவிட்டது.

# மனைவிக்கு மதிப்பு கொடுங்கள்



நம்பிக்கை இழந்த நிலை, அவமான உணர்வு, சேர்வு, சுயபச்சாத்தாபம், மன உளைச்சல், காரணமில்லாமல் மனைவியைத் திட்டிக்கொண்டும், குறைசொல்லிக் கொண்டும் இருக்கும் கணவனின் போக்கு...,பார்த்தாள் சோபனா. கடைசியில் வீட்டை விட்டே போய்விடுவது என்ற கடுமையான முடிவெடுத்துவிட்டாள். அந்த வீட்டில் அவளை எதற்கெடுத்தாலும் மட்டம்தட்டி அவமரியாதை செய்வது வாடிக்கையாகி விட்டது. தவறு அவளுடையதில்லை என்றாலும் சூழ்நிலைகளினால் தண்டிக்கப்பட்டாள்.

ஹிட்லர் போன்ற சர்வாதிகாரக் கணவன் பிரேம்குமார் உறவினர்கள், அக்கம்பக்கத்தினர், குழந்தைகள் மற்றும் நண்பர்கள் முன்னிலையிலும் சோபனாவை உச்சக்கட்டமாக 'பைத்தியம்' என்று திட்டுமளவுக்கு அவமானப்படுத்தி வந்தான். இப்படிப்பட்ட நிலையில் கணவன் - மனைவி இடையே அன்பு எங்கிருந்து அதிகரிக்கும்?

குழந்தைகளிடம் தங்கள் இமேஜ் பாதிப்படையும் விதத்தில் தாங்கள் கொடூரமாக நடத்தப்படுவதாக பலகுடும்பங்களில் பெண்கள் குற்றச்சாட்டு எழுப்புவது பொதுவானதாக உள்ளது. பெண்கள் அவமரியாதைக்குள்ளாகும் குடும்பங்களில் குழந்தைகளும் அம்மா பேச்சை மதிப்பதில்லை.

பலவீடுகளில் ஆண்கள் வைத்ததே சட்டமாக உள்ளது. மனைவி சொல்வதற்கு அடிக்கடி மறுப்புத் தெரிவிப்பது, தாழ்த்திப் பேசுவது, தான் நினைத்ததைச் சாதித்துக்கொள்வது ஆகியவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

'தனியாக இருக்கும்போது திட்டுவதைக்கூட தாங்கிவிடலாம். ஆனால், உறவினர்கள், அக்கம்பக்கத்தினர், நண்பர்கள் முன்பு அவமரியாதை செய்வதைத்தான் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை' என்பது பெண்களின் பொதுவான மனக்குறை.

இதனால், குழந்தைகளும் மன ரீதியில் பாதிக்கப்படுகிறார்கள். அம்மாவின் பேச்சு அல்லது உத்தரவுகளைத் தட்டிக்கழிக்கும் மனோபாவம் குழந்தைகளுக்குத் தோன்றிவிடும். இந்த நிலையில் மனைவி - தாய் என இரு பொறுப்புகளையும் சுமக்கும் பெண் வேதனை அடைவது இயல்பானதுதானே.

நண்பர்கள், உறவினர்கள் குழந்தைகள் மற்றும் பெற்றோர் முன்னிலையில் அவமதிக்கும்வகையிலான பேச்சுகளை ஓரளவுக்குத்தான் தாங்கிக்கொள்ளலாம். ஆனால், தாழ்வு மனப்பான்மைக்கு ஆளான பல கணவன்மார்கள் மனைவியைப் பற்றிக் குழந்தைகளிடம் உளவுவிசாரிப்பதை வழக்கமாக்கிக்கொள்கின்றனர். வீட்டு வேலைக்காரர்களும் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றனர்.

இந்த விஷயத்தில் வேலைக்காரிகளுக்கு இரண்டு விதத்தில் லாபம். முதலாளி மனைவியைப் பற்றி உளவு சொல்வது., அதனுடன் பணம் அல்லது தனது உடல்தேவையை நிறைவேற்றிக்கொள்வது. வாழ்க்கையின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்வதற்காகவே திருமணம் என்ற 'புனிதமான உறவு' ஏற்படுத்தப்படுகிறது. ஆக மனைவியைதூசுபோல் நினைக்கும் மனோபாவத்தை ஆண்கள் விட்டொழிக்கவேண்டும்.

மனைவி இருந்தால்தான், சமூகத்தில் கணவனுக்கு மரியாதையும் அந்தஸ்தும் கிடைக்கும். மனைவிக்குச் செய்யப்படவேண்டிய மரியாதை குடும்ப அளவிலும் சமூக அளவிலும் மிகவும் அவசியம். குடும்பம் என்ற தேர் தடங்கலின்றி ஓடுவதற்கு அதன் சக்கரங்கள் போல கணவனும் - மனைவியும் செயல்பட வேண்டியது அவசியம். கணவனை மதித்து நடக்கவேண்டும் என்பது எப்படி மனைவியின் கடமையோ அப்படியே மனிக்கு மதிப்பு கொடுக்கவேண்டியதும் கணவனின் கடமை ஆகும்.

### மரியாதை தாருங்கள்

மனைவியை அடிக்கடி அவமரியாதைக்குள்ளாக்கும் ஆண்கள், அதற்கான விலையை நிச்சயம் ஒருநாள் கொடுக்க வேண்டிவரும். ஒருசிலர் அந்த மனைவியின் மீது இரக்கப்படுவதுடன், 'இவளது கணவனிடம்தான் ஏதோ குறை இருக்கிறது' என்றுகூட குற்றம்சாட்டுவார்கள்.

இதுபோன்ற ஒருநிலை தோன்றும்போது மனைவியானவள் அக்கம்பக்கத்தினரின் கிண்டல் - கேலிக்கு ஆளாக வேண்டியிருக்கும். எனவே, சமூகம் மற்றும்

பெண்

அக்கம்பக்கத்தினரின் நன்மதிப்பைப் பெற வேண்டுமானால், மனைவியை மரியாதையுடன் நடத்துவது அவசியம். இது 'கிவ் அண்ட் டேக்' உலகம். வாழ்க்கை சுகமானதாக இருக்கவேண்டுமென்றால் மனைவிக்கு மரியாதை கொடுங்கள். நீங்களும் மரியாதை பெறுங்கள்.

# அந்த மூன்றுநாட்களில் வரும் வித்தியாசமான நோய்கள்



சிலருக்கு மாதவிடாய் அன்றோ அல்லது அதற்கு இரு தினங்கள் முன்போ சளி பிடிக்கலாம். காரணம் உடலில் பித்தம் அதிகரிப்பதுதான். இந்தப் பித்தம் மாதவிடாய் காலத்தில் வெளியேறத் தொடங்கினால் சளிபிடிக்கும். தவிர இயல்பிலேயே மூக்கடைப்பு தும்மல் கபம் இருப்பவர்களுக்கும் சளி பிடிக்க வாய்ப்புண்டு.

இதைத் தவிர்க்க வேண்டுமானால் மாதவிடாய் நேரத்தில் முதல் மூன்று நாட்களிலிருந்து குளிர்ந்த நீர்ச் சத்துள்ள காய்கறிகளை தவிர்த்துக்கொள்ளவேண்டும். மிளகு ரசம் அருந்தலாம். மற்றும் உணவில் மிளகு அதிகம் சேர்த்துக்கொள்வதோடு பாலில் சற்று மஞ்சள் தூளும் பனங்கற்கண்டும் கலந்து குடிக்கலாம். சளி அதிகம் இருந்தால் சோற்றுக் கற்றாழையை வழவழப்பு நீங்கும் வரை தண்ணீரில் அலசி மேசைக்கரண்டி அளவு தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நல்ல பயன் தெரியும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

மாதவிடாய் நேரத்தில் பல பெண்களுக்கு வயிற்றோட்டம் ஏற்படுவதுண்டு. பெண்கள் ஒன்றைக் கவனித்தால் புரியும். இயல்பாகவே மலக்கட்டு இருப்பவர்களுக்குத்தான் பெரும்பாலும் மாதவிடாய் நேரத்தில் வயிற்றுப்போக்கு ஏற்படும். அதேபோல மலமிளக்கம் இருப்பவர்கள் என்றால் இந்த நேரத்தில் வயிற்றோட்டம் ஏற்படும். பெண்கள் பயப்படாமல் தகுந்த மருத்துவரை அணுகி சிகிச்சைபெற்றுக் கொள்ளலாம்.

மாதவிடாயின் போது பல பெண்களையும் பாதிக்கும் இன்னொரு முக்கியமான விஷயம், தலைவலி. சீதளம் அதிகமுள்ள பெண்கள் இந்தக் காலகட்டத்தில் தலையில் தோய்வதால் தலைவலி உண்டாகலாம். இந்த நேரம் அதிக டென்ஷன் இருந்தாலும் தலைவலி வரும்.

மாதவிடாய் நேரத்தில் எல்லா வயதுப் பெண்களுக்குமே எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை வயிற்றுவலி. சிலருக்கு கருப்பையில் (யூட்ரஸ்) சிறு கட்டி இருக்கும். இது மாதவிடாய் நேரத்தில் பெரியதாகும். யூட்ரஸின் பக்கத்தில் இருக்கும் நீர்ப்பையை அது அழுத்தும் போது வலி அதிகமாகும். இந்த ஃபைப்ராய்டை எண்டோமெட்ரியாஸிஸ் என்கின்றோம். இது புற்றுநோய் இல்லை

ஆனால் புற்றுநோய் போல் பரவும். சினைப்பை (ஓவரி) மேல் சிறு கட்டி இருந்தாலும் வலி இருக்கும். இதற்கு அடினோமையோசிஸ் என்று பெயர். எனவே மாதவிடாய் நேரத்தில் வயிற்று வலி அதிகமாக இருந்தால் 'பெயின்கில்லர்' மாத்திரைகளை விழுங்குவது கூடாது . என்ன பிரச்சினை என்று மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

பல பெண்களுக்கு இந்த நாட்களில் கோபம் எரிச்சல் டென்ஷன் முதலியவை அதிகமாக ஏற்படும். மாதவிடாய் நேரத்தில் ஹோர்மோன்களின் மாறுபாட்டால் இப்படி உணர்வில் ஏற்றத்தாழ்வுகள் வருகின்றன. குறிப்பாக அலுவலகம், வீட்டுவேலை என்று ஏகப்பட்ட வேலைகளை இழுத்துப் போட்டுக் கொள்பவர்களுக்கு இது அதிகமாக இருக்கும்.

பெரும்பாலும் குழந்தை பெற்ற பெண்கள் இந்த நேரத்தில் அதிகம் பாதிக்கப்படுவது இடுப்புவலியால்தான்.

(27 ஆம் பக்கம் பார்க்க)



அழகுக்காக இந்தப் பெண்கள் ஏன் இத்தனை மினக்கெடுகிறார்கள்?- குற்றச்சாட்டும் கிண்டலும் கலந்த இந்தக் கேள்வியைஆண்கள் மட்டுமல்ல, வயதுகடந்த பெண்களும் கேட்கத்தான் செய்கிறார்கள். அழகாக இருப்பதில் தவறே இல்லை. சொல்லப்போனால் அழகு ஒரு பலம். அது தரும் தன்னம்பிக்கை ஒரு பெண்ணுக்குப் பெரும் பலம்!.

# சமைப்போம் சுவைப்போம்

## முட்டை பரோட்டா

**தேவையான பொருட்கள்:-**

முட்டை - 4
கோதுமை மா - 1/2 கிலோ
மாஜரின் - 100 கிராம்
உப்பு - ருசிக்கேற்ப



**செய்முறை:**

ஓர் அகலமான பாத்திரத்தில் முட்டைகளை உடைத்து ஊற்றி நன்றாக அடித்துக்கொள்ளவும். மாஜரினை சூடாக்கி உருக்கிக் கொள்ளவும்.

கோதுமைமாவில் தேவையான உப்பு, கொஞ்சம் மாஜரினை கலந்து நீர் தெளித்து பிசையவும். இப்படிப் பிசையும்போதே அடித்துவைத்துள்ள முட்டையையும் சேர்த்து நன்றாகப் பிசைந்துகொள்ளவும்.

பரோட்டா உருண்டைகளைப் போல மடித்து மடித்து, மீதமுள்ள மாஜரீனைத் தடவி மடித்து மடித்துத் திரும்பவும் மாஜரீனை கையால் அழுத்தி பரோட்டாவைப் போல எல்லா உருண்டைகளையும் செய்துகொள்ளவும்.

தோசைக்கல்லைச் சூடாக்கி கொஞ்சம் மாஜரீனை விட்டு பரோட்டாவை ஒவ்வொன்றாகப் போட்டு இருபுறமும் சிவந்ததும் எடுத்துக்கொள்ளவும்.

முட்டை பரோட்டா பிரிக்கப் பிரிக்க பஞ்சுபோல மிகவும் சுவையாக இருக்கும். காய்கறி குருமாவும் இதற்கு நன்றாக இருக்கும். சிக்கன், மட்டன் குருமாவும் ருசியாக இருக்கும்.



# பல்சுவை கதம்பம்

கலைநாவுக்கரசர்

## 'உம்மா' தருவதில் உலக சாதனை



அண்மையில் 'உம்மா' தருவதில் உலக சாதனை படைத்துள்ளனர் ஹங்கேரிய ஜோடிகள். தலைநகர் புடாபெஸ்ட்டில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தின் முன்பு ஒரே நேரத்தில் 12,800 பேர் ஒன்றுகூடி 'இச்' கொடுத்து இச்சாதனையை நிகழ்த்தினர். எதெல்லாம் சரி இனி இந்த சாதனையை முறியடிக்க எத்தனைபேர் கிளம்புவார்களோ!

## மீன் பிடிப்போம் வாரீங்களா...!



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் கனமழைபெய்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வேல்மில்ஸ் நகரில் நெடுஞ்சாலையில் குளம்போல் தேங்கியுள்ள நீரில் குதூகலமாய் மீன்பிடிக்கும் இளைஞர்களைக் காணலாம்.

## உலகின் மிக நீண்ட பாலம்



உலகத்தில் மிக நீளமான பாலம் சீனாவில் கட்டப்பட்டுள்ளது. நிங்போ என்ற துறைமுகத்தில் இருந்து சாங்காய் நகரத்துக்கு இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. இதனுடைய மொத்த நீளம் 36கிலோ மீற்றர். இது 2003 இல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. மொத்தம் இந்திய ரூபாய் 5740கோடி செலவானது. 100 ஆண்டுகளுக்கு இந்தப் பாலம் வலுவாக இருக்குமென நிபுணர்கள் கூறுகின்றனர்.

## தாய்ப்பாலுக்கு ஜே!



தாய்ப்பாலுக்கு ஆதரவான வாசகங்களை தங்கள் உடலில் எழுதி ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர் இந்த பிலிப்பைன்ஸ் தாய்மார்கள். மணிலாவில் உச்சநீதிமன்றத்திற்கு வெளியே இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. பிலிப்பைன்ஸில் புட்டிப்பால் தயாரிக்கும் நிறுவனங்களின் தொடர்ச்சியான விளம்பரங்கள் காரணமாக தாய்ப்பாலை விட புட்டிப்பால் சிறந்தது என்ற எண்ணம் பல தாய்மாரிடையே எழுந்துவிட்டது. ஆகவே, நடைமுறை விதிகளுக்கு விதிக்கப்பட்ட தடைகளை நீக்கவேண்டும் எனக் கோரி உச்சநீதிமன்றத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## லேடீஸ் ஓ[redacted]



இத்தாலியில் உள்ள [redacted] பெண்களுக்காக ஒதுக்கப்பட்டு[redacted] 'பச 134 இன் ரோஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இங்கு ஆண்கள் குழந்தைகளுக்கு அனுமதியில்லை. வழக்கமாக கடற்கரையில் விற்கப்படும் மீன் வறுவல் இங்கு கிடைக்காது. அதற்குப் பதில் பழரசம், பழங்கள் என்று சத்தான உணவுகள் மட்டுமே விற்கப்படுகின்றன.

## சிங்கத்துக்கு தடுப்பூசி



அவுஸ்திரேலியாவில் பேர்த் நகரில் வனவிலங்குப் பூங்காவில் உள்ள 5வயதுச் சிங்கம் 'நெல்சன்'. இதன் சகோதர சிங்கத்தின் பெயர் 'மண்டேலா'. தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் பெயரை இவற்றுக்கு வைத்து பெருமையுடன் பூங்கா ஊழியர்கள் அழைக்கின்றனர். நெல்சனுக்கு நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்க தடுப்பூசி போட முடிவுசெய்தனர். மயக்க ஊசியை துப்பாக்கி மூலம் செலுத்தி பூங்கா மருத்துவ மனைக்கு கொண்டு வரப்பட்டது நெல்சன். அங்கு, டாக்டர்கள் ஊசிபோட்டதுடன் இரத்தப் பரிசோதனையும் செய்து நெல்சனுக்கு முழு உடற்சோதனையும் நடத்தினர்.

# சிறுவர் பக்கம்

## சரியான புத்திமதி



கந்தசாமி மிகப்பெரிய தனவந்தர். ஏழேழு தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு அவரிடம் சொத்து இருந்தது. கந்தசாமிக்கு எந்தவித கெட்ட பழக்கமும் கிடையாது. ஆனால் அவரது மகன் காத்தவராயன் அதற்கு நேர்மாறானவன். எல்லா விதமான கெட்ட பழக்கங்களும் அவனிடம் உண்டு.

அவனிடமிருக்கும் கெட்ட பழக்கங்களை போக்குவதற்கு எவ்வளவோ அறிவுரைகளை அவர் சொல்லிப் பார்த்தார். ஆனாலும் காத்தவராயன் அதை காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

அதனால் ஒரு பண்டிதரை அழைத்து தன் மகனின் கெட்ட பழக்கங்களை விட்டொழிக்கச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

பண்டிதர், காத்தவராயனை ஒரு தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார்.

முதலில் அவனிடம் ஒரு சிறிய செடியை பிடுங்கச் சொன்னார். காத்தவராயனும் அதை எளிதாகப் பிடுங்கி எறிந்தான். அடுத்து அதைவிட தடிமனான செடியை பிடுங்கச் சொன்னார். இப்போது அவன் சற்றுக் கஷ்டப்பட்டு அதைப் பிடுங்கினான்.

பின்னர் ஒரு ஆள் உயரத்துக்கு வளர்ந்திருந்த ஒரு செடியை பிடுங்கச் சொன்னார், பண்டிதர். இந்த முறை மிகவும் கஷ்டப்பட்டு, மூச்சை தம்கட்டி அந்தச் செடியை இழுத்து ஒருவாறாக அதைப் பிடுங்கி எறிந்தான், காத்தவராயன். “ம்.... இதை பிடுங்கு பார்க்கலாம்....” பண்டிதர் ஒரு மரத்தைக் காண்பித்தார். அந்த மரத்தைப் பார்த்ததும் காத்தவராயன் தயங்கினான். பிறகு மரத்தைப் பிடுங்க முயற்சி செய்து பார்த்தான்.. அதை அசைக்க கூட முடியவில்லை.

“ம்... முடியலையே....” மரத்தை பிடுங்க முயன்று களைத்துப் போன காத்தவராயன் முணுமுணுத்தான்.

இப்போது பண்டிதர் பேசினார்.


“இளைஞனே! இதுதான் கெட்ட பழக்கம் என்பது. தாவரங்களை சிறு செடிகளாக இருக்கும் போது அவற்றை எளிதில் பிடுங்கலாம். ஆனால் அவை மரங்களாகி விட்டால் பிடுங்குவது கடினம். அதனால் உனது கெட்ட பழக்கங்களை இத்தோடு நிறுத்திக்கொள்” என்றார் பண்டிதர். அவரது செயல்முறை விளக்கம் காத்தவராயனின் கெட்ட பழக்க வழக்கங்களை அடியோடு மறக்கச் செய்து விட்டது.


# சிறுவர் கைவண்ணம்










## அழகாக நிறம் தீட்டுங்கள் - 9



தம்பி, தங்கைகளே!

மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மிகச்சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த ... நிறம் தீட்டப்பட்ட படம்



★ பெயர் - டி.ஆர். ஜெவின்ஸ்ரன்
★ தரம் - எல்.கே.ஜீ.
★ பாடசாலை - கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி, முகத்துவாரம்- கொழும்பு- 15.

### பாராட்டுப் பெறுவோர்...

1. ஸ்ரீபாலகுமார் டயாழினி,
   தரம் 5 பி,
   றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்.

...ரவணபவன் திலுக்சிஜா,
...ம் 2 பி,
... இந்து மத்திய கல்லூரி.

...லன்சிவா டலிமா,
...டு, மன்னார்.

...கராசா,
...ம் 4 சி,
உவெஸ்லி கல்லூரி,
கொழும்பு- 09

# அவிழ்ந்த முடிச்சுகள்

சு.சேதுமதி

சிறுகதை


அலாரம் ''டிறிங் டிறிங்'' என அலறியது. கட்டிலின் ஓரமாக கையை நீட்டி அலாரத்தை நிறுத்திய சாரு கைக்கடிகாரத்தையும் ஒருமுறை பார்த்து நேரத்தை உறுதிப்படுத்திக் கொண்டாள். நேரம் 5மணி. குழந்தையும் கணவனும் ஆழ்ந்த நிலையில் தூங்கினார்கள். இன்னும் 1½மணித்தியாலம் இருக்கிறது முல்லைத்தீவு பஸ்ஸிற்கு. சாருவுக்கு இரவு பூராக உறக்கமில்லை. 10 வருடத்தின் பின் தன் ஊருக்கு போகும் சந்தோசம். அத்துடன் சுனாமியினால் அழிந்த உறவுகளின் நினைவுகள். அதனால் படுக்கையை விட்டு எழ உடல் ஒத்துழைக்கவில்லை. உடல் சோர்வினில் மனம் படுக்கையை நாடியது. என்ன செய்ய நேற்று லண்டனில் இருந்து வந்து கொழும்பில் தங்கியிருக்கிறோம். இன்று ஊருக்குப் போவது என்றால் எவ்வளவு வேலை. கொண்டு வந்த பொருட்கள் எல்லாம் ஆங்காங்கே. அவற்றை ஒழுங்கு செய்யவேண்டும். பயணத்திற்கு ஆயத்தமாக வேண்டும். மீண்டும் சலித்த சாருவுக்கு துன்பம் ஏதும் இன்றி இன்பமாய் தூங்கிக்கொண்டிருந்த கணவரைப் பார்த்ததும் எரிச்சலூட்டியது. என்ன செய்ய? பத்து வருடத்திற்கு முன் புல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் வசதியில்லாமல் தாய், தந்தையின் வற்புறுத்தலில் தன்னைவிட பதினைந்து வயது கூடிய ராஜுவை கணவனாக கட்டியவள் அல்லவா? அவன் மீது பாசம் இராதா? உடல் உளைச்சலோடு போராடி ஒருவாறு எழுந்தவள் இனி பம்பரம் தான். விரைவாக தன்னைச் சுத்தப்படுத்தி பொருட்களை ஒழுங்கு செய்தாள். கணவரையும் பிள்ளைகள் இருவரையும் எழுப்பி பயணத்திற்கு தயாரானாள். நேரம் நெ[illegible]க பஸ்ஸும் வந்தது. ஏறியதும் குழநதைகளுக்கு புது அனுபவம்; பயணம். அத்துடன் வீதியோரமான காட்சிகளைப் பார்ப்பது. ஒருவாறு முன் சீட்டில் கணவனோடு பிள்ளைகளை மடியில் வைத்துக் கொண்டு அமர்ந்தாள் சாரு. சனநெருசல் ஒருபுறம், பிள்ளைகளின் குழப்படி; மறுபுறம்-என்ன வேதனை 10வருஷம் கழித்து வாற என்னைக் கூட்டிப் போக ஒரு வாகனம் கொண்டு வரக்கூடாதா? இவர்களும் பெற்றோர்களா? காசு என்ன பெரிய பொருளா? பிள்ளைகள் பெரிதில்லையா? என சலித்தாள்.

பஸ் ஆடி அசைந்தவாறு வவுனியாவை நெருங்கியது. காலை வேளை வெள்ளையுடையுடன் சிட்டாய் பறக்கும் மாணவிகளைக் கண்டதும் சாருவின் மனம் பின் சென்றது. அவளும் தரம் பத்தில் வித்தியா, சாம்பவி, அஞ்சலி, கவிதா, றோசி இவர்களோடு பட்டாம்பூச்சியாய் சுற்றியவள். O\L [illegible]ட்சையில் ஒருவருக்கு ஒருவர் சளை[illegible]தவரில்லை என சிறந்த பெறுபேறுகளை பெற்றார்கள். பிரிவுகள் நிஜமில்லை என கூறியபடி தமது A\L பாதைகளை புதிதாக மாற்றினார்கள். வித்தியா விஞ்ஞானப் பிரிவிலும், சாம்பவி கணிதப் பிரிவிலும், அஞ்சலி, கவிதா, சாரு வர்த்தகப் பிரிவிலும் றோசி கலைப்பிரிவிலும் தமது இலக்குகளை நகர்த்தினார்கள். சாரு 3 கிலோமீற்றர் சென்று படித்தாள். கல்வியின் அருமையினை புரிந்தவளாய் பாடுபட்டாள். ஆண்டவனின் அருளால் நண்பிகள் எல்லோரும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற, றோசி தன் திசையை புதிதாய் மாற்றிவிட்டாள் சாருவும் ஒருவாறு அப்படித்தான் என கூறமுடியும். அன்று ஊர் விட்டு, உறவு விட்டு ஏன் உணர்வுகளைக் கூட விட்டுச் சென்றவள்தான் சாரு.

பஸ் சோதனை சாவடியைத் தாண்டிச்சென்றதை குழந்தைகளின் குதூகலிப்பில் புரிந்து கொண்ட சாரு உணர்வின்றி உறங்கும் கணவரைப் பார்த்து 'எப்படித்தான் கவலைகள் ஏதும் இன்றி இப்படி நிம்மதியாய் தூங்க முடியுதோ; கடவுளே!' என சலித்தாள்.

''மம்மி'' என கொஞ்சும் புரியாமொழியில் சிணுங்கியபடி சாருவின் இளைய மகள் டிம்மி தாயின் மடியில் சாய, தனக்கும் இடம் தரும்படி மூத்தமகன் நிஸ்மின் சாருவின் மடியினை ஆக்கிரமித்தான். பிள்ளைகளை அணைத்த சாரு 'கடவுளே இவ்வளவு அன்பாய்த்தானே என் அம்மாவும், அப்பாவும் என்னோடையும் தங்கச்சியோடும் இருந்தினம். எப்படித்தான் அப்பாவுக்கு மனம் வந்தது, சின்னவயதில் முகம் தெரியாத மனிதருக்கு என்னை மணம்முடிக்க'.

கண்கலங்கிய சாரு கணவனின் பக்கம் திரும்பினாள். முதுமையின் அடையாளமான வெண்மைத் தலைமுடியை செயற்கை மை பூசி கறுப்பாக்கி தொலைந்த இளமையை மீண்டும் பிடித்து கம்பீரமாய் இருந்தார். சாருவுக்கும் ஏதோ உள்ளூர ஒரு கவலைதான். மீண்டும் பஸ் முல்லைத்தீவை அடைந்ததை நடத்துநர் கூற, எட்டிப்பார்த்த சாரு ஒரு கணம் திகைத்தாள். முல்லைத்தீவின் அழகினை எடுத்தியம்பும் கட்டடங்கள், வந்தாரை வரவேற்கும் தென்னந்தோப்புகள், ஐந்து வயதினில் ஊஞ்சலாடி மகிழ்ந்த ஆலமர விழுதுகள், தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் சிற்றோடைகள், துள்ளித்திரியும் பசும்புற்தரைகள், இசைப்பாடும் நெற்கதிர்கள். கடவுளே! எல்லாம் கருகிக் கசங்கி சோகமாய் காணப்பட்டன. இடிந்த வீடுகளும் , முறிந்த மரங்களும் சாருவுக்கு தொண்டையை அடைத்தது. இறங்கும் இடம்வர கணவருடன் பிள்ளைகளை அழைத்தபடி இறங்கிய சாருவை வரவேற்க தாய், தந்தை, தங்கை காத்திருந்தனர். சாருவுக்குக் கண்களை நம்ப முடியவில்லை. இரத்தத்தை பிழிந்து அனுப்பிய காசில் கட்டிய வீடு தரைமட்டமாய் காணப்பட அயலில் தற்காலிக குடில் காணப்பட்டது. வீட்டில் நிம்மதியாக உறங்கக்கூட இடம்போதவில்லை. அவர்களின் வரவுக்காய் அயலில் ஒரு சிறு கொட்டகையை மேலதிகமாக அப்பா



போட்டிருந்தார். வந்து இரு நாட்கள் குழந்தைகளுக்கு ஊர் காட்ட அவளும் கணவரும் ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தியபடி சென்றனர்.

கோயில்கள், பாடசாலைகளைக் காட்டிய படி சென்றாள் சாரு. ''சாரு நீயா?'' என கேட்டபடி கட்டித்தழுவினாள் சாம்பவி. ஏதோ கட்டட விடயமாய் மேற்பார்வையில் ஈடுபட்டிருந்தாள். சாருவுக்குக் கண்கள் கலங்கின. ''சாம்பவி என்னடி எப்படி வித்தியா இருக்கிறாள்?'' என தளதளத்தபடி கேட்டாள் சாரு. ''வித்தியா முல்லைத்தீவில் டொக்டராய் இருக்கிறாள்'' என கூறிய வள் சாருவின் குழந்தைகளை அணைத்தாள். அவர்கள் புதிய மொழியில் பேச, புரியாது திகைத்தபடி சிரித்தாள் சாம்பவி. சாருவுக்கு மனம் வெட்கப்பட்டது. தாய் மொழி கூட என் பிள்ளைகளுக்கு புரிய வில்லையே!

வாரம் ஒன்று ஓடி மறைந்தது. மனம் ஏதோ கனமான கல்லைச் சுமப்பதுபோல் இருந்தது. கடவுளின் தரிசனம் கனத்தைக் குறைக்கும் என்ற நம்பிக்கையில் வற்றாப் பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு பிள்ளைகளுடன் வந்தாள்சாரு. அன்று போல் இன்றும் மாற்றமின்றி கம்பீரமாய் இருந்தது. தாயே அம்மா! ஏன் எனக்கு இந்த நிலை. படித்தும் பட்டம் பெறமுடியவில்லை. வெளிநாட்டு வாழ்க்கையாவது இன்பமாய் இருக்கும் என எண்ணினேன் . கடவுளே இயந்திர மனிதனாக்கிவிட்டாயே!.......' அவளை அறியாமல் கண்கள் பனித்தன.

ஆறுதலுக்காய் கண்மூடித்திறந்த சாருவுக்கு அதிர்ச்சியாய் இருந்தது.

''அஞ்சலி'' என கதறியே விட்டாள் சாரு ''ஏய் சாரு! நீயா?'' என கட்டித்தழுவிய அஞ்சலி ''எப்ப வந்தாய்? எப்படி இருக்கிறாய்? உன் குழந்தைகளா?''என வினாக்களைத் தொடுத்தாள்.

எல்லாவற்றிற்கும் வெறுமையான புன்சிரிப்பில் பதிலளித்த சாரு, ''என்னடி செய்கிறாய்?'' என நண்பியைக் கேட்டாள். ''நான் இலங்கை வங்கியில் மனேஜராக இருக்கேன். போனமாதம் தான் கலியாணம் நடந்தது. அதுதான் கோயிலுக்கு வந்தனான். வேற என்னடி ஏன் நீ சோம்பலாய் இருக்கிறாய்?'' என பழைய சுட்டித்தனம் மாறாமல் வாயெல்லாம் பற்களைக் காட்டிச்சிரித்தாள் அஞ்சலி.

''இல்ல எனக்கு பயணக் களைப்பு அது தான்'' என கூறி மனவேதனையை வெளிக்காட்டாமல் இருக்க வேண்டும் என புன்னகை ஒன்றை வரவழைத்தாள். ''சரி வாறன் சாரு!'' என விடைபெற்று அஞ்சலி செல்ல சாருவுக்கு வாழ்க்கை மேல் வெறுப்புத் தோன்றியது. 'படித்து சுயமாய் சுய கௌரவத்துடன் நம் நாட்டில் உழைக்காமல் ஏன் அந்நியநாட்டில்கை ஏந்துவான். கடவுளே ஏன்தான் இது நம் நாட்டுச் சனங்களுக்குப் புரியவில்லை' நீண்டயோசனையில் இருந்த சாரு, பூசாரியாரின் மணி ஒலியில் நினைவிற்கு திரும்பியவள் கடவுளிடம் வேதனைகளைக் கொட்டிவிட்டு வீடு திரும்பினாள். 'இன்னும் திரும்பிச்செல்ல 5 நாட்களே உள்ளன. மீண்டும் வெளிநாடா? சீ என்ன வாழ்க்கை இங்கேயே நம் நாட்டு மண்ணைப் பார்த்தபடி இருந்திடலாமே! பிள்ளைகளால் முடியுமா, கணவர் சம்மதிப்பாரா?'' மனதில் எண்ணங்கள் இராட்டினம் போல் சுழன்றன.

அன்று திங்கட்கிழமை. சாரு சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைக்கு சிறு நிதியுதவி செய்வதற்காக புறப்பட்டாள். ''ஏனம்மா சாரு, அரசாங்கம் தான் காசு குடுக்குது நீ கஷ்டப்பட்டு உழைச்சத ஏன் அவங்களுக்கு கொடுக்கிறாய்'' என வெறுப்பாக பேசினார் தந்தை. ''இல்லையப்பா நான் படிச்ச பாடசாலை என்னாலதான் முடியல. மேல படிக்க படிக்கிறவர்களுக்கு உதவும்'' என ஏதோ ஓர் உணர்வுடன் சாரு கூற '' சாரு நாங்க படுற கஷ்டத்திற்கு உதவ ஆளில்லை நீ பெரிய தொண்டு செய்ய நினைக்கிறாய்'' என தாய் எரிச்சலூட்டினாள். 'முருகா? எப்பத்தான் இதுகளின்ற காசு ஆசை தீரப்போகுதோ தெரியாது காசு, காசு, காசு என உயிரையே குடுக்குதுகள். இதுகளும் மனிசரோ' என மனதில் சலித்தவாறு பாடசாலையைச் சென்றடைந்தாள்.

''வாங்கோ இருங்கோ'' என உபசரித்த தலைமை ஆசிரியை ஏதோ அவசர விடயமாக ஆசிரியருடன் உரையாடினார்.

சாருக்கு எங்கோ கேட்ட குரல், பார்த்த முகம். வாழ்க்கையில் பலவேதனைகளின் மத்தியில் இவளின் முகம் மனதில் எம்மூலையிலோ இருந்தது. யோசித்தாள் உள்ளத்தில் தேடிப்பிடிக்க முனைந்தாள். ''என்ன கடுமையான யோசனை'' எனக் கூறியபடி முகத்தைப்பார்த்த தலைமை ஆசிரியை, ''சாரு நீயா'' எனக் கூறியபடி கட்டித்தழுவினாள். ''கடவுளே! நம்ம கவிதா. நான்நினைச்சேன் மறந்திட்டாயி 'என'' தான் மறக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக சாரு கூறினாள்.

''உன்னையா மறப்பது? பள்ளி வாழ்க்கையையா மறப்பது? நீ நிதி உதவி செய்ய வந்தாய் என மேடம் சொன்னார். சரி சாரு நான் அவசரமாய் வெளியில் மீட்டிங்குக்குப் போகவேணும். பின்பு சந்திப்போம்'' எனக் கூறிய கவிதா, ஆசிரியருக்கு விவரம் சொல்லி விட்டுச்சென்றாள். 'மீண்டும் சந்திப்பா நிச்சயமாக வேண்டாம். இதயவேதனை ஆறவே ஆண்டுகள் பலநூறு வேணும். அதற்கிடையில் சந்திப்பா? நிச்சயம் இனி இங்கு வரமாட்டேன்' என மனதில் உறுதியோடு ஆசிரியர்களிடம் விடைபெற்றுச் சென்றாள் சாரு. பயணத்திற்கு நான்குநாள் இருந்தாலும் மனம் வேதனையில் ஊரில் நிற்கப் பிடிக்காமல் உடனே புறப்பட ஆயத்தமானாள். ஏதோ காரணங்களை பொய்யாகப் புனைந்து பெற்றோர்களிடம் விடை பெற்று பஸ் நிலையத்திற்கு வந்தார்கள்.'லெப். கேணல் றோசி பஸ்தரிப்பு நிலையம் ' வாய் வாசிக்க கண்கள் கட்டிடத்தில் பொருத்தப்பட்ட படத்தைப் பார்த்தன. அதேமுகம், அதே சிரிப்பு 'றோசி!' மனம் அழுதது. 'உன் பாதையும் வேதனைதானோ? இல்லை. நீசெய்தது சாதனையடி' கண்கள் கலங்கின. பிள்ளைகள் புரியாமல் விழித்தனர். கணவருக்கும் புரியவில்லை. இவர்களுக்கு எப்படி புரியும்? நாட்டுக்காக உயிர் தியாகம்செய்த றோசியைப் பற்றி. பஸ்ஸும் வர ஏறி அமர்ந்துகொண்டாள் சாரு.

ஊரை விட்டுப்போகும் கவலை, நண்பிகளின் உயர் பதவி, அந்தஸ்து, புகழ். 'கடவுளே ஏன் என் வாழ்க்கை மட்டும் அர்த்தமில்லாமல் போயிட்டுது, என்னால் ஏன் முடியவில்லை பாதைகள் மாறின. ஆனால், அவர்களின் பயணங்கள் மாறவில்லையே! ஏன் என் பயணம் மட்டும் மாறியது?' சாருவின் மனதில் பெரும் போராட்டம், புரியாத புதிர்கள். பல விடை தெரியாத வினாக்கள். அவிழாத முடிச்சுகள்தான் எத்தனை?

வவுனியா கடந்து கொழும்பு நோக்கி பஸ்செல்வதை வீதி சமிக்ஞைகள் ஊடாகப் புரிய முடிந்தது. இன்னும் என் தாய்த்திருநாட்டில் இருக்கும் காலம் 3மணித்தியாலங்கள். சாருவுக்கு உற்சாகம் இழந்தநிலை. விமான நிலையத்திற்குச் சென்றதும் சாருவின் பிள்ளைகள் குதூகலித்தனர், தம் நாட்டிற்கு செல்வதை எண்ணி, கணவருக்கும் சந்தோஷம்தான். அங்கு பிறக்காவிட்டாலும் 5வயது முதல் வளர்ந்த நாடல்லவா? லண்டன். இவளின்

(26 ஆம் பக்கம் பார்க்க)

# என் விழியில் தங்கிய நினைவுகள்

## (ரிஷானாவின் கன்னிமுயற்சி கவிதைத் தொகுப்பு)

செல்வி ரிஷானா பாரூக்கின் கவிதைத் தொகுப்பான 'என் விழியில் தங்கிய நினைவுகள்' நூல் வெளிவந்துள்ளது. இது ஆசிரியையின் கன்னிப்படைப்பு.

அழகுக்கலை, ஆடை அணி தையல், வர்ணமிடல் வானொலி ஆக்கங்கள், கவிதை, கட்டுரை எனப் பல்துறையிலும் ஈடுபாடு கொண்டவரான இந்த இளங்கவிஞரை எட்டியாந் தோட்டை கராகொடை கிராமத்திலிருந்து நூல் வெளியிடும் முதல் படைப்பாளியாகத் திகழ்கிறார். பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் இவருடைய பெற்றோரே இதில் நாட்டம் கொண்டு செயல்பட்டிருப்பது அதிவிசேடமான்தாகும். அவர்களே மகளின் நூலை வெளியிட்டிருக்கின்றார்கள்.






"விண்ணிலே மின்னிப் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் போலவும் சேற்றிலே பிறந்த செந்தாமரை போலவும் எமது ஊரின் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து கேகாலை கராகொடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்விகற்று, இன்று 'என் விழிக்குள் தங்கிய நினைவுகள்' என்ற புத்தகத்தை வெளியிட்டு எமதூருக்கு புகழ்சேர்க்கின்றார் செல்வி ரிஷானா பாரூக். இதுவே எமதூரில் வெளியிடப்படும் முதல் புத்தக வெளியீடாகும்" என்கிறார் நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள இ/ஸாகிரா கல்லூரி அதிபர் எம்.ஏ.எம். அக்ரம் அவர்கள்.

நூலில் 41கவிதைகள் உள்ளடக்கமாகியுள்ளன. எனது ஊர், எனது தாய், என் விழிக்குள் தங்கிய கனவுகள், ஹைக்கூ குட்டிக் கவிதைகள், பேசும் பொம்மை நானே, மீண்டும் வருமா என் இளமை, எதிர்பார்க்கிறேன் அன்பே வந்துவிடு, சிதறிய என் நினைவுகள், கண் இமைக்குள் விழுந்த காதல், உடைந்த என் இதயம், திரும்பிவந்தாள், விலகிவிடாதே, காலைப்பொழுது, பசியால் வாடிய இரவு, வந்துவிடு, உணர்கின்றேன் என்னை மீண்டும், வடிந்தோடிய என் காதல், பெண்ணே விடியல் உனக்கு, நான் மண்ணுக்கே சொந்தமம்மா, வேண்டாம் உன் நட்பு, உன் பனித்துளி நான், கலந்துவிட்டேன் இன்று, எப்போது புரியும், உருகுது என் மனம், தாய்மை, பேசும் செடி, அன்பே வந்துவிடு, என்விழி வீங்கிக் கிடக்கின்றது, மன்னிப்பு, காத்துக் கிடப்பேன், உன்னை நான் தேடுகின்றேன், கை நழுவி விடாதே, புறப்படு, வேண்டாம் உன் காதல், ரமழானின் வருகை, வாழ்த்துக் கவிதை, நன்றிக்கவிதை என முடிவுறும் இத்தலைப்புகளின் வரிசையில் ஹைக்கூ குட்டிக் கவிதைகள் நான்கு இடங்களில் இடம்பெறுகின்றன.




கவிதை உணர்ச்சியின் வெளிப்பாடு. உணர்ச்சிகள் பல்வகை சார்ந்தவை. தனிமனித அபிலாஷை உணர்வுகள், சமூக அவலங்கள் மீதான உணர்வுப் பிளம்புகள் என அவை வரையறுப்புக்குள்ளாகின்றன. கவிதைகளின் உள்கட்டமைப்பு, அதன் தன்மை எத்தகையது என்பதை வெளிக்கொணர்ந்து விடுகின்றது. பெற்றோருக்கு நூலை சமர்ப்பணமாக்கும் கவிஞர் பாசவுணர்வு மிக்கவர் என்பது வெளிப்பாடாகும். இவ்வாறு இவருடைய கவிதைகள், பாசத்தின் நூலிழைகளாக பின்னிக் கிடக்கின்றன என்பதைத் தரிசிக்க முடிகிறது.

**"என் இதயத்தைத் தொட்ட**
**உள்ளங்கள் என் கண்ணீரைக்**
**துடைத்துவிட்டன.**
**என் உணர்வுகளை**
**கண்ட கண்கள் என்**
**கவலையை சுமந்தன.**
**என் பாசத்தை ஊற்றெடுத்த**
**உறவுகள் என் மனக்**
**காயத்திற்கு விசிறி வீசின.**
**என் கையைப் பிடித்து**
**தூக்கிவிட்ட என் உறவுகளை**
**மறக்கவே**
**மாட்டேன் நான்**
**வாழும்வரை!**
**இதயத்தில்**
**சுமந்துகிடப்பேன்!**
**ஒரு பொதிபோல"**

நன்றிக்கடன் என்ற தலைப்பிலான இந்தக் கவிதை ஆசிரியையின் பாசமிகு உள உணர்வுகளின் வெளிப்பாடாகும். கவிதைகளின் சீரோட்டம் இவ்வாறே அமைதி நடைபோடு கின்றன.

இந்தக் கவிதையில் எப்படி 'என்' வந்து கவிதையின் ஓட்டத் திற்கு அணைக்கட்டாவது போல பல கவிதைகளிலும் அந்த அணை விழுவதை ஆசிரியை கவனத்தில் எடுத்துக்கொள்ளல் வேண்டும். அச்சுப்பிழைகளும் நல்ல கவிதை களின் தரத்தை கீழிறக்கிவிட முயல்கின்றன. உதாரணம் புரப்படு. 'ற' தலைப்பிலே பிழைத்துவிடு கிறது. எழுத்துப்பிழைகள் அதிக மாகத் தொடர்கின்றன.

நூலில் ஹைக்கூ குட்டிக்கவிதை களும் இடம்பெற்றுள்ளன. அவை ரசமானவை.

மனதை வெடிக்க வைத்து
உள்ளக் கதவை
வேகமாகத் திறந்து
சீறி எழுந்துவிடும்
சிறிய பாம்பு
*'கோபம்'*

'கண்ணுக்கு காணாத
ஓர் உறவை
அருகே அழைத்து
உள்ளக் கதவினை
திறந்து
பேசவைக்கும் தரகன்
*'தொலைபேசி'*

'இரவில்
வெள்ளாடையை விரிக்கும்
சின்னதேவதை
*'நிலவு'*

(26 ஆம் பக்கம் பார்க்க)

-கே.வி-




# சாப்பாடு போடுறதுலே நமக்குள்ளே யாருலே பெரியவன்

## (இலக்கிய மாநாட்டில் இப்படியும் ஓர் ஆய்வு)

தமிழ்நாட்டு இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுலே நம்ம நாட்டு ஆய்வு கட்டுரைகளை வாசிச்சாங்களான்னு ஒருத்தரும் சொன்னபாட்டக் காணோம். ஆனா இவுக இரண்டுபேரும் போடுகிற சண்டையைப் பார்த்தா ஏதோ பெரிய சாப்பாட்டு பிரச்சினைதான் தலைவிரிச்சாடியிருக்கிற தோன்னு தோணுறது.

"ஆத்தா நம்ம ஊரு சாப்பாடு, அவுக ஊரு சாப்பாடுன்னு ஓர் ஆய்வு நடத்தியிருப்பாங்களோ?"

"நீங்க இங்கே வந்தப்போ உங்களுக்கு 5 ஸ்டார் ஹோட்டல்லே துன்னப் போட்டோம். ஆனா நீங்க ...அப்படின்னு நம்ம ஆளுக கேட்குதாங்களே? இதை வச்சுப் பார்த்தா நீ கேட்கிறதும் சரின்னுதான் தோணுறதுலே"

"ஆத்தா கொஞ்சம் வெவரமா சொல்லுங்க".

"ஸ்ரீலங்காவிலே 7ஆவது மாநாடு நடந்ததுல்லே, அப்ப இந்தியாவிலிருந்து கலந்து கிட்டவங்களுக்கு 5 ஸ்டார் ஹோட்டல்லேதான் நம்ம ஆளுக துன்ன போட்டாங்களாம். ஆனால் இந்த முறை நம்ம ஆளுக அங்க போனப்போ கொஞ்சம் பேர் பசியிலே லபலபோன்னு நடுத்தெருவிலே அல்லாடின்னு இருக்க கொஞ்சம் பேரு சோத்துக்காக டோக்கனும் கையுமா கூட்டத்தோடு கூட்டமாக முண்டியடிச்சின்னு இருந்திருக்கிறாங்க".

"அடப்பாவமே இது சாப்பாட்டு ஆய்வு இல்லே விருந்தோம்பல் ஆய்வுதானே!"

"இதுலே வேடிக்கை என்னான்னா சுவையான விருந்து போட்டோம். டோக்கன் இல்லாமலே சோறு போட்டோம்னு அவுக பீத்திக்காங்க".

"ஏலே அது எப்படியும் போகட்டும், சாப்பிட்ட ஒரு பேப்பர்காரர் சொல்லுதாரு, சாப்பிட்டு முடிஞ்சபொறவு குடிக்க நல்ல தண்ணியுமில்லே, கையை கழுவக்கூட தண்ணியில்லே ஒரு ஜக்குலே கொஞ்சம் தண்ணி கொணர்ந்து விரல்களை கழுவசொட்டு சொட்டுன்னு ஊத்துனாங்களாம்".

"கிழிஞ்சுதுபோ!"

"இன்னும் கேளுலே! அதைவிட பெரிய ஜோக் நடந்துருக்கு. நம்ம ஊரு பத்திரிகைக்காரங்க ரெண்டுபேரையும் புரவலர் ஒருத்தரையும் நம்மநாட்டு தமிழ்மணி ஒருவர் பேராசிரியராக்கிப் போட்டாராம். அதனாலே அவுகளுக்கு படா சோக்காக கவனிப்பு நடந்துச்சாம்".

"சுபான் அல்லாஹ்! அப்படி ஒரு நல்ல சமாச்சாரம் நடந்திருக்கே. எல்லாப் புகழும் அவனுக்கே"

"அவசரப்படாதியே! கதையைக்கேளு. டோக்கன் கொடுத்தில்லே சாப்பாடு போட்டாங்க. இந்த மூணுபேரு ரேஷன் கடையிலே மாதுரி ரக்காயி ஏந்தி நிற்க, டோக்கன் இல்லாதவங்களுக்கு சாப்பாடு இன்லேன்னு சாப்பாடு போடுரவங்க அடிச்சு சொல்லிப்பிட்டாங்க. என்ன எழவுலா இதுன்னு நம்ம பத்திரிகைக்காரங்க ரெண்டுபேரும் நம்ம புரவலரும் ஒத்தைக் கையால் ரக்காயி ஏந்தி மத்தக் கையால் பரபர'ன்னு தலையைச் சொறிஞ்சுன்னு நிக்க நம்ம ஊரு தமிழ்மணி இதைக்கண்டு அம்போன்னு திகைச்சுப் பொய்ட்டாரு".

"அப்புறம்?"

"இராமாயணம் படிச்சிருக்கியாலே, அதுலே யுத்தகளத்துலே தசரதன் மவராசன் தேரிலே போய்ன்னு இருந்தப்போ, ஒரு சக்கரத்து அச்சாணி கழன்றிச்சாம். உடனே கைகேயி ஓடிப்போய் சில்லுக்குள்ளே விரலைவிடடு அச்சாணியாக நின்று மணாளன் உசுர காப்பாத்துனாலாம்".

"சுபான் அல்லாஹ்"

"அது மாதுரி நம்ம நாட்டு தமிழுமணி ஒருத்தர் பாஞ்சுவோடி சாப்பாட்டுக் காரர் காதுலே குசுகுசு'ன்னு கொசுமாதுரி ரீங்காரிச்சாராம்".

"அட அப்புடி என்ன மந்திரம் ஓதினாரு...?"

"ஏலே! டோக்கன் இல்லாம சோறு கொடுக்கமாட்டேன்னு சொல்லுதியே. இந்த மூணுபேரும் யாருன்னு தெரியுமா? பேராதனை யூனிவர்சிட்டி பேராசிரியர் களுன்னு சொன்னாராம்".

"அடிசக்கை"

"அப்புறம் என்ன? டோக்கன் இல்லாமலே சுடச்சுட புரியாணி கெடைச்சுதாம்".

"அப்புடிப்போடு. என்னதான்னாலும் நம்ம ஆளுக நம்ம ஆளுகதான். எல்லாத்துலேயும் முந்திரிக்கொட்டையாக ஜம்புன்னு முன்னாலே தாவுகிற இவுக, விருந்தோம்பல்லே மட்டும் பூசணிக்காய் ஆயிடுவாங்களா என்ன?"

# கவிதைப் பூங்கா

தயாரிப்பு: அஸ்மினா



'காவியப் புலவர்' ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

## பனிமலையின் பூபாளம்

வானுயர்ந்த மலைகளிலே ஊற்றெடுத்து
வளைந்துவளைந் தோடுநதி ஓசை பூவின்
தேனுகர்ந்த வண்டுமலர்ப் பொய்கை சுற்றித்
திரிந்தெழுப்பும் ரீங்காரம் ஆங்கு வாழும்
கானகத்துக் குருவியினம் செவியி னிக்கக்
கூடிமகிழ்ந் தெழுப்புகின்ற குரல்க ளெல்லாம்
ஊனமிலா மணங்கொண்ட மலைமாந் தர்க்கு
உணர்வூட்டும் பூபாள ஓசை தானே

சிற்றோடை மருங்குகளில் வளைந்தே காணும்
தங்கவண்ண மூங்கில்களை வண்ட றுக்க
சுற்றிவரும் மலைத்தென்றல் அதனூடேகிச்
செவிக்கினிய ஓசையெழு வாறு செய்யும்
பற்றைபற்றை யாய்ச்செழித்த தேயி லையில்
படிந்திருந்த பனித்துளிகள் சொட்டுச் சொட்டாய்
முற்றியாங்கு காய்ந்துவீழ்ந்த சருகிற் கொட்டி
மகிழ்வூட்டு பூபாள ராக மாகும்

சோவென்று பொழிகையிலே மேள தாளம்
சற்றடங்கிப் பெய்யுங்கால் முரசம் சோர்ந்தே
தூவானம் அடிக்கையிலே மோர்சங் கின்னுந்
தொடர்ந்துசற்றே உரத்தாலோ உடுக்கை காற்றுக்
கூவியொன்றி வீசுகையில் நாதஸ் வரம்
கொட்டிடுங்கால் துளிதுளியாய் ஜதை ரங்கம்
யாவுமிவை மழைசெய்யும் கோலம் எங்கள்
எழில்மேவும் மலைநாட்டின் பூபாளங்கள்.

## ஒற்றைக் குகையின் குறிப்பு

உன்து முகத்தை
நான்
பறிகொடுத்துவிட்டேன்
பதுங்குகுழியின்
அழுகையின் ஓரத்தில்
உனது புன்னகை
எறிந்து கிடக்கிறது.

[illegible]குழிக்காக
எல்லோரும்
நிலத்தை
அளவெடுக்கிறார்கள்
அதன் இன்றைய
பொய்மையில்
உனது தோற்றம்
சிதறி கிடக்கிறது.

உனக்கு ஒரு விமானம்
உனது தம்பிக்கு
ஒரு விமானம்
ஆளுக்கு நான்கு
குண்டுகள்
மொத்தம்
இருபது குண்டுகளுக்கு
உனது குடும்பம்
பதிலளித்திருக்கிறது.

நீ ஒரு மாணவனாக
இருக்கலாம்
உன்னோடு
உனது வெள்ளைச்சீருடை
புத்தகங்கள்
பேனாக்கள் எல்லாம்

உனது இன
அடையாளத்தின்
அடிப்படையிலேயே
குண்டு வீசப்படும்.

தேசிய பாதுகாப்பு
என்கிற அட்டவணையின்
வரிசையில் இன்று
நீ, உனது குடும்பம்
தெரிவுசெய்யப்பட்டு
அழிக்கப்பட்டிருக்கிறது.

இனி நீ அணிந்திருந்த
வெள்ளை சீருடையும்
வைத்திருந்த புத்தகங்களும்
மறைக்கப்பட்டு
ஆயுதம்
தரித்திருந்[illegible]வே
[illegible]வாய்,
உனது வீட்[illegible]லிருந்து
அவர்[illegible] தேசிய
பாதுகாப்பை
அச்சுறுத்தும்படி
நடமாடியவனாகவே
பார்க்கப்படுவாய்.

உனது அப்பா[illegible]மான
குருதியை திருடி
குடித்து
ஏப்பமிடுகிறது
அதிகாரம் தங்கிய
ஜனநாயகம்.

■தீபச்செல்வன்

## எம் தேசத்தில்



யார் ஆள்வது
எனும் போட்டி
அவர்களுக்கு....

அதனால் வாழ்க்கை
எம் பக்கம்
வர மறுக்கிறது....!

புதையல்
இருப்பதாய்
தோண்டினால்
பிணம் தான்
கிடைக்கிறது....!

நாம் நிற்கும்
இடத்தின்
[illegible]லமும் நடுங்குகிறது

[illegible]ாதுகாப்போர் யார்?
[illegible]லி எடுப்போர் யார்?
எனத் தெரியாமல்

நிழல் தேடிய
எம் மனது- இன்று
நிம்மதியை தேடுகிறது...!

■நானாட்டான் எஸ்.ஜெகன்

## ஆயுத இரவுகளின்



அத்தியாயம் ஒன்று

இரவுகள்
எமது தேசங்களில்
கடினமானவைதான்...
பயங்கரமாகத்தான் இருந்தன...
இப்பொழுதும்.

ஊளையிடும் நாய்களும்
ஊமைக் கரையாயிற்று...
இருக்கும் பொழுதுகளில்
காற்று மட்டும்
எப்படிப் பேசும்...?

காற்றின் சுதந்திரமும்
விலங்கிடப்பட்டிருக்கின்றது
சுதந்திரத்தை மறுத்து
பிணவாடை
பூசப்பட்டிருக்கிறது.

மனிதன் உயர்ந்தவன்
உயர்திணை
எமது தேசத்தைத் தவிர

இங்கு தெருச் சடலங்கள்
நாய்களுக்கும்....
காகங்களுக்கும்...

தெருக்களிலும்
பற்றைக் காட்டிலும்
மனித விருந்துபசாரம்.

இதன் பயனாக
இரவுகள் மட்டும்
எப்படித் தூங்கும்?
கண் விழித்து
துப்பாக்கிச் சன்னங்கள்
கொறித்துத் தின்கின்றன.

■பொத்துவில் தாஜகான்.

அன்பே...!
உன் மலர் வதனம் கண்டேன்
என் கண்கள் குளிர்ந்தன!
உன் இனிய குரலைக் கேட்டேன்
என்செவிகள் இனித்தன!

பலநாள் காத்திருந்து
எதேச்சையாக
சந்தித்து
பிரியமனமின்றி
விடைபெறறேன்!

மீண்டும் எப்போது
என் இதய வானில்
வர்ணம் மாறாத
வானவில்லாய்
தோற்றம் தருவாய்?

■வெலிகம ரிம்ஸா முஹம்மத்

## ஆவணி மாதத்திலே தாவணி போட்டவளே...!



தை யிலே விழியில்
தைத்த தையலே!
'மாசி'யிலே உனை
நேசிக்க சொன்னது
'பங்குனி'யிலே எனை
யோசிக்க வைக்கவா?
சித்திரமே!
'சித்திரை'யில் நானுனால்
நித்திரையைத் தொலைத்தாலும்
இனுமென்
சித்தத்தில்
பத்திரமாயிருக்குதடியுன்
பால்முகம்.
கத்தியின்றி
ரத்தமின்றி
யுத்தமென்னுள் செய்பவளே!
என் புத்தியெல்லாம்
புத்திருக்குன் பூமுகம்.
கார்மேகக் குழலாளே!
என் கவிதாமனம்
வெந்து நொந்து
சோகத்தையே
சொந்தமாக்கிக் கொண்டதற்கு
'வைகாசி'யில் நீ
வைத்தியம் செய்வாயென நினைந்தேன்...
மீண்டும் மீண்டும்
புன்னகைக் குண்டுகளால்
புண்ணாக்கியதால்
உனையெண்ணி
மண்வீடு கட்டியதென் மனசு...
'ஆனி'யில் ஆதலால்
ஆணித்தரமாய் முடிவெடுத்தேன்
தேனி நானென்று
தேன் நீயென்று.
வாணியே; இது
வாலிபக் கூத்தென்று
நாணிப்போகாதே
வா- நீ!
'ஆடி' யிலும் மனசை
ஆட்டிப் படைப்பவளே!
கூடிக் குலாவ
நாடி வந்தால்
ஓடிப் போறாயேன்?
தேடி வாடி தேவி!
உன்னால்
வாடி வதங்குதடியென்
வாலிபம்.
'ஆவணி' மாதத்திலே
தாவணி போட்டவளே!
'புரட்டாதி'யிலாவது உன்
வரட்டுக் கௌரவத்தை
புரட்டி விட்டு வா!
'ஐப்பசி'யிலென்
மெய்ப்பசியைத் தீர்க்க அல்ல..
'கார்த்திகை'யில் காதலித்து
'மார்கழி'யில் மாற்றிடவா மாலை!

■பொத்துவில் அஸ்மின்

## உணர்வுகள் 14




## கம்பனையும் மிஞ்சிவிட்ட கவிக்கோமான் என்பேனா! காவியங்கள் படைத்தவர் போல் பாடுமோ என் - பேனா?

'காவியப் புலவர்' டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

கன்னித் தமிழ ணங்கை
கண்டவரும் விண்டு ரைக்க
பண்ணி வைத்தார் காவியங்கள் ஆறு!
'தண்ணிகின்னி' ஏது மின்றி
தங்கக்கவி கொட்டு மீழ
மண்ணில்கவி ஜின்னா வைப்போல் யாரு?

"தம்பி நீங்க யாப்பிலக்கணத்த மொறையாபடிச்சிக் கொள்ளுங்கோ. நானும் ஆரம்பத்தில ஓசைக்குத்தான் எழுதினன். பொறகுதான் யாப்ப வாப்பக்கிட்ட படிச்சன். நீங்க யாப்ப சரியாக படிச்செயலெண்டா என்னவிட பெருங் கவிஞனாய் வருவயெலெண்டு ஓங்கட கவிதய பாத்தொன்ன விளங்குது. உண்மையிலேயே ஓங்களுக்கு கவிதை வருது..."

என்று கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் எமது அறிமுகத்தின் முதல் சம்பாஷணையிலே கூறியபோது அவரது பெருந்தன்மையை உணர்ந்து கொண்டேன். தன்னை மிகைத்தொருவன் தளைத்துவிடல் தப்பென்று பிஞ்சியிலே நஞ்சு வைக்கும் வஞ்சகர்கள் வார்த்தைகளால் துஞ்சிக் கிடந்த நெஞ்சில் அவரது பேச்சு துணிவை விதைத்தது.

தற்கால தமிழ் இலக்கிய தரணியில் தலைசிறந்த காவியங்களை தண்டமிழுக்கு ஈந்த தானைத் தலைவராக 'கவிசாம்ராட்' ஜின்னாஹ் ஷரிபுத்தீன் திகழ்கின்றார். தமிழால் அவர் வளம் பெற்றிருக்கிறார் என்பதைவிட தமிழை அவர் வளப்படுத்தியிருக்கின்றார் என்பதே பொருந்தும்.

யாப்புக்கு இன்று தோப்புக்கரணம் போடும் மரபுக் கவிஞர்களின் மத்தியிலே அரபுக் குதிரையைப் போல் முரண்டு பிடிக்கும் மரபுக்கவிதைகளை தன்முன் மடிகாலில் நிற்கவைத்து கேள்வி கேட்பவர் அவர்.

கிழக்கிலங்கையின் முதல் முஸ்லிம் ஆசிரியரும், விபுலானந்த அடிகளாரின் சீடனுமாகிய தமிழ்ப்பண்டிதர் 'புலவர்மணி' ஆ.மு.ஷரிபுத்தீன்

'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்'

என்று வள்ளுவன் சொன்னதுபோல் சான்றோர்கள் கூடும் சபையிலே சான்றோனைவிடச் சான்றோனாய் இருக்க ஞானப்பாலூட்ட...

'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
எந்நோற்றான் கொல்லெனும் சொல்'



என்பதற்கு அமைய தந்தையின் புகழை நிலைக்க வைத்து தமிழின் சிறப்பையும் நிலை நிறுத்தியவர்.

'நான்பார்த்த கவிஞரிலே நல்லதொரு கவிஞன்
நான்தேர்ந்த நண்பரிலே நல்லதொரு பண்பன்
தேன்வார்த்த சொற்களினால் தெவிட்டாத கருத்தைத்
தென்றலென வீசியுளஞ் சிலிர்த்திவிடுஞ் சித்தன்
ஒருநாளில் ஏழுபத்து கவியெழுத வல்லான்
ஒருநூறு எழுதுவதும் இவனுக்கு இலகாம்.
வருநாளில் ஜின்னாஹ்வின் பெயர்கவிதை வானில்
வரகவியென் றேயொளிரும் அட்டியதற் கில்லை'

என்று பத்திரிகை ஜாம்பவான் அறிஞர் எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் புலவரை வியந்து போற்றுகிறார்.

1943-09-01 ஆம் திகதி பிறந்த புலவர் ஜின்னாஹ் 1965 களில் எழுத்துலகில் நுழைந்தாலும் அவரது கன்னிப் படைப்பை 1970 களிலேயே 'இறைவழி நடப்போம்' எனும் மகுடத்தில் தினபதி கவிதா மண்டலம் பெற்றெடுத்தது. அன்றிலிருந்து கவிமழை பொழிய ஆரம்பித்த இந்தக் கலைமேகம் ஏழாயிரத்துக்கும் அதிகமான கவிதைகளைச் சிந்தி தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே 'ஆறு காப்பியங்களை' பாடிய ஒரேயொரு கவி ஆறாய் ஓசையில்லாமல் ஓடிக்கொண்டே இருக்கிறது.

காப்பியங்களுக்கு உரைநூல் எழுதுவதே மரபு. ஆனால் உரைநடையையே காப்பியமாக்கிய பெருமை ஜின்னாஹ்வையே சாரும்.

இலக்கியத்தின் பல கூறுகளையும் நல்லாட்சி செய்யும் நம் கவிஞர் பெற்ற பரிசுகள், பட்டங்கள், விருதுகள் எண்ணிலடங்காதவை. இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையின் மூலை முடுக்கெங்குமுள்ள இலக்கிய மன்றங்களும்; **ஷம்ஸுல் லுஹறா, கவிமாமணி, நற்கவிஞர், தமிழ் மாமணி, காவியத் தலைவன், கலாபூசணம்** (2005) போன்ற பட்டங்களை வழங்கி கௌரவித்துள்ளன. அவர் இருபதுக்கும் மேற்பட்ட தேசிய ரீதியான இலக்கியப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளையும் விருதுகளையும் வென்றிருக்கிறார். கவிஞரின் புகைப்படத்தை 'மல்லிகை'யும் தனது முகப்பில் மலரவைத்து மேலும் அவர் புகழை மணக்கச் செய்திருக்கிறது.

உலகப் புகழ்பெற்ற காவியங்கள் எதுவும் இல்லாமையில் இருந்து உருவானவை அல்ல. பெரும்பாலும் அனைத்தும் தழுவலே. ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியர் செய்த நாடகங்கள் எல்லாமே முன்பே வழக்கில் இருந்த கதைகள் தாம். காளிதாசனும் கண்ணதாசனும் அப்படியே. ஏற்கனவே வால்மீகியினால் வடமொழியில் சொல்லப்பட்ட இராம சரிதத்தையே கம்பர் இராமாயணமாக படைத்தார். முன்பிருந்த கோவலன்-கண்ணகி கதையையே இளங்கோ சிலப்பதிகாரம் ஆக்கினார். விவிலியக் கதைகளில் வரும் மோஸஸ்-பார்வோன், மகாபாரதத்திலே வரும் கர்ணன்-துரியோதனன் பாத்திரங்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை கற்றவர்கள் அறிவர். ஆனால், கவிஞர் பாத்த மஹ்ஜபீன் காவியம், புனித பூமியிலே காவியம் இவ்விரு காவியங்களையும் நாவல்களின் தழுவல் என்று தேசிய சாஹித்திய மண்டல பரிசளிப்பில் ஓரவஞ்சனை செய்தவர்கள் அவரின் 'பண்டார வன்னியன்' என்ற காவியத்துக்கு தேசிய சாஹித்தியமண்டலப்பரிசு வழங்கியது வியப்பைத் தருகிறது.

**மஹ்ஜபீன் காவியம்** (1992), **புனித பூமியிலே காவியம்**(1998), **பிரளயம் கண்ட பிதா, தாய்க்கென வாழ்ந்த தனயன்** (இரட்டைக் காப்பியம்-2001), **பண்டார வன்னியன் காவியம்** (2005), **திருநபி காவியம்** (2006) என்று ஆறு காவியங்களோடு சேர்த்து பதினான்கு பனுவல்களை தமிழ் இலக்கிய உலகுக்கு கொடுத்துள்ளார். புலவரின் 'பெற்ற மனம்' சிறுகதைத் தொகுப்பு கலாசார அலுவல்கள் அமைச்சினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கப்பட்டது போல் அவரது காவியங்களும் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கும் பாடநூலாக வைக்கப்படுவதற்கு பூரண தகுதி பெற்றவையாகும். அவரது "மஹ்ஜபீன் காவியம்", 'புனித பூமியிலே காவியம்' என்னும் இரு காவியங்களும் கவிமாமணி அகளங்கன் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு "கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள்" எனும் தலைப்பில் நூலுருப் பெற்றுள்ளதோடு இவ்விரண்டு காப்பியங்களும் தமிழ் நாட்டின் வேலூர் மாவட்ட 'அப்துல் ஹக்கீம்' கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.முஹம்மது அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு 2006இல் அவர் டாக்டர் பட்டம் பெறுவதற்கு வழி[illegible]த்தது. இவை யாவும் கவிஞரின் கவிதா ஆளுமைக்கு கிடைத்த பொற் கிரீடங்களாகும்.

இலங்கை இஸ்லாமிய ஆய்வகத்தின் தலைவராக, கொழும்பு தமிழ் சங்கத்தின் துணைத்தலைவராக, இலங்கை கலாசார அமைச்சின் நுண்கலைப்பிரிவு உறுப்பினராக, இந்திய இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் இலங்கைப் பொறுப்பாளராக... இவ்வாறு கவிஞர் இலக்கிய உலகிலும் வெளியிலும் வகித்த வகிக்கும் பதவிகள் ஏராளம்! ஏராளம்!. 2002ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தால் நடத்தப்பட்ட உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் அமைப்புத் தலைவராக இருந்து அவ்விழாவை செவ்வனே நடத்திய பெருமைக்குரியவர். கவிப்பேரரசு வைரமுத்து, புதுக்கவிதையின் தாத்தா கவிஞர் மேத்தா கூட அவரது புலமையைக் கண்டு புல்லரித்து இந்தியாவில் நடந்த இலக்கிய விழாவில் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். 'கூலிக்கு மாரடிக்கும், சிலர் அவரின் வளர்ச்சியின் மீதும் ஆளுமையின் மீதும் பொறாமை கொண்டு ஊளையிடுவதைப் பார்க்கும் போது

சிங்கத்தை வெல்வதற்கு
சிறுநரி முயலலாமா?
தங்கத்தை தரையில் வீச
தகரத்தால் முடியுமா சொல்? என்றே கேட்கத் தோன்றுகிறது.

(உணர்வுகள் தொடரும்...)





# அன்புள்ள அம்மாக்களே!...

அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் என்னதான் நெருங்கிய பந்தம் இருந்தாலும் அவர்களுக்குள்ளும் போட்டி மனப்பான்மை இருக்கவே செய்கிறது. தோழிகளாக இருக்கும் இவர்கள் சண்டைக் கோழிகளாக சிலிர்த்துக்கொண்டு நிற்க, வயதும் ஒரு விதத்தில் காரணமாகிறது. குறிப்பரக, 'அந்தக் காலத்தில் நாங்க எப்படி இருந்தோம் தெரியுமா, நீயும் அதே மாதிரி அடக்க ஒடுக்கமா இருந்தாகணும்' என்று கட்டுப்பாடுகளை விதிக்கும் போது அம்மா - மகளுக்கு இடையிலான பனிப்போர் தொடங்கிவிடுகிறது.

குழந்தைப் பருவத்தில் தாயின் அரவணைப்பிலேயே வளரும் மகள், வளர் இளம் பருவத்தில் காலடி வைத்ததும் உண்மையில் அம்மாவிடமிருந்து விலகிப்போகிறாளா? இந்த இடைவெளிக்கு நன்னடத்தை காரணமா?

அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு ஊஞ்சலாடும் மகள், ஒரு கட்டத்தில் தனது அறைக்குள்ளேயே முடங்கத் தொடங்குகிறாள். நேரத்தைத் தனியாக செலவிடவும் விரும்புகிறாள். இதனால், அவளது நடத்தையிலும் பலவித மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால், காலத்துக்கேற்ப மாறிவரும் உறவுகளை ஏற்றுக்கொள்வது அம்மாவைப் பொறுத்தவரை அத்தனை எளிதானதல்ல. அம்மா என்னதான் மகளைத் தன்பக்கம் இழுத்தாலும், மகள் அந்த அளவுக்கு ஈடுபாடு காட்டுவதில்லை. இப்போது அந்த அம்மாவுக்கு என்ன செய்யவேண்டும் என்பதே பெரும் சவாலாகி விடுகிறது. பெரும்பாலான அம்மாக்களுக்கு பெண்கள் தங்கள் மனம்போன போக்கில் நடந்துகொள்வது தான் பெரிய பிரச்சினையாக உள்ளது. தோழிகள் வீட்டிற்கு வந்தால் அவர்களை மாடிக்கோ அல்லது அறைக்கோ அழைத்துச் சென்று தனிமையில் பேசும் பழக்கம் வந்திருக்கும். அம்மா கவலையுடன் காரணம் கேட்டால் அதற்குச் சரியான பதில் சொல்வதுமில்லை. கொஞ்சம் அதட்டிக்கேட்டால் எதிர்வாதம் செய்வாள் அல்லது மழுப்பலாக பதிலளிப்பாள். 'இதற்கு முன்பு அவள் என்னிடம் இப்படி நடந்துகொண்டதில்லையே' என்ற புலம்பல் ஆரம்பமாகிவிடும் அம்மாவின் தரப்பில்.

ராதாவின் அம்மா இந்துமதிக்கும் இதே பிரச்சினைதான். மகள் மணிக்கணக்கில் போனில் அரட்டையடிப்பது, கிசுகிசு குரலில் பேசுவது அவளுக்குத் துளியும் பிடிப்பதில்லை. இறுக்கமான உடைகளைப் போடாதே என்று பலதடவை ஆட்சேபித்திருக்கிறாள். ஆனால், ராதா கேட்டால்தானே?

'தினந்தோறும் வீட்டுப்பாடம் செய்வதற்காக தோழி வீட்டுக்குப் போகவேண்டும் என்று அப்படி என்ன அவசியம்? நாங்க படிக்கும் போது ஒரு நாள் தோழி வீட்டிற்குப் போயிட்டு வந்தால் வீட்டையே களேபரமாக்கிடுவாங்க, தெரியுமா?' இது இந்துமதியின் 'பிளாஷ்பேக்'.

## முடிவெடுக்கப்போவது யார்?

மகள் மீது பெற்றோர் அடுக்கும் குற்றச்சாட்டுகளை விரல்விட்டு எண்ணமுடியாது. அதேபோல் வளரும் பருவத்தில் உள்ள பெண்கள் தங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதை விரும்புவதில்லை. அம்மா மகள் மீதும், மகள் அம்மா மீதும் எந்தளவுக்கு அதிகாரம் செலுத்துகிறார்களோ அந்த அளவுக்கு வேறு யாரும் செலுத்துவதில்லை என்பது 100சதவீதம் உண்மை. வளரும் இளம் பருவத்தில் உள்ள மகளுக்கும் அம்மாவுக்கும் இடையிலான அதிகார மைய இழுபறியில் முடிவெடுக்கப்போவது யார்?

வளரும் பருவம்ஒரு திசையில் இல்லாமல் திசைமாறிக்கொண்டே இருக்கும் பருவமாகும். அதனால், மகளை முறையான திசையில் திருப்ப அம்மா முயற்சி எடுக்கிறாள். ஆனால், அம்மாவின் நீண்ட அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மகளுக்கு இருப்பதில்லை. இரண்டுபேரும் தாங்கள் சொல்வதே சரி என நிரூபிக்க விரும்புகின்றனர்.

இளம் மனதில் இத்தகைய மோதல்கள் ஆபத்தான வெறுப்பை உருவாக்கிவிடுகின்றன. இது அம்மா - மகளுக்கு இடையிலான பேச்சு வார்த்தையைக் கூட நிறுத்துமளவுக்கு ஆபத்தானது. ஆனால், இளம்கன்று பயமறியாது என்பதுபோல், தண்டனை குறித்து வளரும் இளம்பெண்கள் பயப்படுவதில்லை. மாறாக மனம் சொல்லுவதை துணிந்து செய்கின்றனர்.

## மகனா, மகளா?

நமது சமுதாயத்தில் மகளுக்குத் தேவையானவற்றை கணவனிடம் பேசி வாங்கித் தரும் தகவல் தொடர்பு ஊடகமாக செயல்படுகிறாள் அம்மா. அதனால், அம்மாவுடன் பாதுகாப்பு உணர்வுடன் இருக்க மகள் விரும்புகிறாள். ஆனால், அந்த உணர்வு அவளுக்குக் கிடைப்பதில்லை. உதாரணத்துக்கு மகன் மீது அம்மா காட்டும் அதிகமான பரிவு தான், புறக்கணிக்கப்படுகிறோம் என்ற உணர்வை மகளிடம்

(26 ஆம் பக்கம் பார்க்க)

# நாடகங்களிலும் திரைப்படங்களிலும் சாதனைப் படைத்த ஆர். எஸ் மனோகர்





தென்னக திரைப்பட நடிகர்களில் கதாநாயக மற்றும் நகைச்சுவை நடிகர்களைப் போலவே சில வில்லன் நடிகர்களும் பேசப்படுகிறார்கள். அன்றைய பிரபலமான வில்ல நடிகர்கள் நம்பியார், எஸ்.ஏ.அசோகன் P.S.வீரப்பா போன்றவர்களுடன் அதிகமாக பேசப்பட்ட ஒருவில்லன் நடிகர் தான் மறைந்த ஆர். எஸ் மனோகர். நாடக காவலரான இவரின் இயற்பெயர் லட்சுமி நரசிம்மன். இவர் பச்சையப்பன் கல்லூரியில் B.A. படித்துக்கொண்டிருந்தபோது மிருச்சகடிகா என்ற நாடகத்தில் கதாநாயகனாக நடித்தார். அந்த கதாபாத்திரத்தின் பெயர் மனோகரா! எனவே தன்னுடைய பெயரை மனோகர் என மாற்றிக்கொண்டார். இவர் தன் படிப்பை முடித்துவிட்டு தந்தையைப் போலவே தபால் துறையில் வேலைக்குச் சேர்ந்தார். அப்போது தான் 'கானல் நீர்' படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. 1954இல் சொந்தமாக நேசனல் தியேட்டர்ஸ் நாடகக்குழுவை ஆரம்பித்தார். இந்த நாடகக் குழுவினால் மேடையேற்றப்பட்ட முதல் நாடகம் அண்ணன்-தங்கை பாசத்தை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட 'இன்பநாள்' என்ற நாடகமாகும்.

இவரின் மூன்றாவது நாடகமான 'இலங்கேஸ்வரன்' ராவணனை நல்லவனாகவும் சீதை ராவணனின் மகள் என்றும் சொன்னதை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நாடகம் படுதோல்வியாகி பெரும் நஷ்டத்தைக் கொடுத்தது. இந்நிலையில்தான் இலங்கை கொழும்பு நகரில் இலங்கேஸ்வரன் நாடகத்தை நடத்தும் வாய்ப்பு கிடைத்தது. ஒரே அரங்கில் 21 நாட்கள் தொடர்ந்து வெற்றிகரமாக நடந்தது. இந்நாடகம் 1800 முறைக்கு மேல் மேடையேறி சாதனைப் படைத்தது. இவர் ஆரம்பத்தில் 18 திரைப்படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார். என்று சொன்னால் நம்புவீர்களா? ஆனால் அதுதான் உண்மை. என்னதான் திரையில் தோன்றி நடித்தாலும் நாடகத்தில் நடிக்கும் போது கிடைக்கும் கைதட்டல் ஓசை காதுகளில் விழும்போது கிடைக்கக்கூடிய சந்தோஷத்துக்கு இணை ஏதுமில்லை என்பது இவரின் கருத்தாகு.

இவர் கதாநாயகனாக நடித்த திரைப் படங்களில் 'வல்லவனுக்கு வல்லவன்', 'இருவல்லவர்கள்', 'வண்ணக்கிளி', போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'எதிரிகள் ஜாக்கிரதை' என்ற படத்தில் மாறுபட்ட நடிப்பால் அனைவரையும் வியப்பிலாழ்த்தினார். அதேபோல 'கைதி கண்ணாயிரம்', 'வண்ணக்கிளி' ஆகிய படங்களில் தனது பண்பட்ட நடிப்பால் அனைவரினதும் பாராட்டினைப் பெற்றமைக்கு இவரின் நாடக அனுபவமே பிரதான பங்கினை வகித்தது. மேலும் வில்லன் நடிப்பில் இவருக்கென தனிப்பாணியை பின்பற்றினார். மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., சிவாஜி கணேஷன், ஜெய்சங்கர் மற்றும் ரவிச்சந்திரன் போன்றவர்களின் படங்களிலேயே அதிகமாக வில்லன் பாத்திரத்தில் தோற்றினார். அதே சமயம் குணசித்திர பாத்திரங்களிலும் இவர் நடிக்கத் தவறவில்லை.

மொடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர். சுந்தரத்திற்கு மனோகரை ரொம்பப் பிடிக்கும். எனவேதான் அவர் தயாரித்த பல படங்களில் அதாவது கிட்டத்தட்ட 18 படங்களில் அவருக்கு வாய்ப்பு வழங்கியிருக்கிறார். மக்கள் திலகம் எம். ஜி ஆருடன் இவருக்கு நல்ல நட்பு இருந்தது. எம்.ஜிஆரின் பல திரைப்படங்களில் இவர் பிரதான வில்லனாக நடித்துள்ளார். குறிப்பாக எம். ஜி ஆரின் சொந்தப் படமான 'அடிமைப்பெண்' 'உலகம் சுற்றும் வாலிபன்' போன்றவற்றில் இவர் பிரதான வில்லன் பாத்திரமேற்றிருக்கிறார். இவரின் வாட்ட சாட்டமான உடலமைப்பு மற்றும் கம்பீரமான குரல், தெளிவான உச்சரிப்பு யாவுமே இவரை கலையுலகில் தக்க வைத்துவிட்டன. இவரின் மறைவுக்குப் பின் இவரின் வாரிசுகள் எவரும் கலையுலகுக்கு வராதது உண்மையிலேயே வருந்தத்தக்கதொரு விடயமாகும்.

பாலா சங்குபிள்ளை




**அனுஷா முருகன், நாவலப்பிட்டி.**
**கே: பித்தா! தாய்லாந்தில் உள்ள ஒரு பௌத்த கோவிலில் சாதுக்கள் புலிகளை சாதுவாக வளர்த்து வருகிறார்களாமே! அப்படி வளர்த்தால் புலியின் உண்மைக் குணம் மாறிவிடுமோ?**



ப: உண்மையான குணம் மாறாது. குணம் பிறப்பிலேயே உள்ளது. ஆனால், புலிக்கு பக்கெட் பாலும் வீட்டு உணவும் கொடுத்து வளர்த்தால் அது 'புத்தம் சரணம் கச்சாமி' பாடினாலும் ஆச்சரியம் இல்லை.

**எஸ். ஹம்மாத், பொத்துவில்.**
**கே: பித்தா! ஹைக்கூ என்பது மூன்று வரிகள் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற விதி இப்பொழுது மீறப்படுகிறதே?**
ப: இப்போது ஹைக்கூ என்று பொய்யும் [illegible]த்து வருகிறது. உண்மையான ஹைக்கூ [illegible]பது எப்போதாவது தோன்றும். மிக மிக அரிதானது
இந்த ஹைக்கூவை இரண்டு, மூன்று தடவை படித்துப் பாருங்கள்.
'சரியாக என் காலடியில்
எப்போது இங்கு வந்தாய்,
நத்தையே!'

**எல்.மோகன், வவுனியா.**
**கே: பித்தா! திருமணங்கள் நிச்சயிக்கப்படுவது சொர்க்கத்திலா, நரகத்திலா?**
ப: சிலருக்கு சொர்க்கத்தில், சிலருக்கு நரகத்தில்!

**எம்.ஏ.தாஜுகான், தெ.கி.பல்கலைக்கழகம்.**
**கே: பித்தா எனது நண்பர்களிடம் இலக்கியம் பற்றிக் கதைத்தாலே நக்கலடிக்கின்றனர்? நான் என்ன செய்வது?**
ப: பன்றிகள் இருக்குமிடத்தில் முத்துக்களை தூவாதீர்கள்!

**க.யேசுதாசன், மாத்தறை.**
**கே: வயதானவர்கள் மட்டுமே அதிகம் சுருட்டுப் பிடிக்கிறார்களே? என்ன காரணம் பித்தா?**




ப: அவர்களுக்கு அதிக நேரம் இருக்கிறது.

**த.காண்டீபன், வெள்ளவத்தை.**
**கே: பித்தண்ணா! கவிப் பேரரசுவின் உங்களுக்குப் பிடித்த சிலேடை வரிகள்...**
ப: மாடமதி போலும்
மலையாளப் பெண்களுக்கு
மூடப் பழக்கமில்லை!
முத்தான தம் மார்பை
மூடப் பழக்கமில்லை- அதை எனக்கு
பாடப் பழக்கமில்லை
பாடிவிட்டேன் போய் வரவா!

**அஜீபா அன்ஸார், பட்டியபடிப்பிட்டி.**
**கே: பித்தா! மனிதன் முதன் முதலில் என்ன தொழில் செய்தான்?**
ப: வேட்டையாடினான்.

**ம. பாலன், பண்டாரவளை.**
**கே: பித்தா! சந்தர்ப்ப வசத்தால் முட்டாளாக்கப்பட்ட மேதைகளும் இருக்கிறார்களா?**
ப: விஞ்ஞானி ஐன்ஸ்டீன் ஒரு முறை தொடர் வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த போது சிற்றுண்டி சாப்பிட ஆசைப்பட்டார். சர்வரிடம் இருந்து மெனுகார்ட்டை வாங்கி அவர், அதைப் படிக்க தான் பயன்படுத்தும் மூக்குக் கண்ணாடியை தேடினார். ஆனால், அது எங்கும் கிடைக்காததால் மூக்குக் கண்ணாடி இல்லாமலேயே படிக்க முயன்றார். முடியவில்லை. கடைசியில் சர்வரிடமே கொடுத்து ''இந்தா நீயே படி'' என்றார் ஐன்ஸ்டீன். அதற்கு சர்வர் ''மன்னிக்க வேண்டும். நான் கூட உங்களைப்போல படிக்காதவன்'' என்றானே பார்க்கலாம்.



**தாரிக் அஸீஸ், கண்டி.**
**கே: பித்தா! மனிதன் அணு ஆயுதத்திலிருந்து தப்புவதற்கு ஏதாவது வழியை கண்டுபிடித்துள்ளானா?**
ப: ரஷ்யாவில் அணு ஆயுதப் போரிலிருந்து பாதுகாத்து கொள்வதற்கு மிகப்பெரிய சுரங்கம் ஒன்றை அமைத்திருக்கின்றனர்.



**அ.சின்னத்தம்பி, திருநெல்வேலி.**
**கே: பித்ஸ்! நாகாக்க என்பது பற்றி குட்டிக் கதை ஒன்று சொல்வீரா?**



ப: சர்வாதிகாரி ஹிட்லர் சொல்ல முடியாத தொல்லைகளை யூதர்களுக்கு கொடுத்து வந்தார். ஹிட்லருக்கு ஜோதிடத்தில் ஆழ்ந்த பற்றுதல் உண்டு. ஒரு நாள் ஜோதிடம் பார்த்துக் கொண்டிருந்த போது, ''என்னுடைய கடைசிக் காலம் எப்படி இருக்கும்?, என் மரணம் எப்படி வரும்? '' என்று கேட்க, அதற்கு அந்த ஜோதிடர் ''யூதர்களின் ஒரு திருநாளன்று நீங்கள் மரணம் அடைவீர்கள்''.
''அந்தத் திருநாள் எப்போது வரும்?'' என்று ஹிட்லர் கேட்டதற்கு ''நீங்கள் என்று மரணம் அடைகிறீர்களோ அந்த நாளே யூதர்களின் திருநாள்'' என்று கூறினார். தன்நாவை பாதுகாக்கத் தவறிய ஜோதிடர் உடனடியாக கம்பி எண்ணப் போனார்.

**செ.மதிவாணன், மாதம்பிட்டி.**
**கே: பித்தா! ஜோக் பிளீஸ்!**
ப: ஒருவர் டீக்கடையில் உட்கார்ந்து இருந்த போது இரண்டு பிணங்களை சுடுகாட்டுக்கு கொண்டு செல்வதைப் பார்த்தார். அவற்றுக்குப் பின்னே நாயுடன்ஒருவர் நடந்து செல்ல அவருக்கு பின்னே சுமார் 500 பேர் வரை ஒருவர் பின் ஒருவராக செல்வதைக் கண்டார். இது அவ ருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நாய் வைத்திருந்தவரை அணுகி ''இது போன்ற பிண ஊர்வலத்தை எத்தனையோ முறை பார்த்திருக் கிறேன். ஆனால், இந்த அளவுக்கு வரிசையாக யாரும் சென்றதில்லை. ஆமாம் யாருடைய ஊர்வலம் இது?'' என்ற கேட்டார்.
''முதலில் செல்வது எனது மனைவி''
''என்னவாயிற்று அவருக்கு?''
''எனது நாய் அவரைக் கடித்துக் கொன்று விட்டது.''
''இரண்டாவது பிணம்?''
''அது என் மாமியாருடையது. என் மனைவியைக் காப்பாற்றச் சென்ற அவரையும் கொன்று விட்டது.''
உடனே முதலாமவர் ஆர்வத்துடன் கேட்டார் '' இந்த நாய் எனக்கு வாடகைக்கு கிடைக்குமா?'' அதற்கு அவர் சொன்னார். ''வரிசையில் போய் நில்லுங்கள்''

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6.00 | காலைநேரச் செய்திகள் | காலை நேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | 6.00 | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச் செய்திகள் | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச்செய்திகள் |
| 6.30 | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | 6.30 | சங்கீத மேடை | சங்கீத மேடை |
| 7.00 | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | 7.00 | ராசிபலன் | கார்ட்டூன் |
| 7.30 | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | 7.30 | சிறுவர் உலகம் | கிட்ஸ் |
| 8.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொண்டாட்டம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | கொமடி ரைம் | 8.00 | | அரட்டை அரங்கம் |
| 9.00 | உங்கள் சொய்ஸ் | புத்தம் புது பாடல் | நீங்கள் கேட்டபாடல் | சுப்பர் 10 | உங்கள் சொய்ஸ் | 8.30 | | சின்னச் சின்ன ஆசைகள் |
| 9.30 | நேற்று இன்று நாளை | நினைவுகள் | நட்சத்திரம் | இயக்குநர் பார்வை | நேற்று இன்று நாளை | 9.00 | திரை விமர்சனம் | |
| 10.00 | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | 9.30 | ராஜ ராஜேஸ்வரி | அல்லி ராஜ்யம் |
| 10.30 | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | 10.00 | அது மட்டும் ரகசியம் | வேப்பிலைக் காரி |
| 11.00 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | 10.30 | இளமை புதுமை | சண்டே சமையல் |
| 11.30 | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | 11.00 | | சுப்பர் சீன்ஸ் |
| 12.00 | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | 11.30 | சினி சொய்ஸ் | இளைய கானம் |
| 12.30 | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கை | 12.00 | அன்புடன் | அசத்தப்போவது யாரு? |
| 01.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதியசெய்திகள் | 12.30 | | |
| 01.15 | வைகாசி பொறந்தாச்சு | செம்பருத்தி | அழகன் | ஜோடி | விரும்புகிறேன் | 1.00 | கிரிவலம் | பகவதி |
| 04.00 | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | 4.00 | ஜொலிவூட் எக்ஸ்பிரஸ் | ஸ்ராருடன் பேசலாம் |
| 4.30 | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | 4.30 | குஷி ரைம் | ரிலாக்ஸ் ரைம் |
| 5.00 | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | 5.00 | நலந்தானா | ரொப் 10 மூவிஸ் |
| 5.30 | அட்வென்சர் மேன் | கிட்ஸ் ராமா | கிட்ஸ் ராமா | கிட்ஸ் ராமா | கிட்ஸ் ராமா | 5.30 | ஊரும் உலகும் | புதிய நாகங்கள் |
| 6.00 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | 6.00 | அறிவு | மின்னல் |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | 6.30 | திகிதகதா | |
| 7.00 | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | 7.00 | சக்தி சுப்பர் ஸ்டார் | |
| 7.30 | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | 7 | | |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | 8.00 | செய்திகள் | செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | 8.30 | வா வாத்தியாரே வா | வா வாத்தியாரே வா |
| 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் |
| 9.30 | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | 9.30 | நிஜத்தின் நிழல் | சிதம்பர ரகசியம் |
| 10.00 | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | 10.00 | களம் | 24 சீரிஸ் |
| 10.30 | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | சொக்கத்தங்கம் | 10.30 | அனுபவம் புதுமை | இசை சாரல் |
| 11.30 | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | | 11.00 | | திரை மசாலா |
| 12.00 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | 11.30 | | புத்தம் புதுசு |
| | | | | | | | நிகழ்ச்சி நிறைவு | |

மணித்தியாலச் செய்திகள் 10.25, 11.25, 14.25, 15.25, 16.25, 17.25

# பல வழிகளிலும் ஏமாறும் தோட்டத் தொழிலாளர்கள்

ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருந்து கொண்டே இருப்பார்கள். இலங்கையில் தொடர்ந்தும் தமிழர்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். குறிப்பாக மலையக தோட்டத் தொழிலாளர்கள்- அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள், தோட்ட முதலாளிமார், வர்த்தகர்கள் ஆகிய சகல தரப்பினராலும் ஏமாற்றப்பட்டு வருவது ஒன்றும் இரகசியமல்ல.





சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளையர்கள் இலங்கையில் தேயிலையை பயிரிட தென்னிந்தியாவில் இருந்து தமிழர்களை இந்த நாட்டுக்கு அழைத்து வந்தனர். இதற்கு தரகர்களே வெள்ளையர்களுக்கு உதவினர். இந்த தமிழ் தரகர்கள் தேயிலை செடியின் வேருக்கடியில் மாசிக் கருவாடு இருப்பதாக ஏமாற்றியே இங்கு தென்னிந்தியாவிலிருந்து தமிழர்களை அழைத்து வந்ததாகக் கூறப்படுகின்றது. இந்த தரகர்களுக்கு தோட்ட முதலாளிகளான வெள்ளையர்கள் பல சலுகைகளை வழங்கினர். இவர்கள் பெரிய கங்காணி என்ற பெயரில் வெள்ளையர்களால் ஜமீன்தார்களைப் போல் நடத்தப்பட்டனர். இத்தரகர்களால் அழைத்து வரப்பட்ட தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்தால் இவர்களது சம்பளத்தில் ஒரு பகுதி பெரிய கங்காணி என்றழைக்கப்படும் இந்த தரகர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் இத்தரகர்கள் மாதாந்தம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று சுகபோக வாழ்க்கை நடத்தினர். அது மட்டுமன்றி இந்த பெரிய கங்காணிமார் வர்த்தகமும் செய்து வந்தனர். குளிர்காலத்தில் இவர்கள் கம்பளிப் போர்வைகளை தொழிலாளர்களுக்கு விற்பனை செய்து வந்தனர். கம்பளி பத்து ரூபா என்றும் கறுப்புக் கம்பளி பதினைந்து ரூபா என்றும் ஒரே ரகமான கம்பளியை தொழிலாளர்களுக்கு விற்பனை செய்து ஏமாற்றினர் என்றும் கூறப்படுகின்றது.

150 வருடங்களுக்கு முன்னர் ஏமாற்றப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் ஏமாற்றப்படுகின்றனர். பெரிய கங்காணிமார் அன்று மேற்கொண்ட ஏமாற்று வேலைகளை இன்று மலையக அரசியல்வாதிகளும் தொழிற்சங்க வாதிகளும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். தேசிய அடையாள அட்டை பெறுவது முதல் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறுவதற்கும் தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் லஞ்சம் கொடுக்கின்றனர்.

தங்களது பல்வேறு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள நகரிலுள்ள தொழிற்சங்க காரியாலயத்துக்கு வரும் தோட்டத் தொழிலாளர்கள் சாராயம் மற்றும் சாப்பாட்டுப் பார்சல்களை வாங்கிக் கொடுக்காமல் எதையும் சாதித்துக் கொள்ள முடியாது.

நெற்றி வியர்வை மட்டுமன்றி தங்களது உடலையும் தேயிலைச் செடிகளுக்கு உரமாக்கும் இந்த தொழிலாளர்கள் படும் வேதனை கொஞ்ச நஞ்சமல்ல. 55வயது வரை மாடாக உழைக்கும் இந்தத் தொழிலாளர்கள் தமது ஒரே சேமிப்பான ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கும் லஞ்சம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்காக தோட்ட அலுவலகங்களிலுள்ள லிகிதர் முதல் தொழிற்சங்கவாதிகள் வரை ஆயிரக்கணக்கான ரூபாய்களை தொழிலாளர்கள் லஞ்சமாக வழங்குவது இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.





தோட்டத் தொழிலாளர்கள் வாக்குரிமை பெற்ற பின்னர் மலையக தமிழ் அரசியல்வாதிகளும் அதே பகுதிகளைச் சேர்ந்த பெரும்பான்மை இன அரசியல்வாதிகளும் இவர்களின் வாக்குகளைப் பெற பல்வேறு வழிகளில் ஏமாற்றத் தொடங்கிவிட்டனர். தேர்தல்களின் போது தோட்டங்களுக்கு படையெடுக்கும் அரசியல்வாதிகள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்குவதும் வெற்றி பெற்ற பின்னர் வழங்கிய வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டு விடுவதும் சகஜமாகிவிட்டது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 270

சொற்சிலம்பம் 270 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஜூலை 14 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒகஸ்ட் 04 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.268 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபாலட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு--14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 270

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 3 | 4 | 5 | | 6 |
| 7 | | 8 | | | | ■ | |
| ■ | 9 | | | ■ | 10 | 11 | |
| 12 | | | ■ | 13 | ■ | | ■ |
| 14 | | ■ | 15 | | | ■ | 16 |
| | ■ | 17 | | | ■ | 18 | |
| 19 | | | | ■ | 20 | | |
| | ■ | 21 | | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 268

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | 2 ர | ஞ் | 3 சீ | 4 வி | ■ | 5 க | 6 தா |
| 7 பா | தி | ■ | 8 ம | ர | 9 க | த | ம் |
| ரி | ■ | 10 ச | ந் | த | ன | ம் | ■ |
| 11 சு | 12 க | ந் | த | ம் | ■ | 13 ப | 14 சு |
| ■ | 15 வ | த | ம் | ■ | 16 அ | ம் | மா |
| 17 ஊ | ர் | தி | ■ | 18 த | ரு | ■ | ர் |
| ■ | ச் | ■ | 19 ந | ர | ம் | 20 பு | ■ |
| 21 தே | சி | ய | ம் | ■ | 22 பு | ழு | தி |

## சொற்சிலம்பம் போட்டி இல.270

**இடமிருந்து வலம்**

1. ஈருமுன்ன இடத்தில் வளரும்.
3. இன்னொருவரின் சார்பில் வருபவன்.
7. கல்லில் செய்த (தெய்வச்) சிலை.
9. தீவிரமான நிலை.
10. ஒரு கிழமை/ ஒரு கோளும் கூட.
12. கொளுவு/சண்டைக்குச் செல்.
14. தலையிலிருந்து விண்ணுக்கு ஏவும் கணை.
15. இளையவன்.
17. தாய்.
18. பெருக்கல் குறியீடு
19. சீனி தயாரிப்பது இதிலிருந்து.
20. சமுத்திரம்.
21. தொன்மையானது.

**மேலிருந்து கீழ்**

1. பாவம் செய்தவன்.
2. இறுக்கமாகச் செலவு செய்தல்.
3. மயக்க நிலைத் தோற்றம்.
4. விதை.
5. பூட்டான் தலைநகர்.
6. வலு/ திறமை பற்றிய நிலை.
8. தென்னையின் ஓலையிலிருந்து இழைப்பது.
11. சிரசு.
12. (அரசனின்) பத்து உறுப்புக்கள்.
13. ஒன்றுமில்லாமல்/ வெறுமனே.
15. இசைக்கருவி.
16. ஒரு மீன் வகை.
17. வாளி.
18. சுவட்டு அடையாளம்/ கண்ணி.
20. பாரமான/ அதிக.

## சொற்சிலம்பம் போட்டி இல. 268

1. சி. உமாபதிசிவம், இல.333/3 எப், சென்ற் அந்தனிஸ் மாவத்தை, கொலன்னாவிட்டிய, ஹெந்தலை, வத்தளை.
2. எம்.எச்.எம்.ஜவுபர், 145, கல்பொக்கை வீதி, வெலிகாமம்.
3. எம்.எஃப். பாத்திமா றினோஸா, இல. 28, மரே வீதி, அம்பாந்தோட்டை.


**பாராட்டுப் பெறுவோர்**

1. திருமதி.கே.நிஷாபேகம், வெல்லம்பிட்டிய.
2. எஸ்.அமலவதி பெர்னாண்டோ, பேசாலை.
3. பாத்திமா ஜெஸ்மின், மாத்தளை.
4. திருமதி.நீற்றா குணரெட்ணம், கொழும்பு-06.
5. மங்களம் மனோரஞ்சன், கல்முனை -02.
6. நெல்சன் ஜெபத்துரை, பண்டாரவளை.
7. திருமதி.எஸ். ஹமீட், கொழும்பு -08.
8. செல்வி.சிவகாமி இராஜதுரை, கலகா.
9. எம். ஷாமில், ஹட்டன்.
10. செல்வி. ஸகீனா ஜிப்ரியா, மாத்தறை.
11. செல்வி.சே.லோகினி, மன்னார்.
12. யூனுஸ் அப்துல் ரஹ்மான், பேருவளை.
13. திருமதி.தர்மராசா அருந்ததி, திருக்கோவில் -02.
14. ம.கஜந்தன், வவுனியா.
15. எம்.எஸ்.எம்.பாரூக், மதுரங்குளிய.

# அறிவியல்

சி.கே.ஆர்

## ஒலிநாடாவில் பதிவு செய்யப்படும் எமது குரல் எமக்கே புதிதாக இருப்பது ஏன்?



குரல் நாண்களில் இருந்து எழும்பி, காதுகளை அடைவதன் மூலம் எமது பேச்சை எம்மால் கேட்க முடிகிறது. இது இரு வழிகளில் நடைபெறுகிறது. காற்றலைகள் வழியாகவும், தாடை எலும்பு, உட்செவி எலும்பு ஆகியவற்றின் அதிர்வு காரணமாகவும் எமது பேசும் பேச்சு நம் செவியை அடைகிறது. எனவே நாம் பேசும் பேச்சொலியை மேற்கூறிய இருவகை அதிர்வுகளின் ஒருங்கிணைப்பால் நாம் கேட்கிறோம். ஆனால், பிறர் பேசும் ஒலியும் பதிவு செய்யப்பட்ட ஒலியும் மேற்கூறிய இரு வழிகளில் அல்லாமல் காற்றலைகள் வழியாக மட்டுமே எமது செவியை அடைகின்றன. எனவே பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்படும் எமது பேச்சொலி இயற்கையாக நாம் பேசும் ஒலியிலிருந்து வேறுபட்டு நிற்கிறது.

## பெண்களின் தலையில் ஏன் வழுக்கை உண்டாவதில்லை?



முடி வளர்வதும் முடி உதிர்வதும் இயற்கை நிகழ்ச்சிகள். முடி உதிர்ந்த பின்னர் மீண்டும் முளைத்து வளர்கிறது. ஆனால் சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவ்வாறு மீண்டும் முளைத்து வளர்வது நின்று போகிறது. இதற்கு பால் தூண்டிகள் முக்கியமாக ஆண்ரஜன் என்னும் ஆண் பால் தூண்டிகளே காரணம். முடி உதிர்வது மரபு வழிப்பட்டது என்பதை இன்னொரு காரணமாகவும் கூறலாம். குடும்பத்தில் தாய் வழியாகவோ தந்தை வழியாகவோ மக்களுக்கு இது ஏற்பட வாய்ப்புண்டு. தந்தை வழுக்கைத் தலையராக இருப்பின் அவரது மகனுக்கும் வழுக்கை உண்டாகும். மாறாக தாய் தான் வழுக்கையின்றி இருந்தாலும் வழுக்கை ஏற்படுவதற்கான மரபணுவைத் தன் மகனுக்குச் செலுத்துவதும் உண்டு. வழுக்கை என்பது ஆண், பெண் இருபாலார்க்கும் பொதுவானதே; ஆண்களில் 40 விழுக்காட்டினருக்கும், பெண்களில் 5 முதல் 10 விழுக்காட்டினருக்கும் வழுக்கை ஏற்படலாம். பெண்கள் நீண்ட தலை முடியைக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு முடி உதிர்வது வெளிப்படையாகத் தெரிவதில்லை. உதிராமலிருக்கிற மற்ற முடிக்கற்றையால் வழுக்கை மறைக்கப்பட்டு விடுகின்றது. மாறாக ஆண்களுக்கு குட்டை முடி உள்ளதால் அவர்களின் முடி இழப்பு வெளிப்படையாகத் தெரிகிறது. குறிப்பாகத் தலையின் மேற்பகுதியில் வழுக்கை தெளிவாகக் காட்சியளிக்கிறது. இவை தவிர்த்து மன உளைச்சல், தோல் தொடர்பான நோய்கள், வேறு சில நோய்கள், போதைப்பொருள் பழக்கம், சில வேதிப் பொருட்கள் ஆகியனவும் தலை முடி உதிர்வதற்கான பிறகாரணங்களாகும்.

## குழந்தைகளின் பால் பற்கள் ஏன் விழுந்து விடுகின்றன?



வளர்ந்து வரும் தாடை எலும்புகளில் 32 பற்களுக்கும் இடமளிக்க பற்கள் விழ வேண்டியது கட்டாயமாகின்றது. பின்னர் தோன்றப் போகும் இப்பற்கள் பெரிதானவை; பல ஆண்டுகளுக்கு உறுதியாக நிலைத்திருக்கப் போகின்றவை. குறைந்தது ஆறேழு மாதங்களில் சுமார் 20 பால் பற்கள் முளைக்கத் தொடங்குகின்றன. இவை அதற்கு இரண்டரை அல்லது மூன்றாண்டுகள் நிரம்பும்போது முழுமையாக வளர்ந்து விடுகின்றன. குழந்தை வளர வளர அதன் தாடை எலும்பும் பெரிதாக வளர்கின்றது. பின்னர் தோன்றப்போகும் அளவில் பெரிய நிலையான பற்களுக்கு இடமளிக்க இந்தப் பற்கள் தோன்றும்போதே நிலையான பற்களும் முளைக்கத் தொடங்குகின்றன என்பதே உண்மை. இப்பற்கள் வளர்கையில் பால் பற்களின் வேரைத் துண்டித்து விடுகின்றன. இதனாலேயே பால் பற்கள் விழ வேண்டியதாகிறது. முதலாவது கடைவாய்ப் பல் முளைக்கத் தொடங்கும்போது குழந்தையின் பால் பல் விழத் தொடங்குகிறது. இந்நிகழ்ச்சி குழந்தையின் ஆறாவது வயதில் நடைபெறுகிறது எனலாம்.

## பச்சை குத்துவதால் ஆபத்து!



பச்சை குத்திக் கொள்வது போன்ற நிரந்தர ஒப்பனைகளால் அழகு கெடும் என்று ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. அமெரிக்காவில் 'டாட்டூ' எனப்படும் பச்சை குத்திக் கொள்ளும் மோகம் அதிகமாக உள்ளது. குறிப்பாக ஆண்களை விட பெண்கள் இதில் ஆர்வம் காட்டுகின்றனர். 80இலட்சத்துக்கும் அதிகமான பெண்கள் பச்சை குத்திக் கொள்கின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த அழகுசாதனைப் பொருட்கள் மற்றும் தோல்நோய் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று, பச்சை குத்துதல் போன்ற நிரந்தர ஒப்பனைகளால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து சமீபத்தில் ஆய்வு நடத்தியது. பச்சை குத்துதல் மற்றும் அழகுக்காக அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 92 பெண்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் பத்தில் ஒன்பது பேர் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. நிரந்தர ஒப்பனை செய்து கொண்டவர்களுக்கு ஒப்பனை செய்து கொண்ட பகுதிகளில் அரிப்பு, தோல் உரிவது, வீக்கம், தோல் கடினத் தன்மை அடைவது போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இது போன்ற ஒவ்வாமைகளில் 68 சதவீதம் குணப்படுத்த முடியாதவை என்றும் தெரிய வந்துள்ளது. ஒவ்வாமை பாதிப்புக்களைத் தவிர்க்க இயற்கைக்கு விரோதமான நிரந்தர ஒப்பனைகளைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்று அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்துறை தெரிவித்துள்ளது.

## பாதிப்பை ஏற்படுத்தும் பாதரசம்...



ஓர் ஆண்டில்இந்தியாவில் மட்டுமே 2 ஆயிரம் டொன் பாதரசம் உலகின் வெவ்வேறு நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றது. உலகில் இன்று பயன்படுத்தப்படும் வெவ்வேறு விதமான 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களைத் தயாரிக்க பாதரசம் இன்றியமையாத பொருளாக மாறிவிட்டது. ஆனால் பாதரசம் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் சுற்றுச் சூழலில் மட்டுமல்ல, உடல் நலனிலும் தலைமுறை தலைமுறையாய் தொடர்பவை என்பது வேதனைக்குரிய உண்மையாகும்.

பாதரசம் நீர்ம நிலையில் உள்ள ஒரே கன உலோகம் ஆகும். பாதரசம் வெண்மை நிறமுள்ளதாக இருக்கிறது. இது இங்குலிகத் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு தூய்மையாக்கப்படுகின்றது. இது பளுமானி, அழுத்தமானி, தெர்மாமீட்டர் ஆகியவற்றால் நீர்மமாக நிரப்பப்படுகின்றது. பூச்சி மருந்துகள், எலக்ரோனிக் உபகரணங்கள், பல்புகள் ஆகியவற்றின் உற்பத்தியில் பாதரசம் பயன்படுத்தப்படுகின்றது.

பாதரசம் பல் மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகின்றது. மெர்க்குரிக் அயோடைட், தோல்நோய் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. மெர்குரிக் குளோரைட் கரைசலுடன் பொட்டாசியம் அயோடைட்டை சேர்க்க மெர்க்குரிக் அயோடைட் உருவாகின்றது.

பாதரசம் புற ஊதாக் கதிரின் மூலமாக செயற்படுகிறது. பாதரச ஆவி விளக்கின் குமிழில் உள்ள பாதரச ஆவியில் மின்சாரத்தைப் செலுத்த நீல நிற ஒளியைத் தருகிறது. இந்த விளக்கு மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படுகின்றது. மெர்க்குரிக் ஒக்சைட் கண் அழற்சிக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

பாதரச கூட்டுப் பொருட்கள் மருத்துவ பலன்களைக் கொண்டுள்ளன. எனினும் பாதரசம் விஷத்தன்மை மிக்கது. பாதரசத்தால் நரம்பு மண்டலம் பாதிப்படைகிறது. மேலும் சுவாச மண்டலமும் சிறுநீரக மண்டலமும் மெல்ல செயல் இழக்கும் அபாயமும் உள்ளன. பாதரசம் போன்று எத்தனையோ ஆயிரக்கணக்கான வேதிப் பொருட்கள் நன்மையையும் தீமையையும் கொண்டுள்ளன என்பதால் விஞ்ஞான உலகம் குழம்பிப் போய் உள்ளது.

# புதுமண்



நிமிடக்கதை

அன்று காலை ரோஜா செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தாள், பார்வதி. இதுதான் சரியான நேரம் என்று பேச்சை ஆரம்பித்தார், கணவர் சிவராமன்.

''என்ன பார்வதி...புதிதாக வைத்த ரோஜா செடிகள் துளிர்விடவில்லையே? ஒன்றுமே தேறாது போலிருக்கே?

''என்றார் என்னங்க நீங்க இவ்வளவு அவசரப்படுறீங்க ! ரோஜாச்செடி புது மண்ணில் வேர் விட்ட பின்பு தானே துளிர்க்கும். அதற்குள் அவசரப்பட்டால் எப்படி?''

உடனே சிவராமன், ''பார்வதி.... ரோஜா செடியே புது மண்ணில் துளிர்க்க இவ்வளவு அவகாசம்வேண்டி இருக்கிறதே! அதுப்போலத் தானே மனிதர்களும். நம்ம மருமகள் மீனா நல்லவள். கல்யாணமாகி வந்து, பத்து நாள்தான் ஆச்சு. அவள் நம் வீட்டுக்கு தகுந்த மாதிரி மாறலை, மாறலை என்று அடிக்கடி வருத்தப்படுறியே.... நம்ம உறவுமுறைகளை உணர்ந்து இந்த குடும்ப சூழலுக்கு தன்னை மாற்ற அவளுக்கு கொஞ்சக் காலம் ஆகலாம். அதுவரை நாம்தானே பொறுமை காக்கணும். அவளுக்கும் இது புது மண்தானே'' என்றார்.

தன் தவறை உணர்ந்தவளாக கணவரைப் பார்த்தாள் பார்வதி.

# சலித்துக் களைத்துப்....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதில் இவர்கள் அதீத அக்கறை காட்டுகிறார்கள். மக்கள் வருமானம் ஈட்டுவதற்கான தொழில் முயற்சிகளையும் அறிமுகப்படுத்தி வருகிறார்கள். இந்நிறுவனத்தின் முக்கிய பணிகளில் சில வருமாறு:

38 முகாம்களின்உட்கட்டமைப்புக் களில் பாரிய திருத்த வேலைகளை மேற்கொள்ளல்.

17 முகாம்களில் கிணறுகள், கைப்பம்பி கள், கழிவறைக் கூடங்கள் ஆகியவற்றை அமைத்தல்.

மகளிரும் இளையோரும் கூட்டாக மேற்கொள்வதற்கான தொழில் நடவடிக்கை களை மேற்கொள்ளல்.

இலங்கையில் அவசர உணவு நிவாரணம், புகலிடம், சுகாதார நலன்கள், ஆடைகள், ஆலோசனைகள், கல்வி வசதி ஆகியவற்றை வழங்குவதற்காக சி.ஆர்.எஸ் நிறுவனம் 350,000 டொலரை வழங்க முன்வந்துள்ளது. ஏற்கனவே இது இதற்கான வாக்குறுதியை வழங்கியுள்ளது.

இவற்றிற்கான ஏற்பாடுகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன.

சொந்த மண்ணில் வீடு வாசல்களை விட்டு வெளியேறி இந்தியா வந்து, அகதிகளாக தங்கியுள்ள அனிட்டா, நிலூப்பா ஆகியோர் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் எழுந்துள்ள, ஏகோபித்த ஒரே கேள்வி இதுதான்:

''சொந்த மண்ணில் கால் பதிக்க போதிய பாதுகாப்பான காலம் எப்போது புலரும்?''

இலங்கையில் மக்கள் இன்னும் இராக்காலத்தில் யுத்த முழக்கங்களை செவிமடுகிறார்கள். அவர்களின் கனவுகளும் இத்தாக்கங்களாகவே உள்ளன. அதே வேளை இந்தியாவிலுள்ள அகதிகள் திரும்புவதற்கான காலம் அதிவிரைவில் உதயமாகும் என்றும் கூறி விட முடியாது.

இந்தியாவிலுள்ள அகதிகளால் இலங்கை தேசிய கீதத்தைக் கேட்க முடியும். தொலைக்காட்சியில் பல காட்சிகளைக் காண இயலும். இவற்றின் வாயிலாக தம் முகாம்களுக்கு எதிரே அவர்களால் தம் அழகிய நாட்டையும் வாழ்வையும் மானசீகமாக பார்க்க முடியும். அதன் மூலம் தம் தாயகத்தைப் பற்றி இதுவரை அதைப் பார்த்திராத புதிய பரம்பரைக்கும் புகட்டுவதற்கான வாய்ப்புக் கிட்டும்.

1994ஆம் ஆண்டு முதல், சி.ஆர்.எஸ் நிறுவனம் இலங்கையில் செயற்பட்டு வருகின்றது. நீண்ட தவணை அபிவிருத்தித் திட்டங்கள், சமாதானத்தைக் கட்டி எழுப்புவதற்கான திட்டங்கள் ஆகியவற்றுக்கு இது ஆதரவு நல்குகிறது. மனிதராலும் இயற்கையாலும் விளைவிக்கப்பட்ட பேரிடர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக் கான அவசர, அவசிய நிவாரணப் பணிகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

சி.ஆர்.எஸ் நிறுவனம், பாதிப்புக்குள் ளான வறுமைப்பட்ட 99 நாடுகளில் செயலாற்றி வருகிறது. இன, மத, தேசிய வாதம் ஆகியவை பாராது மக்களுக்கான அடிப்படை தேவைகளை நிறைவு செய்வதில் இந்நிறுவனம் கூடிய அக்கறை செலுத்தி வருகின்றது.

# பேச்சுக்கான சிக்கலை....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

* இரு தரப்புக்களும் சம படைவலு வுள்ள - சம தரப்பாகப் பேச்சுக்களில் பங்குபற்றும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத் துக்கு நகர்த்துவதற்கு, போர்நிறுத்த உடன் படிக்கை முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்துகின்றனர். போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் மேற்சொன்ன மூன்று அம்சங்களும் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்று அவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

இந்த அம்சங்களை அனுசரணைத்தரப் பான நோர்வே முன்நிறுத்தி தனது முயற்சி களை முன்னெடுக்கும் பட்சத்தில் பேச்சுகள் உடனடியாக ஆரம்பிக்கும், பேச்சுகளுக்கு முன் இந்த அம்சங்களுக்கு இணக்கத்தை நோர்வே காணமுடியாது போனால் பேச்சுக்கான வாய்ப்பு நழுவிப் போய்விடும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

''பேச்சுக்கான அனுசரணைப் பணியை மீண்டும் ஆரம்பிக்க நோர்வே தயாராக உள்ளது. எமது அனுசரணைப் பணியை செய்யவேண்டுமென்பதில் நாம் அர்ப்பணிப்புடனும் அக்கறையுடனும் உள்ளோம். சம்பந்தப்பட்ட இரு தரப்புகளும் எமது பணியை மேற்கொள்ளுமாறு கேட்டவுடனேயே அர்ப்பணிப்புடன் ஈடுபடத் தயாராக இருக்கின்றோம்'' என்று நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹான்ஸ் போவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் அனுசரணைப் பணியை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கம் நோர்வேயிடம் கோரியுள்ளது எனச் செய்திகள் வந்துள்ளன. இதேபோன்று விடுதலைப் புலிகளும் நோர்வேயிடம் கோரியுள்ளனரா என்ற தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இலங்கைக்கு அவர் வரமுன்னரே இரு தரப்பின் பாதுகாப்பு உத்தரவாதங்களையும் நோர்வே கோரியுள்ளது. நோர்வேயின் தூதர் ஹான்ஸ் பிரஸ்கார் வன்னிக்கு இரு தடவைகள் மேற்கொள்ள இருந்த விஜயம் பாதுகாப்புக் காரணங்களுக்காக தடைசெய்யப்பட்டிருந்தது. இதேபோல் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் லார்ஸ் ஜொகான் சொல்போர்க்கின் விஜயமும் தடைசெய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஒரு தரப்பின் பாதுகாப்பு உத்தரவாதம் மட்டும் அல்ல இரு தரப்பின் பாதுகாப்பு உத்தரவாதத்தைப் பெற்றுத்தான் செல்லவேண்டிய இக்கட்டு நிலை நோர்வேக்கு ஏற்பட்டுள்ளது.

இரு தரப்புக்களின் பாதுகாப்பு உத்தரவாதத்தையும் பெற்று இலங்கைக்கு போவர் வந்து கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளுடன் பேசி சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவது என்பது உடனடியாகச் சாத்தியமான விடயமாகத் தெரியவில்லை.

இலங்கைக்கு போவர் வந்து சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் விவகாரம் சீராக முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே சகலரின் பிரார்த்தனையாக இருக்கின்றது.

சமாதான முயற்சிகள் ஒரு புறம் நடக்க, இந்த மாதம் தமிழர்களைப் பொறுத்தமட்டில் 'கறுப்பு ஜூலை'யை நினைவுபடுத்தும் மாதமாக அமைவதால், என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்ற அச்ச நிலை சகல தரப்புகளிலும் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் எனக் கருதி நாட்டின் பாதுகாப்பு அதிஉச்ச உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளா? மோதல்களா? எது நடக்கப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ✱

# அன்புள்ள அம்மாக்களே...!

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்திவிடும்.

10 ஆம் வகுப்பு மாணவி சந்திரிகா சொன்னதாவது, ''அம்மா எப்போதும் ராஜேஷ் (சகோதரன்) உடன் தான் இருப்பா. அவன் என்ன கேட்டாலும் வாங்கிக்கொடுப்பா. ஆனால், நான் கேட்டால் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லுவா. நண்பர்களோடு டூர் போகப்போறேன் என்று சொன்னதும் அப்பாவிடம் சொல்லி ரூ.10,000 வாங்கிக் கொடுத்தா. ஆனால், என்னைக் கல்லூரி காம்புக்குக் கூட போக அனுமதிக்க வில்லை. நான் அட்வர்டைசிங் துறையில் படிக்க ஆசைப்பட்டேன். ஆனால், அம்மாவோ நான் சமையல் மற்றும் தையல் வகுப்பில்தான் சேரணும் என்று கட்டாயப்படுத்தறா. எனக்கு அதில் விருப்பமே இல்லை...''

உடன் பிறந்தவர்களிடம் வெறுப்பை ஏற்படுத்திவிடும் இதுபோன்ற சம்பவங்களுக்கு பெற்றவர்களே காரணமாகிவிடுகிறார்கள் என்பதுதான் வேதனை.

### உணர்வுபூர்வமான ஆறுதல்

தகவல்தொடர்பில் உள்ள இடைவெளியும் பிரச்சினைக்கு முக்கிய காரணமாக உள்ளது. வேலைக்குப் போகும் பெண்களின் சூழ்நிலையில் இருந்துபார்த்தால், இல்லத்தரசிகளுக்கு சமமான நேரத்தை அவர்களால் குழந்தைகளுக்குச் செலவிட முடிவதில்லை.

அதே நேரத்தில் மகளுக்கும் அம்மாவிடமிருந்து, உணர்வுரீதியான ஆதரவும் அருகாமையும் மிகவும் அவசியப்படுகிறது. அந்த நேரத்தில் அம்மா, அலுவலகக்கூட்டம் அல்லது பார்ட்டியில் பிசியாக இருக்கிறாள். இது அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் இடைவெளியை அதிகரித்து விடுகிறது. மகளோ தனக்குத் தேவைப்படும் ஆறுதலை வெளியில் தேடத் தொடங்குகிறாள். அல்லது விரோதமனப்பான்மையை வளர்த்துக்கொண்டு அறைக்குள்ளே முடங்குகிறாள்.

ஆரம்பத்தில் இது சாதாரணமாகத் தோன்றினாலும், நாளடைவில் அதன் விளைவுகள் மோசமானவையாக மாறிவிடும். தவறான பழக்கங்கள், விரக்தி, வெறுப்பு, எரிச்சல், படிப்பில் கவனமின்மை, மனநோய் போன்றவை - பெற்றோர் அன்பும் ஆதரவும் இல்லாத குழந்தைளிடம்தான் அதிகம் காணப்படுகின்றன.

பிரச்சினையை எந்த அளவுக்கு நீங்கள் பொறுமையாக கையாள்கிறீர்களோ, அத்தனை விரைவில் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். உங்கள் மகளின் சிடுசிடுக்கும் மனோபாவத்துக்குப் பின்னால் அவளுடைய அந்தரங்க பிரச்சினை ஏதாவதும் இருக்கக்கூடும். அவள் மனதில் உள்ள அந்த பிரச்சினையைக் கண்டு பிடித்து தாங்க முடியாத வலியிலிருந்து அவளை மீட்டெடுங்கள். மனதிலுள்ள சுமை இறங்கிய பிறகு ஏற்படும் இலேசான தன்மையே உறவில் ஒரு புதிய தொடக்கத்தை ஏற்படுத்திவிடும்.

### தோழியாகிவிடுங்கள்

உங்கள் மகளுடன் நேரத்தைச் செலவிடுங்கள். அரட்டை அடிக்கவும், ஒன்றாக வெளியில் சென்று வரவும் செய்யலாம். ஷொப்பிங் செல்லுங்கள். மகளை ரிலாக்ஸ் செய்ய முயற்சி செய்யுங்கள். உறவுகளின் நெளிவு-சுளிவைப் புரிந்து கொண்டு அன்பையும் கோபத்தையும் முறையாகப் பயன்படுத்துங்கள்.

சிறு சிறு ஊடல்கள் காலப்போக்கில் நிரந்தர தழும்புகளாக நிலைத்துவிட அனுமதிக்காதீர்கள். உங்களுடைய நிலையிலேயே கடைசிவரை இருக்க நினைப்பது தவறு. உறவுகளில் வெற்றி தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை. பல சந்தர்ப்பங்களில், உங்கள் பிடிவாதத்தை விட்டுக் கொடுத்து உங்களால் நினைத்ததை சாதித்துக் கொள்ள முடியும். அப்புறம் அம்மா- மகள் இடையில் சண்டை அல்லது கோபம் எங்கே இருக்க முடியும்?

எந்த நிலையிலும், மகளுக்கும் உங்களுக்கும் தகவல் தொடர்பு நின்று விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். வளரும் இளம் பருவத்தில் உங்கள் மகளுக்கு ஓர் உண்மையான தோழி தேவைப்படுகிறாள். ஆக, நீங்களே அந்தத் தோழியாக மாறி விடலாமே.

நேரம் கிடைக்கும்போது உங்கள் நகைச்சுவை உணர்வைப் பயன்படுத்துங்கள். ஜிம், யோகா, ஏரோபிக்ஸ் போன்ற வகுப்புகளில் ஒன்றாகச் சேர்ந்து பயிற்சி செய்யலாம். நீச்சல் மற்றும் நடனப் பயிற்சிகளும் உங்கள் நெருக்கத்தை அதிகரிக்க உதவும்.

மகளின் தினசரி வேலைகள் மற்றும் அவளுடைய விருப்பங்களில் ஆர்வம் காட்டுங்கள். அவளுடைய உணர்வுபூர்வமான தேவைகளைப் புறக்கணிக்காதீர்கள்.

குழந்தைகளிடையில் பாரபட்சம் பார்க்காதீர்கள். அவர்களுக்குத் தேவையான நேரத்தைக் கொடுங்கள். இந்த வயதில் அவளுக்கு அன்பு மற்றும் அரவணைப்புடன் கூடிய வழிக்காட்டுதல் தேவை என்பதை நினைவில் வைத்திருங்கள். அவளுக்கு ஆலோசனை சொல்லும் தோழியாக இருங்கள். மாறாக கடுமையான ஆசிரியராக இருந்து குடும்ப அமைதிகெடுவதற்கு நீங்களே காரணமாகிவிடாதீர்கள்.

# என் விழியில் தூங்கிய நினைவுகள்....

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய நல்ல ஹைக்கூ குட்டிக்கவிதைகளும் நூலில் அடக்கமாகியுள்ளன.

கவிதைகள் அச்சுவாகனம் ஏற்றப்படுகின்றபோது எழுத்துப்பிழைகள் ஏற்படுகின்றன. அவற்றைக் கோவைப்படுத்தும் தவறான முறைகளின் காரணமாக கருத்துபிறழ்வையும் வெளிப்படுத்துவனவாகிவிடுகின்றன. பல கவிஞர்கள் இந்த விசயத்தில் கோட்டை விடுகின்றார்கள். ரிஷானாவும் அச்சுவாகனமேற்றும் அவசரத்தில் இவற்றைக் கோட்டை விட்டுவிட்டாரோ என்று தோன்றுகிறது. கவிதை சிறந்த கருத்துக்களால் கனதியாகி விட்டிருந்தாலும் இத்தகைய அவசரத்தில் படைப்புகள் தமது தனித்துவத்தை இழந்துவிடும் நிலை ஏற்படுகின்றது. ஆற்றலும், நல்ல உணர்வும் மிக்க ரிஷானா கனதியான கவிதைகளை இத்தகைய தவறுகளின் மூலம் தனது தனித்துவத்தை இழக்க வழிவகுத்துக்கொள்ளக்கூடாது. அச்சாக்கும்போது அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

ரிஷானாவின் கன்னிமுயற்சி வரவேற்பை நிச்சயமாகப்பெறும். இல.229/2, கரகொடை எட்டியாந்தோட்டை என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு நூலினை பெற்றுக்கொண்டு இளம் கவிஞருக்கு உற்சாகம் அளிப்பீர்களாக.

# அந்த மூன்றுநாட்களில்....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிலும் குழந்தை வேண்டாம் என்றுஅடிக்கடி கருச்சிதைவு செய்துக்கொள்ளும் பெண்கள்தான் மாதவிடாய் நேரத்தில் அதிக இடுப்புவலிக்கு ஆளாவார்கள்.

இதைத் தவிர்க்கவேண்டுமெனில் திருமணமான பெண்கள் குழந்தை பெற்றவுடன் அடுத்த குழந்தைக்கு இடைவெளி விடுவதோடு அதற்கேற்ற பாதுகாப்பு நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சில பெண்களுக்கு மாதவிடாய் நேரத்தில் கால்வலி அதிகம் இருக்கும். அதிலும் சிலருக்கு இடுப்பிலிருந்து கணுக்கால் வரை வலியிருக்கும். இது மாதிரியான நோய்கள் இந்த நேரத்தில் வருவது சகஜம்தான். நல்ல சத்தான உணவு எடுத்துக்கொண்டாலே இவற்றில் பல பிரச்சினைகளை நீங்கள் தவிர்க்க முடியும்.

# இருள் மறைத்த தீபம்....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

10000ரூபாய் மதிப்புள்ள ராடோ கடிகாரம், செல்வியின் கழுத்தில் இருந்த நெக்லஸ், கம்மல், மூக்குத்தி எல்லாம் மிஸ்ஸிங்.

''எங்கக்கிட்டே கொள்ளையடிச்சிட்டாங்க...'' கதறினார் ஜம்புலிங்கம்.

அதுமட்டுமில்லை வீடும் சூறையாடப்பட்டிருந்தது. அலுமாரி உடைக்கப்பட்டு, மகள் திருமணத்திற்காக வைத்திருந்த நகைகளும் 50000 ரூபாய் பணமும் கொள்ளை போயிருந்தன.

''என்ன நடந்தது மிஸஸ் ஜம்புலிங்கம்?'' அதிர்ச்சியோடு கேட்டேன்.

சில நொடிகள் தலையில் கை வைத்தபடி உட்கார்ந்திருந்த செல்வி, ''நேற்று ராத்திரி மதனும் அபர்ணாவையும் டின்னருக்கு கூப்பிட்டிருந்தோம். அவங்க 8.30 மணிக்கு வீட்டுக்கு வந்தாங்க. எல்லோரும் டைனிங் டேபிளில் சாப்பிட்டுக்கிட்டிருந்தோம். திடீர் என்று தலைசுத்தறது போலிருந்தது. அதுக்கப்புறம் காலையில மயக்கம் தெளிஞ்சு பார்க்கும்போது இங்கே இருந்தோம். மதனையும், அபர்ணாவையும் காணோம்'' என்றாள் தடுமாற்றத்துடன்.

செல்வி பேசி முடித்ததும் அபர்ணாவின் அழகிய முகம் எனது மனக்கண்ணில் வந்து நின்றது.

''அபர்ணா நீ சிக்கலான ஆபத்தான பெண்தான் ...உன்னை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை'' என்று முணுமுணுத்தேன்.

# ஜூலை 1983....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்று தெரிவித்தார்.

அத்தோடு மட்டும் அவர் நிறுத்திக்கொள்ளவில்லை. அவர் மேலும் இவ்வாறு கூறினார். 'சிங்கள மக்களை அமைதிப்படுத்துவதற்காகவும் அவர்களுடைய இயல்பான வேட்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும் ஒரு புதிய சட்டத்தை நான் அமுலாக்க இருக்கின்றேன். இப்புதிய சட்டத்தின் பிரகாரம் நாட்டுப் பிரிவினை கோரும் எவரும் இந்த நாடாளுமன்றத்தில் அங்கத்தவர்கள் ஆகமுடியாது. அதுமட்டுமல்ல, நாட்டுப் பிரிவினை கோரும் எந்த ஒரு கட்சியும் தடைசெய்யப்படும். இனிமேல் நாட்டைப் பிரிப்பது குறித்து எவரும் சட்டரீதியாகச் செயல்படமுடியாது'.

அன்புக்குரிய வாசகர்களே! இருபத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்பு சிங்கள-பௌத்த பேரினவாதிகளின் வன்முறைச் செயல்களால் தமிழினம் எரிந்துகொண்டிருந்த நிலையில் சிங்கள ஜனாதிபதி கூறிய வார்த்தைகள் தாம் இவை. இதுகுறித்து தமிழ்நேசன் இணையத்தளம் பின்வருமாறு குறிப்பிட்டது.

'சிங்கள ஜனாதிபதி தமிழர்களின் நிலை குறித்து கவலை தெரிவிக்கவில்லை. - ஏனென்றால் தமிழர்கள் குறித்து அவர் கவலைப்படவில்லை. ஸ்ரீலங்கா ஜனாதிபதி தமிழர்களுக்கு நேர்ந்ததையிட்டு அனுதாபம் தெரிவிக்கவில்லை. ஏனென்றால், ஸ்ரீலங்கா ஜனாதிபதி தமிழர்கள் மீது அனுதாபம் கொண்டிருக்கவில்லை.ஸ்ரீலங்கா ஜனாதிபதி தமிழர்களுக்கு நேர்ந்த கதி குறித்து பேரதிர்ச்சி தெரிவிக்கவில்லை. ஏனென்றால், அன்று தமிழர்களுக்கு ஏற்பட்ட கதி ஜனாதிபதிக்குப் பேரதிர்ச்சிதரக்கூடியதாக இருக்கவில்லை.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட நிலை குறித்து அதிர்ச்சியோ, அனுதாபமோ, வருத்தமோ தெரிவிக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டு சர்வதேச ஜூரர்கள் கமிட்டி டிசம்பர் 83 இல் ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தது.

1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வெளிவந்த Economist சஞ்சிகையும் இதே கருத்தைத்தான் பிரதிபலித்தது. உலகளாவிய வகையில் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகக் கண்டனங்கள் எழுந்தன. ஸ்ரீலங்காவின் சிங்கள பௌத்த மேலாண்மையை மட்டும் உறுதிசெய்கின்ற ஸ்ரீலங்காவின் அரசமைப்புக் குறித்து கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

ஜூலை 83 இனக்கலவரத்தில் கோரமும், அழிவும் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டு மக்கள் முன் வைக்கப்படவில்லை.இதைப்பற்றிச் சிந்திக்கும்போது, முன்பு உலகநாடுகளால் 'பயங்கரவாதி' என்று அழைக்கப்பட்டுப் பின்னாளில் உலகத் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்பட்ட நெல்சன் மண்டேலாவின் கூற்று ஒன்று எமது ஞாபகத்திற்கு வருகிறது. வேறு ஒரு சந்தர்ப்பத்தில் நெல்சன் மண்டேலா கூறியது ஜூலை 83 இனக்கலவரத்திற்கு பொருத்தமாகவே அமைந்துள்ளது.

நெல்சன் மண்டேலா கூறியது இதுதான்!

'மன்னிக்கவும் மறக்கவும் வேண்டுமானால் என்ன நடந்ததென்ற முழு உண்மையும் எமக்குத் தெரிய வேண்டும்!'

இதுவரை நாம் தர்க்கித்த கருத்துகள் ஊடாக 1983 ஆம் ஆண்டு ஜூலை - தமிழின அழிப்பு கொண்டுவந்த எதிர்விளைவுகளைச் சுட்டிக்காட்ட விளைகின்றோம். சிங்களப் பௌத்தப் பேரினவாதம் எதிர்பார்த்திராத விளைவாக தமிழர்கள் உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தார்கள். இந்தியா வெளிப்படையாக, இலங்கைப் பிரச்சினையில் தலையிட நேர்ந்தது. சர்வதேச மயப்படுத்தப்பட்டிராத தமிழீழ விடுதலைப் போராட்டம் பின்னாளில் சர்வதேச மயப்படுத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டம் புதிய பரிமாணத்தின் ஊடாக கூர்மையடைந்தது. இவை ஜூலை 83 கொண்டுவந்த எதிர்விளைவுகளாகும்.

தமிழ்மக்களை நசுக்கி அழித்து விடுவதற்கு எண்ணியிருந்த சிங்களப் பௌத்தப் பேரினவாதம் இத்தகைய எதிர்விளைவுகளை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், இன்றும் இருபத்திநான்கு ஆண்டுகளுக்குப் பின்னரும் சிங்களப் பௌத்த பேரினவாதம் 1983 சம்பவங்களை நோக்கித்தான் நகர்ந்துகொண்டு போகின்றது. அன்றைய சூழலை தாம் கையாண்டதுபோல் இன்றைய சூழல் இல்லை என்பதும் அன்றைய சூழலைக் கையாண்டதுபோல் இன்று கையாள முடியாது என்றும் மகிந்த ராஜபக்ஷவிற்கு இன்னும் புரியவில்லை.

அன்று சர்வதேசத்துக்கு இலங்கையில் என்ன நடக்கின்றது என்ற விவரம் சரியாகத் தெரிந்திருக்கவில்லை. இன்று சர்வதேசத்துக்கு விவரங்கள் நன்கு தெரியும். அன்று இந்தியா தடுமாறியதைப்போன்று இன்று சர்வதேசமும் தடுமாறிக்கொண்டு நிற்கின்றதே தவிர, சிங்கள தேசத்தின் உண்மைநிலையைச் சர்வதேசம் புரிந்துகொண்டுதான் உள்ளது. சர்வதேசம் தன்னுடைய முடிவுநிலையில் குழப்பமாக இருக்கிறதே தவிர, நிலைவரத்தைச் சரியாக அறிந்துவைத்துத்தான் உள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காகத் தன்னால் அழைத்து வரப்பட்ட அனைத்துலக வல்லுநர்கள் குழுவோடும் ஸ்ரீலங்கா அரசு முரண்பட்டு நிற்கின்றது. ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் செயலற்ற தன்மையைச் சுட்டிக்காட்டிக் குற்றம்சாட்டிய அனைத்தலக வல்லுநர்கள் குழுவின் தலைவர் பி.என்.பகவதியோடும் ஸ்ரீலங்கா அரசு பிரச்சினைப்பட்டு நிற்கின்றது. தங்களால் அழைத்து வரப்பட்டவர்களோடும் முரண்படுகின்ற சிங்கள அரசு, தமிழர்களின் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கும்.

இன்று - இந்த 2007 ஆம் ஆண்டு - ஸ்ரீலங்காவின் அரச அதிபராக விளங்குகின்ற மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனைகளும் அவருடைய முன்னோடிகளின் சிங்கள - பௌத்த பேரினவாத சிந்தனை பிரதிபலிக்கின்றன. மகிந்த ராஜபக்ஷவின் முப்படைகள் இன்று வெளிப்படையாகவே தமிழர்களைக் கொன்று குவித்து வருகின்றன. ஈழத் தமிழினத்தின் மீது வலிந்து ஒரு பாரிய போரைத் திணிப்பதற்காக இன்று ஸ்ரீலங்கா அரசு தமிழினத்தின் மீதான தனது படுகொலைகளை முடுக்கிவிட்டிருக்கின்றது.

தற்போதைய காலச்சூழ்நிலை மாற்றத்தையும் விளங்கிக்கொள்ளாமல் தமிழீழ விடுதலைப் புலிகளையும் புரிந்துகொள்ளாமல் பழைய நிலைக்கே போவதற்கு மகிந்த ராஜபக்ஷ முயற்சிக்கின்றார். 1983 இல் ஏற்பட்ட எதிர்விளைவுகள் போல் 2007 இலும் எதிர்விளைவுகள் ஏற்படும். தமிழீழ விடுதலைப் போராட்டம் மேலும் புதிய பரிமாணத்தை அடையும். அது சுதந்திரத் தமிழீழமாக அமைஅயும்.

நன்றி: தமிழ்நாதம்.

# ராசி பலன்

09-07-2007 முதல் 15-07-2007

பொ.சந்திரலிங்கம்

## மேஷம்

அச்சுவினி, பரணி,கார்த்திகை 1

காரியத்தடையுண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். வசிப்பிடத்தில் அமைதி நிலவும். தாய் நலம். தந்தை நலமில்லை. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். திருமண வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீகபக்தி குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம்குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்கள் உதவுவர்

## ரிஷபம்

கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம்1, 2

காரிய சித்தியுண்டு. பணப்பற்றாக்குறை நிலவும்.உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## மிதுனம்

மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1, 2, 3

காரியசித்தியுண்டு. குறுந்தூரப் பிரயாணம் அமையும். பணம் இருக்கும். உறவினர், அயலவர்கள் தொல்லைதரக் கூடும். வீட்டில் அமைதிஇருக்காது.மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் உண்டு. பகைவர் நட்பாகலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பெற்றோர் நலமில்லை. அதிர்ஷ்டம் இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## கடகம்

புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்யார். பெற்றோர் நலம். வீட்டில்அமைதி நிலவும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு.தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## சிங்கம்

மகம், பூரம், உத்தராடம் 1

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் தூரவிலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரியசித்தியுண்டு.பிரயாணவாய்ப்பு உண்டு.பணம்இருக்கும்.உறவினர், அயலவர் உதவி செய்வர் .பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறைகாட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது.தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறை வரவு-செலவு சமனாக இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதிஇருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம்காட்டுவர்.உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம்.அதிர்ஷ்டம் இருக்காது. தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத்தடை இருக்கும். வாரப்பிற்பகுதியில் பிரயாணம் அமையலாம். பணம் இருக்காது. உறவினர் அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி குறையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில்முன்னேற்றம் குறையலாம்.எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## மகரம்

உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்1,2

காரியத்தடை இருக்கும். வார இறுதியில் பிரயாண வாய்ப்பு உண்டு .பணப் பற்றாக் குறைநிலவும்.உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம் வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கும்பம்


அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. நண்பர்கள் பகை கொள்ள கூடும்.

## மீனம்

பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி

காரியசித்திஉண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக் கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.



துருக்கியின் இஸ்தான்புல் நகரில் மணல் சிற்ப விழா நடக்கிறது. 20இற்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் இதில் பங்கேற்று சிற்பங்களைச் செதுக்கிவருகின்றனர். உக்ரைன் நாட்டு கலைஞர் அழகிய பெண் வடிவத்தைச் செதுக்குகிறார்.

# சக்தி பரிசளிப்பு நிகழ்வு



தரமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தமிழில் வழங்குவதில் சக்தி ரி.வி. தொடர்ந்தும் முன்னிலையில் திகழ்ந்து வருகிறது. நிகழ்ச்சிகளில் நேயர்களின் பங்குபற்றுதலை ஊக்குவிக்க பலவகையான பரிசுத்திட்டங்களும் சக்தி ரி.வியால் நடத்தப்பட்டு வருகின்றன.
அண்மையில் நடத்தப்பட்ட 'அஞ்சலி' தொடர்நாடகப் போட்டி நிகழ்ச்சியில் பரிசு வழங்கும் வைபவம் மகாராஜ தலைமையகத்தில் இடம்பெற்றது. வைபவத்தில் எம்.ரி.வி. நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் லக்ஷ்மி அமரசேகரா பரிசு வழங்குவதை படத்தில் காண்க.





ஜப்பானைச் சேர்ந்த நகை தயாரிப்பு நிறுவனம் 500 கிராம் தங்கத்தைக் கொண்டு நீச்சல் உடையை தயாரித்துள்ளது. 24கேரட் தங்கத்திலான இந்த உடையைத் தயாரிக்க 32நாட்கள் ஆனதாம். இந்த நீச்சல் உடையின் விலை 37 லட்சம் ரூபாய். நீச்சல் உடை அல்லாத முழு உடையும் தயாரிக்கப் பட்டுள்ளது. இதன் விலை 2 கோடியே 25 லட்சம் ரூபா.




ஜேர்மனியில் உள்ள விலங்குகள் சரணாலயத்தில் தோற்றத்தில் பாதி குதிரை பாதி வரிக் குதிரை உடைய இது கலப்பின முறையில் உருவான ஒரு மிருகம் ஆகும்.


HOTEL WESTEERN PVT LTD




உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www.hotelwesteern.com





பிலிப்பைன்ஸில் முழுக்க முழுக்க மின்சக்தியால் இயங்கக்கூடிய சிறியவகைக் கார்கள் பயணிகள் வசதிக்காக விடப்பட்டுள்ளன. ஒரு முறை மின்னேற்றம் செய்தால் 120 கி.மீ.வரை இதில் பயணம் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.


## பருக்களை நீக்குவதற்கு



பாதுகாப்பான
உடனடி நிவாரணம்
1 வாரத்தில் சிறந்த பலன்

பருக்களை மற்றும் கறுப்பு நிற அடையாளங்களை நீக்கி மிருதுவான பளபளக்கும் சருமத்திற்கு

ஆயுர்வேத திணைக்களத்தின் அங்கீகாரத்துடன்

பிம்பல் கியோ
ஹேர்பல் கிரீம்




இந்தியாவில் தயாரிக்கப்பட்டது
- 100% மூலிகைச்சாறுகள் கொண்டது
- பக்கவிளைவுகள் இல்லை
- பருக்களை ஆரம்பத்திலேயே நீக்கி சருமத்தை மிருதுவாக மாற்றி பளபளக்க செய்கிறது.

சகல பாமசிகள் மற்றும் சுப்பர் மார்க்கட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

லங்கா ஹேர்பல் பிரைவேட் லிமிட்., இல. 14, புகையிரத நிலைய வீதி, தெகிவளை.
தொலைபேசி : 5432100 5432171 அழையுங்கள் : 0777-395194.



GOOD VALUE Eswaran

SOWBAGHYA Hotel Equipments




GOOD VALUE ESWARAN (PVT) LTD.
V.T.V Courts Apartment Complex, Shop No: B1,426/33
K Cyril C Perera Mw. (Bloemendhal Road) Colombo- 13
Tel No: 2437775, 2435842 Fax: 2448720
email: goodvalue@eswaran.com


இப்பத்தியக்ை , கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2007, ஜூலை 14 ஆம் திகதி வெளியிடப்பட்டது